




# யாதுமாகி நின்றாய்!

## சிறுகதைத் தொகுப்பு

பவள சங்கரி


யாதுமாகி நின்றாய்


யாதுமாகி நின்றாய்!
சிறுகதைத் தொகுப்பு
பவள சங்கரி



## சிறுகதைத் தலைப்புகள்

1. மோட்டூர்க்காரி

2. என்ன ஆச்சு சுவாதிக்கு?

3. எரிதழல் கொண்டு வா!

4. குடும்ப விளக்கு

5. பாசச் சுமைகள்!

6. யாதுமாகி நின்றாய்!

7. வெளுத்ததெல்லாம் பால்தான்!

8. கனிகரம்

9. நிழல் தேடும் நிஜங்கள்

10. பேராண்மை

11. குரங்கு மனம்

12. பசுமையின் நிறம் சிவப்பு

13. சுமைதாங்கி சாய்ந்தால்!

14. முற்பகல் செய்யின்

15. கேத்தரீனா

# 1.மோட்டூர்க்காரி!

முன் குறிப்பு: கீழ்கண்ட இந்த கதை முற்றிலும் என் கற்பனையே. எந்த குறிப்பிட்ட நபரையும் கருத்தில் கொண்டு எழுதவில்லை என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மெல்ல மொட்டவிழும் மலர்களின், நாசியை நிறைக்கும் சுகந்த மணம். மென்மையாக பூபாளம் இசைக்கும் காதல் பறவைகளின் கீதம். மணி 5.15. அலார பென்குயினின் தலையில் செல்லமாகத் தட்டிவிட்டு, எழுந்திருக்கலாமா என்று யோசிக்கும்போதே வேண்டாம் என்று சொல்ல நொண்டிச் சாக்கைத் தேடுகிறது மனம். இன்று ஒரு நாள் போகாமல் விட்டால்தான் என்ன ஆகிவிடப் போகிறது? சரியான காரணமில்லாமல் ஒரு நாள் சோம்பலில் விட்டால்கூட உடம்பு அந்த சுகத்தைப் பழகிவிடுமோ..? இளங்காலைப் பொழுதின் ரம்மியமான சூழலில் சுகமான உலாவைக்காட்டிலுமா இந்தத் தூக்கம் பெரிதாகிவிடும். அன்பு கணவர் அருகண்மையில், ஆனந்தமான நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார். இரவு வெகுநேரம் , ஒரு சிறிய பந்திற்காக, 22 வல்லுநர்கள் ஆடி, ஓடி விளையாடும் அரிய காட்சியைக் காண தன் நித்திரையைக்கூடத் தியாகம் செய்த உத்தமர். சூதாட்டக் குழுவினரால் ஏற்கனவே யார் யார் எவ்வளவு ரன் அடிக்க வேண்டும், எப்போது அவுட் ஆக வேண்டும் என்று திட்டமிட்டு களமிறக்கியிருக்கும் ஆட்டக்காரர்களின் ஆட்டத்தைக்கூட போலியாக இரசித்து, கைதட்டி ஆரவாரம் செய்துகொண்டு உட்கார்ந்திருக்கும் தாராள மனசுக்காரர். இப்பொழுதுதான், சாக்லேட் உண்ணும் மழலையைப் போல புன்னகை தவழும் இதழ்களுடன், [ஏதாவது கனவு கண்டு கொண்டிருப்பாரோ?] உறங்கிக் கொண்டிருக்கிறார். இவரை எழுப்பி வேலைக்காகாது என்று பூனையைப்போல மெதுவாக ஓசையின்றி வெளியே சென்று, அடுத்த அறையின் ஓய்வறையில் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தயாராகிவிட்டேன். அடுத்த 45 நிமிட, வழமையான மூன்று கிலோமீட்டர் நடைப்பயணம்.

ஐந்து வயது குழந்தை உலகின் அத்தனை நாட்டுக் கொடிகளின் விவரங்களையும் கேட்டவுடன் சற்றும் யோசிக்காமல் டக்கென்று சொல்லுகிறது. ஒரு குழந்தை திருக்குறளில் எந்தக் குறளின் முதல் வார்த்தையைச் சொன்னாலும் அந்த முழுக் குறளுடன், அதிகாரம் மற்றும் எத்தனாவது குறள் என்ற விவரம் வரை பட்டென்று போட்டு உடைக்கிறது.. இப்படி பல குழந்தைகள் தங்கள் திறமைகளை காட்டிக் கொண்டிருந்தன ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில். நேற்று பார்த்த அந்த நிகழ்ச்சி இன்னும் கண்ணிற்குள். மனம் ஆச்சரியமாக இது எப்படி சாத்தியம் என்று யோசிக்கிறது. தோழி ஒருத்தி பேசிக்கொண்டிருக்கும்போது இதெல்லாம் முற்பிறவியின் தொடர்பு என்று கூறியது நினைவிற்கு வந்தது. எந்த ஆதாரமும் இல்லாத இந்த செய்தியை நம்ப முடியவில்லை. அவளும் எங்கெங்கோ நடந்த சம்பவங்களை கோடிட்டு காட்டிக் கொண்டிருந்தாள். இருந்தாலும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் அறிவியல் ஆதாரங்களுக்கும் மீறி சில குழந்தைகள், ஞானப்பால் குடித்து திருவாய் மலர்ந்தருளிய பால்மனம் மாறா பாலகன் திருஞானசம்பந்தர் முதல் மூன்று வயதில் எண்ணற்கரிய சாதனைகள் செய்து காட்டும் இன்றைய குழந்தைகள் வரை அனைத்தையும் பார்க்கும்போது இது எங்கனம் சாத்தியம் என்று ஆச்சரியம் ஏற்பட்டாலும் அதன் பின்புலத்தில் ஏதோ ஒரு சக்தி இருப்பதை மட்டும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது. எண்ண ஓட்டங்கள் எங்கெங்கோ பயணிக்க ஆரம்பித்த வேளையில் , “ஏம்பா.. இப்புடி சொன்னா கேக்கமாத்தீன்னு அதம் (அடம்) புடிக்கறே.. எங்கூரு மோட்டுருக்கு போலாம் வாப்பா.. ஏன் தெனம்.. தெனம் இப்புடி கஸ்டப்படறே..” மழலைக்

குரலில் குழந்தை சத்தமாகச் சொல்வது காதில்விழ நிகழ்காலத்திற்கு வந்தேன். தனித்தனி மாளிகைகள் அழகாக கட்டப்பட்டு போர்டிகோ, தோட்டம் என சகல வசதிகளுடன் இருக்கிற வீடுகள் நிறைந்த குடியிருப்பு அது. அன்றாடம் இதைத்தாண்டித்தான் என்னுடைய வழக்கமான, சோலையாய்க் குளிர்ந்திருக்கும் மைதானத்திற்குச் செல்ல முடியும். இந்த அழகிய மாட மாளிகைகளின் இடையில் இதற்கு சம்பந்தமே இல்லாமல் மிக சாதாரணமான, ஒரு சிறிய சமயலறை, சற்றே பெரிய பட்டாசாலை, அதையொட்டி ஒரு சின்ன தாழ்வாரம் என்று வரிசையாக மூன்று வீடுகள். கழிப்பறைகள் பொதுவானது. ஒரு வீட்டில் உரிமையாளர் குடியிருந்துகொண்டு மற்ற இரண்டையும் வாடகைக்கு விட்டிருக்கிறார். மாளிகைவாசிகள் இதை அப்புறப்படுத்த எத்தனையோ முயன்றும் அந்த வீட்டுக்காரர் மசியவில்லை. தன் தகப்பன் சம்பாதித்த சொத்து என்பதால் அதைவிட்டுத் தர மனம் இல்லையாம். எத்தனையோ சிரமங்களுக்கிடையே, அன்றாட கூலி வேலை செய்து கொண்டும் சொத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் வீட்டிலிருந்துதான் இப்படி ஒரு குரல். அந்தக் குழந்தை பேசுவதைக் கேட்டு சிரித்துக் கொண்டிருந்த தந்தை , ''போச்சுடா ஆரம்பிச்சுட்டியா தாயீ.. அடுத்தது எம் புருசன், மாமியார்னு ஆரம்பிச்சிடுவியே.. சந்திரா இங்க வாடி, இந்த மோட்டூர்க்காரியப் பாரு இன்னிக்கி காத்தாலயே ஆரம்பிச்சிப்போடிச்சி. கூட்டிட்டுப் போய் சமாதானப்படுத்து'' அடுத்து நடப்பதை தெரிந்து கொள்வதற்குள் அந்த இடத்தைக் கடந்துவிட்டாலும், மனம் என்னமோ அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தது. அவ்வளவு சின்ன குழந்தை கணவன், மாமியார் என்று பேச என்ன தேவை இருக்கும், அது எப்படி சாத்தியம் என்று வீடு திரும்பும் வரை அதே நினைவுதான். பின்பு அன்றாட கடமைகளை நிறைவேற்றுவதில் இந்த விசயம் அமிழ்ந்துவிட்டது.

அடுத்த இரண்டு நாட்கள் அந்த இடத்தைக் கடக்கும் போதெல்லாம் அந்தக் குழந்தையை கண்கள் தேடியது. அந்த வீடு பூட்டியே இருந்ததால் அந்த விசயம் மறக்க ஆரம்பித்தது. மூன்றாவது நாள் காலை அதே வீட்டில் அந்தக் குழந்தையின் அழுகை சத்தம். எதற்கோ அடம் பிடித்து அழுது கொண்டிருந்தது. தாய் சமாதானம் செய்து கொண்டிருந்தாள். ''விடிய, விடிய தூங்காமக்கூட இப்புடி அழுது ஆர்ப்பாட்டம் பண்றியே, உனக்கு நியாயமா இருக்கா கண்ணு இது'' என்று என்னமோ சொல்லியும் அந்தக் குழந்தை அழுகையை நிறுத்திய பாடில்லை. என் கால்கள் தானாக ஒரு நிமிடம் தயங்கி நிற்க, உடன் வந்து கொண்டிருந்த என்னவரோ, புருவத்தை உயர்த்தி என்ன என்பது போல பார்த்தார். ஒன்றுமில்லை என தலையை ஆட்டியபடி நடையை எட்டிப்போட்டேன். இது போன்ற விசயங்களில் சற்றே ஆர்வமுடையவர் என்பதால், கடந்த சில நாட்களாக இவர் வராதபோது நடந்ததைக் கூறினேன். ஆர்வம் பொங்கக் கேட்டவர் ஒரு புன்சிரிப்புடன் விட்டுவிட்டார்.

அடுத்த நாள் அந்த இடத்தை நெருங்கும்போதே என்னைவிட ஆர்வமாக அவர் பார்க்க ஆரம்பித்துவிட்டார். அந்தக் குழந்தை எதையோச் சொல்லி அனத்திக் கொண்டிருந்தது. அப்பாவும், அம்மாவும் பக்கத்தில் உட்கார்ந்து எதையோ புலம்பிக் கொண்டிருந்தனர். உள்ளேயிருந்ததால் எதுவும் சரியாகக் கேட்கவில்லை. பேசாமல் அந்த இடத்தை விட்டுச் சென்று வாக்கிங் முடிந்து திரும்பும் போது வழக்கமாகச் செல்லும் அடுத்தத் தெருவை

விடுத்து வந்த வழியே செல்லலாமே என்ற என் யோசனைக்குத் தடையேதும் சொல்லாமல் என்னவரும் வந்தார். அந்த வீட்டின் அருகில் வந்ததும், குழந்தையின் அழுகை சற்று ஓய்ந்திருந்தது. அப்பா வெளியில் உட்கார்ந்து டீ குடித்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த என்னவர், 'அட நம்ம மேஸ்திரியா.. இதுதான் உங்க வீடா. இத்தனை நாள் இந்தப்பக்கம் போறேன், இது தெரியலியே. நல்லாயிருக்கியாப்பா' என்று நலம் விசாரித்தார். நான் அவர் முகத்தைப் பார்க்க, அவரும் 'இவருதாம்மா, நம்ம கடையைக் கட்டிய மேஸ்திரி' என்றார். அதற்குள் குழந்தை மீண்டும் அழ ஆரம்பிக்க, 'அண்ணே ஒரு நிமிசம் அண்ணே.. குழந்தை அழுவுறா'. என் பார்வையைப் புரிந்து கொண்ட அவரும் குழந்தையை அப்படியே தட்டிக்கொடுத்து தூங்க வைக்கும்போது.. அவர், 'மேஸ்திரி அது வந்து.... 'என்று ஆரம்பிக்கும்போதே, அவர் ஆள்காட்டி விரலை வாயின்மீது வைத்து சத்தம் போட வேண்டாம் என்று சாடை செய்தார். குழந்தையைப் படுக்க வைத்துவிட்டு சத்தமில்லாமல் வெளியே வந்து 'சொல்லுங்க சார்..' என்றார்.

'அது ஒன்னுமில்லப்பா.. குழந்தைக்கு என்ன பிரச்சனை. ஏன் தினமும் அழுதுட்டே இருக்கா. ஏதோ மோட்டூர்னு வேற அடிக்கடி காதுல விழுதே.. தப்பா நினைக்காதப்பா.. இவ உன் குழந்தைதானே..?' என்றார்.

"என்ன சார், இப்படி கேட்டுட்டீங்க. எங்க குழந்தையேதான் சார். ஆசுபத்திரியில மாறக்கூட சான்ஸ் இல்ல.. ஏன்னா, சந்திராவுக்கு வீட்டிலதான் பிரசவம் ஆச்சு. அவ அம்மா வீட்டில பக்கத்துல குடியிருக்கிற நர்சம்மாதான் பிரசவம் பாத்துச்சு. நானும் அங்கதான் இருந்தேன். கோமதின்னு எங்க அம்மா பேரைத்தான் வச்சிருக்கேன். ஆனா இப்ப கொஞ்ச நாளா கோமதி பேச ஆரம்பிச்ச உடனே, என்னென்னமோ சம்பந்தமில்லாமல் பேசறாள். எங்க ஊரு மோட்டுரு, அங்க எங்களுக்கு பெரிய தோட்டம், பங்களா, கார், எல்லாம் இருக்கு, என்னை ஏன் இந்த சின்ன ஊட்டுல கொண்டாந்து வச்சிருக்கீங்க, என் புருசனையும், புள்ளையையும் பார்க்கணும்னு அழுது அடம் புடிக்கிறா. ஆரம்பத்துல குழந்தை ஏதோ உளறுதுன்னு நினைச்சு விட்டுட்டேன். போகப் போக இப்போல்லாம் ரொம்ப அடம் பிடிச்சி, சரியா சாப்பிடாம அழுதுகிட்டிருக்கறதுனால காயச்சல் வந்துடுது. அடிக்கடி உடம்பு நலங்கிப் போகுது. நேத்துகூட ஆஸ்பத்திரிக்குப் போய் ஊசி போட்டுக்கிட்டு வந்தோம். எதையோ பாத்து பயந்து கிடக்குதோன்னு தர்காவுல பாடமும் போட்டாந்தேன். இதோ பாருங்க நேத்து ராவெல்லாம் கண்ணே மூடல.. என்ன பன்றதுன்னே தெரியல.. மோட்டூர்ல, பரமசிவம் ஐயா ஊடுன்னா தெரியாதவங்களே இல்லேன்னு சொல்லுது. பெரிய பண்ணையார் ஊடு போல சொல்லுது. ஒரு நாளைக்கு 50 பேரு சாப்பிடுவாங்களாம். எங்களோட கொஞ்சமும் ஒட்டாம, எங்க ஊட்டையே கேவலமா பாக்குது. என்னத்தச் சொல்றது போங்க சார்" என்று சலித்துக் கொண்டவரிடம், என்ன பதில் சொல்வது என்று புரியாமல் மௌனமாக வந்து சேர்ந்தோம் இருவரும்.

வீட்டிற்கு வந்தும் அதே நினைவே என்னைச் சுற்றிக் கொண்டிருந்தது. வால்மீகி ராமாயணத்தில் ஸ்ரீராமர் மற்றும் சீதாப்பிராட்டியின் முற்பிறப்பின் ரகசியங்கள் பற்றி உத்தர

காண்டத்தில் வருவதாக என் பாட்டி சொன்னது சட்டென்று நினைவிற்கு வந்தது. பிருகு முனிவர், விஷ்ணு பகவானை பூமியில் மானிடனாக அவதரிக்க வேண்டும் என்று சாபமிட்டாராம். அதனாலேயே அவர் ஸ்ரீராமனாக அவதரித்து, அற்புதங்கள் பல புரிந்து வாழ்ந்தாராம். இதே போல ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என அனைவரின் முற்பிறவி பற்றிய சுவையான சம்பவங்களும் கேட்டிருந்த நினைவும் வந்தது. நம் இந்துமத தர்மப்படி, மனிதப் பிறவியில் ஒருவர் ஆற்றும் நல்வினை, தீவினைக்கேற்ப அடுத்த பிறவி அமைகிறது என்பதே. முக்தி அடையும் தத்துவமும் இதன் அடிப்படையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு அறிஞர்களான, எமர்ஸன், ஷெல்லி, மாஜினி, தோரோ, ஹென்றி ஃபோர்டு பிளேட்டோ, பித்த கோரஸ், லியனார்டோ டா வின்ஸி, பெஞ்சமின் ஃப்ராங்க்ளின், , சி.ஜே.ஜங், போன்றவர்களும் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கையான மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அன்னி பெஸண்ட் அம்மையாரின் 'ரீ இன்கார்னேஷன்' என்ற புத்தகமும் இது பற்றிய தீவிர ஆய்வுகளுடனான தத்துவார்த்த விளக்கம் அளிப்பதுதான். சமீபத்தில் வர்ஜீனியா பல்கலைகழகத்தின், ஐயான் ஸ்டீவன்சன் மற்றும் எட்கர் கேஸ் போன்ற விஞ்ஞானிகளின் ஆய்வும் இதனை உறுதிபடுத்துகிறது என்ற தகவல்களையும் இணையத்தின் மூலம் சேகரித்து வைத்துக்கொண்டு யோசித்துக் கொண்டிருந்ததில் பொழுது போனதே தெரியவில்லை. பரபரவென மதிய சமையலுக்குத் தயார் செய்து கொண்டிருந்தபோதுதான், அழைப்பு மணி அடித்தது. இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்று கதவைத் திறந்த போது, கோவையிலிருந்து என் ஒன்றுவிட்ட சகோதரர் வந்திருந்தார்.

மதிய சாப்பாடு முடிந்து பேசிக்கொண்டிருக்கும்போது, மோட்டூர் பக்கம் ஒரு பெரிய தோட்டம் விலைக்கு வந்திருப்பதாகவும், அதை வாங்கி அங்கே பண்ணை வீடு கட்டி தன்னுடைய ஓய்வு காலத்தைக் கழிப்பதற்கான ஏற்பாட்டை செய்யப் போவதாகவும் சொன்னார். அதோடு அந்த இடத்தைப் பார்த்து முடிவு செய்வதற்கு என் கணவரையும் உடன் அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தார். மோட்டூர் என்ற பெயரைக் கேட்டவுடனே, நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அர்த்தத்துடன் பார்த்துக்கொண்டோம். எங்கே என் கணவர் ஏதாவது மறுப்பு சொல்லிவிடப் போகிறாரோ என்று அவசரமாக, நானே 'ஆகா தாராளமாகப் போகலாமே, நானும் வருகிறேன் அண்ணா' என்று கூறிவிட்டேன். எப்படியாவது மோட்டூர் சென்று அந்தக் குழந்தை கோமதி சொன்னது அனைத்தும் உண்மையா என்று பார்த்து வர வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த எனக்கு இவ்வளவு சீக்கிரம் இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அடுத்து அவர் சொன்ன குறிப்பிட்ட அந்த நாளுக்கு இன்னும் 5 நாட்கள் இருக்கிறதே என்று மலைப்பாக இருந்தது. வாக்கிங் போகும் போதெல்லாம் இன்னும் அந்தக் குழந்தையின் புலம்பல் அவ்வப்போது கேட்கத்தான் செய்கிறது.

மோட்டூர் செல்லும் நேரம் நெருங்க, நெருங்க அப்படி ஒரு ஆர்வம், படபடப்பு. உண்மையாலுமே அப்படி ஒரு குடும்பம் அங்கு இருக்குமோ. குழந்தை கோமதி

சொன்னதுபோல பரமசிவம் என்ற ஒரு நிலக்கிழார் இருப்பாரோ.. தேடிப்போவது நகைச்சுவைக்குரிய விசயமாகத் தெரிகிறதோ.. ஒரு குழந்தையின் பேச்சை நம்பிக்கொண்டு இப்படி தேடி வந்திருப்பது சரியோ என்ற குழப்பமும் காரணம். என் அம்மா அடிக்கடி என் மகளைப் பார்த்து, போன ஜென்மத்தில் இவ பெரிய சமஸ்தானத்தின் வாரிசாக இருந்திருப்பாள். பாரு அவ, நடை உடை பாவனையெல்லாம் எப்படி இருக்குன்னு. என்று சொல்வதுகூட நினைவிற்கு வந்தது. வழியில் காரில் செல்லும்போது மெல்ல நான் உடன்வரும் காரணத்தைச் சொன்னபோது ஆச்சரியப்பட்ட என் சகோதரர் உடனே இந்த விசயத்தில் எங்களைவிட அதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்துவிட்டார்.

மோட்டூர், திருப்பத்தூர் வட்டம், பசுமையான வயல்வெளிகள் நிறைந்த பூமி. கள்ளங்கபடமற்ற வெள்ளந்தியான மனிதர்கள் வாழும் பூமி என்பதால் இயற்கை அன்னை மனம் மகிழ்ந்து செல்வச் செழிப்புடன் வைத்திருக்கிறாளோ என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு ஒரு காலத்தில் அத்துனை பசுமையாக இருந்த கிராமம். ஜமீன் எல்லாம் மறைந்து போனாலும் பண்ணையார்களாக இன்னும் அதே கௌரவத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களும் இருக்கின்றன. ஊரின் எல்லையைத் தாண்டியவுடனே அங்கு ஏதோ திருவிழா நடப்பது போன்று இருந்தது. ஆங்காங்கே தண்ணீர் பந்தலும், குழந்தைகளுக்கு பால் வழங்குதலும், அன்னதானமும் நடந்து கொண்டிருந்தது. என்னவாக இருக்கும் என்று யோசிக்கும்போதே, ''அன்னை சரஸ்வதி அம்மையாரின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினம்'' என்று பெரிய பதாகைகள் அலங்காரமாக நின்றிருந்தன. அதில் இருந்த பெண்மணி லட்சுமி கடாட்சமாக அன்னையே உருவாக அமர்ந்திருந்தார். கையெடுத்து கும்பிட வைக்கும் தோற்றம். செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பது போல இந்த அம்மாவின் நினைவு நாளில் கூட இத்தனை தான தர்மங்கள் செய்கிறார்களே, இந்த அம்மா உயிருடன் இருந்த போது எத்தனைப் பேருக்கு எவ்வளவு படியளந்திருக்குமோ என்று வாயார சொல்லிக் கொண்டே வந்தேன். யாரிடமாவது பரமசிவம் என்பவரின் வீடு எங்கிருக்கிறது என்று கேட்டுப் பார்க்கலாமா என்று தோன்றியது. தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் மொட்டையாக இப்படி போய் கேட்டால் சிரிப்பார்கள் என்றார் என்னவர்.

ஆனால் நடந்தது வேறு. நான் காரை விட்டு இறங்கி சுற்றுமுற்றும் பார்த்து யாரிடம் கேட்கலாம் என்று யோசிக்கும் போதே, ஒரு பெரியவர் அருகில் வந்து 'என்னம்மா யாரைப் பார்க்கணும்' என்று கேட்டார். நானும் சற்று யோசனையுடனே, 'வந்து.. பரமசிவம்.. ம்ம்.. பரமசிவம் ஐயா வீட்டிற்குப் போகணும்' என்றேன். உடனே அவர்,

'ஓ, பரமசிவம் ஐயா வீடுதானுங்களே, அதோ அந்த முக்கு திரும்பினா, பிரம்மாண்டமா நிக்குதே, அந்த பங்களாதாங்க. இதோ இந்த தண்ணீர்ப் பந்தல்ல எல்லோருக்கும் வேட்டி, சேலை கொடுத்துக்கிட்டு இருக்காரே அவர்தான் ஐயாவோட சீமந்தப் புத்திரன். தங்கமான புள்ளை. அம்மா இறந்த நாளை நினைப்பு வச்சு, இந்த அஞ்சு வருசமா எழை பாழைங்களுக்கு அத்தனை உதவி செய்யுற மகராசன்' என்று வாழ்த்தியபடி அந்தப்பக்கம் கைகாட்டினார்.

அங்கு, 20 வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன், அன்பே உருவாக, தன் தாயைப் போலவே முக அமைப்புடன், வெள்ளை வேட்டியும், சட்டையும் அணிந்து சிரித்த முகத்துடன் வரிசையில் நிற்பவர்களுக்கு வேட்டி, சேலை வழங்கிக் கொண்டிருந்தான். மெல்ல அவனை நெருங்கி, எல்லாவற்றையும் கொடுத்து முடிக்கும்வரை காத்திருந்து, அருகில் சென்று, 'தம்பி, என்ன விசேசம்' என்று ஒன்றும் தெரியாதது போல கேட்டோம். அவனும், ஐந்து வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்ட தன் தாயின் நினைவு நாளில் தன்னால் ஆன நற்காரியங்களை செய்து கொண்டிருப்பதாகக் கூறினான். அதற்கு மேல் என்ன பேசுவது என்று புரியாமல் சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு ஒன்றுமே பேசாமல் வந்து காரில் ஏறிக்கொண்டேன். என் சகோதரனும், கணவரும், இத்துனை ஆவலாக விசாரிக்க வந்துவிட்டு இப்படி எதுவுமே பேசாமல் திரும்பி வந்ததை ஆச்சரியமாகப் பார்த்து, 'ஏன் ஒன்றுமே பேசாமல் வந்துவிட்டாய்?' என்று கேட்டனர். என்ன சொல்ல முடியும், எப்படி சொல்ல முடியும். உன் தாய் நான்கு வயது குழந்தையாக ஒரு கட்டிடத் தொழிலாளி வீட்டில் வந்து பிறந்திருக்கிறாள் என்றா சொல்ல முடியும்? சொன்னால் ஒரு வேளை அந்த இளைஞனோ அல்லது அவனுடைய அப்பாவோ அந்தக் குழந்தையின் பேச்சைக் கேட்ட பின்பு நம்பினாலும் நம்பலாம். ஆனால் அதனால் என்ன பயன். இயற்கையை மீறி எந்த ஒரு காரியத்தையும் தன்னிச்சையாகச் செய்யும்போது அது பலவிதமான குழப்பத்தில்தானே வந்து முடியும். அப்படி அந்த விசயம் தெரிய வேண்டும் என்று விதித்திருந்தால் அது தானாக ஒரு நாள் வெளிவரும். அதுவரை நாமே தேவையில்லாமல் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாமே என்று சொன்னபோது அதுதான் சரியான முடிவு என்பதை அண்ணனும், கணவரும் ஏற்றுக் கொண்டதால் போன காரியத்தை முடித்துவிட்டு வீடு வந்து சேரும் வரை எல்லோரும் மௌனமாக மனதிற்குள் ஏதேதோ சிந்தனையுடனே வந்து சேர்ந்தோம்.

அடுத்த நாள் வாக்கிங் போகும்போது அந்தக் குழந்தையைப் பார்த்து பேச வேண்டும் என்று உள்ளம் துடித்தது. ஆனால் தொடர்ந்த கன மழையால் 4 நாட்களாக வாக்கிங் செல்ல முடியவில்லை அடுத்தொரு நாளில் போய் பார்க்கலாம் என்று ஆவலாக போன சமயம் அந்த வீடு பூட்டியிருந்தது. அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாதலால் விசாரிக்க முடியவில்லை. அதற்கு அடுத்த நாள் போனபோது பக்கத்து வீட்டில் இருந்த ஒரு பெண்ணிடம் மேஸ்திரி பற்றி விசாரித்தோம், அவர்கள் காண்ட்ரேக்டில் வடநாட்டு வேலைக்கு குடும்பத்துடன் சென்றுவிட்டதாகக் கூறினாள் அந்தப் பெண்.

ஏனோ மனதிற்கு அந்த பதில் நிம்மதியாக இருந்தது. எங்கே அந்தக் குழந்தையின் அழுகையைப் பார்த்து பரிதாபப்பட்டு எதையாவது உளறி விடுவோமோ என்ற அச்சத்தில் இருந்த எனக்கு இதுதான் தெய்வ சங்கல்பம் என்று புரிந்தது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிந்தது. அத்துனைப் பெரிய பரோபகாரியான பெண் இந்த ஏழை கூலித் தொழிலாளி வீட்டில் வந்து பிறந்ததற்கு ஏதோ உறுதியான காரணம் இருக்கும். என்றாவது ஒரு நாள் அது வெடித்து வெளியே வரும். உலகமே நிமிர்ந்து பார்க்கும் வகையில் அந்தப் பெண் ஏதோ சாதனை செய்யப் போகிறாள். ஆயிற்று இது நடந்து பத்து ஆண்டுகள். இன்னும்

பசுமையான நினைவுகளுடன் மோட்டூர்க்காரி என்று செல்லமாக அழைக்கப்பட்ட அந்தப் பெண் கோமதி பற்றிய செய்தி வரும் என்று வானொலி, தொலைக்காட்சி என பார்க்கும் பொழுதெல்லாம் உள்மனம் எதிர்பார்த்து காத்திருக்கிறது. என்றாவது அது நிகழும்போது கட்டாயம் உங்களுடனும் பகிர்ந்து கொள்கிறேன்!

## 2. என்ன ஆச்சு சுவாதிக்கு?

“சுவாதி.. சுவாதீம்மா.. என்னடா பன்றே. மணி 8.30 ஆகுது. ஸ்கூல் லீவுன்னா இவ்ளோ நேரமா தூங்கறது. எழுந்திரிச்சி வாம்மா. அம்மா, ஆபீஸ் போகணுமில்ல. நீ குளிச்சிட்டு சாப்பிட வந்தாத்தானே உனக்கு டிபன் குடுத்துட்டு நானும் நிம்மதியா கிளம்ப முடியும். வாடா குட்டிம்மா, ப்ளீஸ்.. என் தங்கமில்லையா நீ..”

ஒன்றும் பேசாமல் திரும்பிப் படுத்துக் கொண்ட அன்பு மகளின் போக்கு இந்த மூன்று நான்கு நாட்களாக வித்தியாசமாகத்தான் இருக்கிறது. எதைக்கேட்டாலும் மௌனம்தான் பதில். கலகலவென பேசித்தீர்க்கும் மகளிடம் இந்த குணம் ரொம்ப வித்தியாசமாகத்தான் இருக்கிறது. எல்லாம் வயசுக் கோளாறாக இருக்குமோ. இந்த வருசம் பிளஸ் டூ வேற. இப்படி இருந்தா எப்படி படிக்கப்போறாளோ. இந்த ஞாயிற்றுக்கிழமை அவளுக்குப் பிடித்த இடமான மாமல்லபுரம் ஃபிஷ்ஷெர்மேன்ஸ் கோவ்விற்கு [Fisherman cove] கூட்டிச்சென்று அவளிடம் மனம்விட்டு பேச வேண்டும். என்ன பிரச்சனைன்னு கேட்கணும். இதுக்கும் மேல காத்துக்கிட்டிருக்க முடியாதலால் பணிப்பெண்ணிடம் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். வங்கியின் உயர் அதிகாரியாகிய தானே நேரம் கழித்துச் செல்வது சரியாகாது என்பதால் மாருதியை விரட்டிக்கொண்டு போகவேண்டியதாகியது.

நகரின் மையப்பகுதியின் தலைமை அலுவலகம் என்பதால் எப்பொழுதும் கூட்டம் நிரம்பி வழியும். அதுவும் அன்று சனிக்கிழமை வேறு. பரபரவென மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் செயல்பட வேண்டும். இந்த நேரம் பார்த்து மொபைல் போனின் சிணுங்கல் வேறு. முழுவதும் அடித்து ஓயும் வரை எடுக்க முடியவில்லை. முக்கியமான ஒரு டாக்குமெண்ட்டை பாதியில் நிறுத்த முடியவில்லை. அதற்குள் மீண்டும் சிணுங்க ஆரம்பிக்க, யாராக இருக்கும், ஒரு வேளை சுவாதியாக இருக்குமோ. பார்ப்போம் முக்கியமா இருந்தா மட்டும் எடுக்கலாம் என்று கையில் எடுத்தாள். வீட்டிலிருந்தான் கால் வந்திருக்கிறது என்பதால் உடனே எடுத்து,

‘ஹலோ.... ’ என்றாள். பதிலே இல்லை.

சுவாதியாகத்தான் இருக்கும். ஏன் பேசவில்லை என்று யோசிக்கும் போதே, திரும்ப மணி ஒலித்தது.

'ஹலோ' , என்றாள் திரும்ப.

' அம்மா, சீக்கிரமா உடனே வீட்டுக்கு வாங்க '. மகள் சுவாதியின் நலிந்த குரல். ஏதோ தப்பு நடந்திருக்கு. 'என்னம்மா, என்னாச்சு', படபடப்பாகக் கேட்டாள், அபி.

'சீக்கிரம் வீட்டுக்கு வாங்க, ப்ளீஸ்.......' குரல் என்றுமே இல்லாத அளவிற்கு வித்தியாசமாக இருந்தது.

'நான் வந்துகிட்டே இருக்கேன் சுவாதிம்மா, என்னடா நடந்தது, சொல்லும்மா.......'

நான்... நான்.. தூக்க மாத்தி.... தூக்க.... போன் கீழே விழுகிற சத்தம் .... ஒரே அமைதி..........

ஒரு வினாடி ஒன்றுமே புரியாமல் பயத்தில் வெடவெடக்க அசையாது நின்றிருந்தவள், உடனே கைப்பையை எடுத்து, அதிலிருந்து, தன்னுடைய கார் சாவியைத் தேடியெடுத்தாள். மேனேஜரிடம் சென்று, எதையோச் சொல்லி புரியவைத்துவிட்டு விரைந்தாள். வழியில் எப்படித்தான் அப்படி இயந்திரத்தனமாக காரை ஓட்டிவந்தாள் என்று புரியவே இல்லைதான். கிளம்பும்போதே ஆம்புலன்சிற்கு சொல்லிவிட்டு வந்ததால், வீட்டை நெருங்குவதற்கும் ஆம்புலன்ஸ் வருவதற்கும் சரியாக இருந்தது. சுவாதியை அருகில் சென்று பார்க்க தைரியம் இல்லை என்றாலும், அதற்கு காத்திராமல் மளமளவென அவளைத் தூக்கி ஸ்ட்ரெட்சரில் வைத்து வேனில் ஏற்றிக் கொண்டு சென்றனர். மயங்கிவிட்டாள் போல….

அதிர்ச்சியில் நா வறண்டு, கண்கள் இருண்டுபோன நேரத்தில் கணவனுக்கு விசயத்தைச் சொல்ல வேண்டுமே என்று போனைப் போட்டாள். " உடனே கிளம்பி சுதா ஹாஸ்பிடல் வாங்க, ரொம்ப அவசரம். என்ன சொல்றதுன்னே தெரியலைங்க. ரொம்ப மோசமான விசயம் நடந்து விட்டது".

முதல் முறையாகத் தேம்பி அழ ஆரம்பித்தாள் அபி.

நர்ஸ் வந்து அபியைத் தட்டிக் கொடுத்து, ஆதரவாகக் கையைப்பிடித்து அழைத்துச் சென்று, அவசரச் சிகிச்சைப் பிரிவின் கண்ணாடிக் கதவின் வழியாக சுவாதியைக் காட்டினார். அங்கேயே பக்கத்திலிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அதற்கு மேல் அவள் காலகள் தள்ளாட ஆரம்பித்துவிட்டது. தன் உடலில் இருந்த அத்தனைச் சத்தும், தன் மகளின் போன் வந்த அந்த நொடியில் கரைந்தேப் போனதை உணர்ந்தாள்.

நேரம் செல்லச் செல்ல உண்மை உரைக்க ஆரம்பித்தது. சுவாதியா தூக்க மாத்திரை சாப்பிட்டிருக்கிறாள். ஐயோ.. கடவுளே.. தூக்க மாத்திரை என்ற சொல்லின் பிரயோகமே அவளை மிகவும் பாதித்தது. ஆனாலும் அதனைத் தவிர்க்க முடியவில்லையே. தற்கொலைக்கு முயன்றிருக்கிறாள் தன் அன்பு மகள் என்பதை நம்பவே முடியவில்லை. என்ன குறை

வைத்தோம் என்றே தெரியவில்லையே. இந்த வயசில் அப்படி என்ன பிரச்சனை வந்துவிடப்போகிறது. மனோகரனும், தானும் நல்ல நண்பர்களாகத்தானே மகளிடம் பழகிக் கொண்டிருக்கிறோம். பள்ளியில் நடக்கும் சின்னச் சின்ன விசயங்களைக்கூட தன்னிடம் பகிர்ந்து கொள்ளும் சுவாதியா இப்படி, எதையுமே சொல்லாமல், இதுபோன்ற ஒரு முடிவை எடுத்திருக்கிறாள்.. இருக்காது, இது எப்படி சாத்தியம்?

சுவாதி மட்டும் தான் இவர்களின் உலகம், உயிர், மற்றும் வாழ்க்கை இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். அவளும் மிக ஒழுக்கமான பெண்ணாகத்தானே நடந்து கொண்டிருக்கிறாள். தங்களுடைய பெருமைக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய ஒரே ஜீவன். சுருள் சுருளான அழகிய தலை முடியும், குண்டு திராட்சை போன்ற கருநீலக் கண்களும், கொள்ளை அழகு, அவள். நர்சரி பள்ளி சென்ற நாளிலிருந்து, அவளுடைய ஆசிரியர்கள் அவளின் ஒழுக்கம், திறமை குறித்து பாராட்டாத நாளே இல்லை. சில நேரங்களில் அது தனக்கேச் சற்று மிகையாகக் கூடத் தோன்றும். வளர்ந்து பெரியவளாகி பள்ளி இறுதி வகுப்பில் படிக்கும் இந்த சமயத்தில் கூட அவளைப் பற்றி எந்தவொரு தவறான புகாரும் இதுவரை வந்ததில்லை. தான் உண்டு தன் படிப்பு உண்டு என்றல்லாவா இருக்கிறாள். அதிகமாக நண்பர்களிடம் பழகும் பழக்கம் கூட இல்லையே.

மனோகரனும், அபியும் ஒரு முறை கூட அவளை பெரிதாக சாதிக்க வேண்டும் என்றோ, இதைச் செய், அதைச் செய்யக் கூடாது, என்று கட்டாயப் படுத்தியதோக் கிடையாது. அவளுடைய வேலையிலும், படிப்பிலும், எந்தக் குறையும் சொல்ல முடியாது என்பதால் அவள் போக்கிலேயே விட்டு வைத்திருந்தார்கள். திடீரென்று இப்படி ஒரு குண்டைத் தூக்கிப்போடுவாள் என்று கனவிலும் நினைத்ததில்லை.

மனோகர் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்ததைப் பார்த்தவுடன், அபிக்கும் அழுகை கட்டுக்கடங்காமல் போனது. அவன் கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டு நின்றிருந்தாள்.

சுவாதி இருந்த அறைக் கதவு திறந்து, மருத்துவர் வெளியே வந்தார். சுவாதி துவண்டு போய் மயக்க நிலையிலேயே இருந்தாள். மூக்கில் பிராணவாயு முகமூடி இருந்தது. மருத்துவர், அவள் வயிற்றைக் கழுவி சுத்தம் செய்தாகி விட்டதாகக் கூறினார். மயக்கம் தெளிய ஒரு சில மணித் துளிகள் ஆகலாம் என்றும், யாராவது ஒருவர் மட்டும் அருகில் இருக்கும் படியும் கூறினார்.

"அவள் ஏன் இப்படி ஒரு முடிவு எடுத்தாள் என்று தெரியுமா"? என்று கேட்டார்.

இருவரும் ஒரே நேரத்தில், தெரியாது என்று வேகமாகத் தலையாட்டி, " என்ன காரணம்னே புரியல சார். அவ மேல உசிரையே வைச்சிருக்கோம். அவளும் அப்படித்தான் இருக்கான்னு தான் நினைச்சிக்கிட்டிருக்கோம் ", என்றனர், தாங்க முடியாத வேதனையோடு.

"சரி, நான் ஒரு அட்டெண்டரை அனுப்பி வைக்கிறேன். அவருடன் சென்று மன நல மருத்துவரைப் பார்த்துவிட்டு வாருங்கள்," என்றார்.

சுவாதி குறுகலான படுக்கையில் துவண்டு கிடந்தாள். மனோகர் கால் மாட்டிலும், அபி தலை மாட்டிலும் உட்கார்ந்திருந்தனர். அபி சுவாதியின் கையை மெதுவாக எடுத்தாள். சில்லென்றிருந்தது. எந்த உணர்வும் இல்லை. ஒரு மணி நேரம் கடந்தது.. இரண்டு மணி நேரமும் கடந்துவிட்டது. அவர்கள் இருவர் மனதிலும் சுவாதி ஏன் இப்படிச் செய்தாள் என்ற கேள்வி மட்டும் விடை தெரியாமலே இடியெனத் தாக்கிக் கொண்டிருந்தது.

சுவாதி இப்படி செய்ததற்கு என்ன காரணமாக இருக்கும்? அதற்கான அறிகுறி ஏதும் இல்லையே. உடன் படிக்கும் மாணவர்களிடம் நன்றாகப் பழகுகிறாள். உறவுகளிடம் உண்மையான அன்பைக் காட்டுகிறாள். திடீரென்று இப்படி ஒரு முடிவெடுக்கும் அளவிற்கு என்னதான் நடந்திருக்கும் என்றே தெரியவில்லையே!

ஒரு வேளை தன் அன்பில் ஏதேனும் குறை இருக்குமோ என்று யோசிக்கத் துவங்கினாள், அபி. சுவாதியை முதன் முதலில் கையில் வாங்கிய அந்த நாளிலிருந்து இந்த நொடி வரை அவள் மீது ஒரு துளி வெறுப்போ, வருத்தமோ கொண்டதில்லையே. அது மட்டுமல்லாமல் அடுத்து ஒரு குழந்தை வந்தால் சுவாதி மீது உள்ள பாசம் குறைந்துவிடுமே என்ற அச்சத்தினாலேதானே , நான்கு வருடத்திற்குப் பிறகு உருவான அந்தக் கருவைக் கூட வளர விடாமல், அழித்து விட்டாள். இதைவிட வேறு எப்படி தன்னுடைய பாசத்தை நிரூபிக்க முடியும்? மனப் போராட்டத்தின் எல்லைக்கேச் சென்று விட்டாள் அவள்.

எந்த பதிலும் கிடைக்கவில்லை அவளுக்கு. நேரம் மட்டும் கடந்து கொண்டே இருந்தது. சுவாதி மிக மெலிதாக முனகும் சத்தம் கேட்டது. முனகல் ஒலி அதிகரிக்க ஆரம்பிக்கும் வேளையில், அவள் உடலும் சேர்ந்து குலுங்க ஆரம்பித்தது.

’சுவாதி.. சுவாதீம்மா, அபி மெதுவாகக் கூப்பிட்டாள். சுவாதி.. அம்மாடா.... அப்பாவும் இங்கத்தான் இருக்காங்க பாரும்மா....

அவளுடைய முனகல் அதிகரித்தது. உதடுகள் குவிந்து வார்த்தைகளை வெளிக் கொணர முயற்சித்துக் கொண்டிருந்தது.

அவளுடைய முன் நெற்றியில் சுருண்டு விழுந்து கிடந்த முடியை ஒதுக்கிவிட்டு, அபி தன்னுடைய முகத்தை அவள் கன்னத்தோடு, வைத்தாள். "கண்ணம்மா... அம்மாடா... என்று முடிப்பதற்குள், அவள் வாயிலிருந்து, நுரையாக வந்ததைக் கண்டு அரண்டு போய் படாரென எழுந்தாள்.

மனோகர் வேகமாக ஓடிச் சென்று நர்சை அழைத்து வரச் சென்றான். அவர்களும் வந்து பார்த்துவிட்டு, ஏதோ ஊசி போட்டுவிட்டுப் போனார்கள். இரவு முழுவதும் இப்படியேக் கழிந்தது.

அவளிடம் எந்த மாற்றமும் இல்லை. அன்பான ஒரு பார்வை கூட இல்லை. இயல்பான அவளுடைய புன்னகையைக் காணவில்லை. கையை மேலே வைத்தால் தட்டிவிடும் அளவிற்கு வெறுப்பை மட்டும் காட்டிக் கொண்டிருந்தாள். இறுதியாக விடியற்காலை 5 மணிக்குத்தான் தூங்க ஆரம்பித்தாள்.

வெகு நேரம் கழித்து சுவாதி மெதுவாக கண் விழித்துப் பார்த்தாள். உதடுகள் மிகவும் வறண்டு போயிருந்தன. ஏதோ பேச முயன்றாள். அபி தண்ணீர் எடுத்துக் கொஞ்சம் குடிக்கக் கொடுத்தாள். மனோகரும் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

சுவாதி மெதுவாக கண்களைத் திறந்து ' நான் எங்கே இருக்கிறேன்', என்றாள். 'ஆஸ்பத்திரியில்', என்று இருவரும் ஒன்றாகக் கூறினர்.

சுவாதி தன் கையின் மணிக்கட்டைத் துடைத்துக் கொண்டே, ' ஏதோ, கனவு போல இருக்கு... ஒன்னுமே புரியல... எல்லார் மேலயும் வெறுப்பா இருக்கு, என்றாள். அவள் முகத்தில் நிறைய குழப்பங்கள்.

சில மணித்துளிகள் இப்படியே நகர்ந்தது. புதிதாக ஒரு மன நல மருத்துவர் உள்ளே நுழைந்தார். அபியையும், மனோகரையும் வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, தான் மட்டும் உள்ளே சென்று, மகளுடன் நீண்ட நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருப்பது மட்டும், கண்ணாடிக் கதவு வழியேத் தெரிந்தது.

மனோகரும், அபியும் மிகக் குழப்பமான மனோநிலையுடனேயே, டாக்டர் வந்து என்ன சொல்லப் போகிறாரோ என்று தவித்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் கழித்து மருத்துவர் வெளியே வந்தார். அவர்கள் இருவரும் ஓடி வந்து அவரருகில் நின்று கொண்டனர். இருவரையும் தன் அறைக்கு அழைத்துச் சென்றவர், கேட்ட முதல் கேள்வியே அவர்களைப் புரட்டிப் போட்டது.

" இந்தப் பெண் உங்களுடைய சொந்தக் குழந்தை இல்லையா ?" , என்பதுதான் அது.

இத்தனை ஆண்டுகாலமாக வெளியே தெரிந்தால் எங்கே தங்கள் பாசம் கேள்விக்குறியாகிவிடுமோ என்ற அச்சத்தில் மறைத்து வைத்திருந்த இரகசியம் இன்று வெளியே தெரிந்து விட்டதா? அதுவும் தங்கள் செல்லக் குழந்தையின் மூலமாகவே...?

மனநல மருத்துவர் மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்க முயற்சிக்க , அபி அவரைத் தடுத்து, 14 வருடங்களுக்கு முன் நடந்த அந்த சம்பவத்தை முதன் முறையாக டாக்டரிடம்

கூறத் தொடங்கினாள்.

பிரசவ வேதனையுடன் மருத்துவமனைக்குச் சென்ற அந்த நாளிலிருந்து ஆரம்பித்தாள். வலியில் துடித்துக் கொண்டிருந்த அந்த வேளையில் மருத்துவர் வந்து, குழந்தை, நிலை மாறியுள்ளதாலும், உடல் முழுவதும் கொடி சுற்றியிருப்பதாலும், அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும், யாராவது ஒரு உயிரைத்தான் காப்பாற்ற முடியுமென்றும் கூறிவிட்டனர். அந்த நேரத்தில் மனோகர் தன் மனைவியின் உயிரைக் காப்பாற்றவேண்டியதே முக்கியம் என்று எழுதிக் கொடுத்துவிட்டான். அறுவைச் சிகிச்சையில் தீவிர முயற்சிக்குப் பிறகும் குழந்தையைக் காப்பாற்ற முடியாத அதிர்ச்சி அபியை பலமாகத் தாக்கியிருந்தது.

இந்த நேரத்தில் தான் , அதே மருத்துவமனையில், பிறந்த ஒரு பெண் குழந்தையின் தாய், அந்தக் குழந்தையை ஏதாவது ஒரு அனாதை ஆசிரமத்தில் சேர்த்துவிடும்படி எழுதி வைத்து விட்டு, எங்கோ சென்று விட்டது தெரிய வந்தது.

இதையறிந்த மனோகரும் அபியும்,அக்குழந்தை கடவுளாகப் பார்த்து தங்களுக்காகக் கொடுத்த ஒரு வரப் பிரசாதமாகவே கருதிக்கொண்டனர். இருவரும் சேர்ந்து நன்கு யோசித்து, அந்தக் குழந்தையைத் தாங்களே தத்து எடுத்து வளர்ப்பது என்ற முடிவிற்கு வந்தனர். பிறகு மற்ற சம்பிரதாயங்களை முடித்துவிட்டு, குழந்தையை தூக்கிக் கொண்டு வந்துவிட்டனர். இந்த விசயம், அவர்களுடைய மிக நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே தெரியும். சுவாதிக்காக அடுத்த குழந்தையேக் கூட வேண்டாம் என்றிருந்ததையும் கூறினர்.

இதைக் கேட்ட மனநல மருத்துவர், " நீங்கள் செய்த மாபெரும் தவறு இதுதான் ", என்றார்.

குழந்தையை தத்து எடுத்து வளர்த்ததெல்லாம் நல்ல காரியம்தான். ஆனால் குழந்தைக்கு ஒரு குறிப்பிட்ட பருவம் வந்தவுடன் , இந்த விசயத்தை அந்தக் குழந்தையிடம் நீங்களே பக்குவமாக எடுத்துக் கூறியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. யாரோ ஒருவர் மூலம் திடீரென இந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அந்தப் பிஞ்சு நெஞ்சில் அதிர்ச்சி குத்தீட்டியாகப் பாய்ந்துவிட்டது. அந்த ரணம் தாங்க முடியாமல் தான் அவள் தற்கொலை என்ற அளவிற்குச் சென்றிருக்கிறாள்.

மனநல மருத்துவரும் இவர்கள் இருவரின் அதிர்ச்சியைப் போக்குவதற்காக சில மணித்துளிகள் எடுத்துக் கொண்டு அவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கி, மேற்கொண்டு சுவாதியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரைகளும் வழங்கி அனுப்பி வைத்தார்.

ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பி வந்த சுவாதி இன்று கொஞ்சம், கொஞ்சமாக உடல் நிலையிலும், மன நிலையிலும் தேறிக் கொண்டிருக்கிறாள். வெகு விரைவில் பழைய நிலைக்குத் திரும்பி விடுவாள் என்ற நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள் அவளுடைய அன்பான பெற்றோர்.

## 3. எரிதழல் கொண்டு வா!

மூடியிருந்த அறைக் கதவின் வழியாக உயிரை உருக்கும் மரண ஓலம். தீயால கருகி எரிந்து துடிக்கும் இறுதி நேரத்து போராட்டம். தெருவில் கூட்டம் கூடிவிட்டது. யாரோ ஆம்புலன்சுக்கும், போலீசுக்கும் போன் செய்தும் விட்டார்கள். படித்தவர்கள் குடியிருக்கும் அரசாங்க, டெலிபோன் குவார்டர்ஸ் பல மாடிக் கட்டிடக் குடியிருப்பின் அருகில் உள்ள தனி வீடு. காலை ஷிப்ட் முடித்து வீட்டிற்கு  வந்தவர்கள் பக்கத்து வீட்டில் வந்த மரண ஓலமும், எரியும் வாசமும் கண்டு அரண்டு போய் மளமளவென காரியங்கள் செய்து கொண்டிருக்க, அந்த வீட்டின் உரிமையாளர், ஆசிரியை சரசுவதி ஒன்றுமே அசைவில்லாமல் மந்திரித்து விட்டதுபோன்று சுய நினைவின்றி  உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஏதும் புரியாமல் அருகில் சென்று எவ்வளவோ உலுக்கியும், பலனில்லை. ஆம்புலன்சு அருகில் இருந்ததால் அடுத்த சில நிமிடங்களிலேயே வருவதற்குள், தானியங்கி பூட்டு பூட்டிக் கொண்ட அறையை வெளியிலிருந்து திறந்துகொண்டு பொறியாளர் சந்தானமும், லைன்மேன் கார்த்தியும் முந்திக்கொண்டு முதலுதவி செய்ய, அதற்குள் பாதி வெந்த நிலையில் அங்கு துவண்டு கிடப்பது டீச்சரம்மாவின் ஒரே செல்ல மகன் ரகு என்கிற ரகுவரன். இத்தனை கூச்சல், குழப்பத்திலும் எந்த உணர்வுமே இல்லாத சடமாய் உட்கார்ந்திருக்கும் தாயைப் பார்த்து ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. சில மணித் துளிகளில் அனைத்தும் நடந்து முடிந்து விட்டது.  ரகு மருத்துவமனையில் போராடிக் கொண்டிருக்க, சுயநினைவு அற்ற நிலையில் நடந்தது பற்றி ஏதும் அறிந்து கொள்ள முடியாமல் காவல் துறையினரும், குழப்பத்துடன் சரசுவிற்கும் மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

**கிட்டத்தட்ட 18 ஆண்டுகளாக தன் ஒரே மகன் ரகுவுடன் அதே வீட்டில் குடியிருப்பவர் சரசுவதி. வீடு கட்டிய ஒரே வருடத்தில் கணவன் ஒரு விபத்தினால் இறந்து போக, தன் மூன்று வயது மகனுடன், தானுண்டு தன் ஆசிரியத் தொழிலுண்டு என குனிந்த தலை நிமிராமல், மகனை வளர்ப்பது மட்டுமே தலையாய கடமையாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். காதல் மணம் புரிந்து கொண்டதால் உறவுகள் அனைத்தும் விலக்கி வைத்திருந்தாலும், துணிச்சலோடு வாழ்க்கையை எதிர்கொண்டு மகனையும் நல்ல முறையில் வளர்த்து, நல்லதொரு பொறியியல் கல்லூரியில் படிக்க வைத்துக் கொண்டிருப்பவள்.**

**கூடா நட்பினால் மகனுக்குச் சில கெட்ட்ப் பழக்கங்கள் தொற்றிக்கொண்டுள்ளது என்பதை அக்கம் பக்கத்தாரும், நண்பர்களும் சொன்னபோது பாசம் அதை நம்ப மறுத்துவிட்டது. மகனுக்கு படிப்பில் நாட்டம் குறைந்து வருவது அவன் தேர்வில் வைத்திருந்த**

நிலுவைகளிலேயே புரிந்தாலும், ஏற்றுக்கொள்வது சிரமமாகத்தான் இருந்தது. கணவனை இழந்து வாழ்க்கையில் அனுபவித்த பலவிதமான துன்பங்களுக்கு வடிகாலாக இருப்பவன் ஒரே செல்ல மகன். அதிலும் ஏதும் பிரச்சனை என்றால் தான் உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை என்ற நிலை அந்தத் தாய்க்கு.

விடிந்தும் விடியாத காலைப் பொழுதில், மார்கழி மாதத்துக் குளிர். வாசல் கூட்டித் தெளித்து கோலம் போட்டுவிட்டு நிமிர்ந்தவள் 'ஐயோ, ஷாலினி.... போயிட்டியே' என்ற அலறல் கேட்டு நடுக்கத்தில் கோலப்பொடி இருந்த கிண்ணத்தை அப்படியே கீழே போட, போட்ட கோலம் முழுதும் அந்த மாவு பரவி, அலங்கோலமாகிவிட்டது. என்ன, ஏது என்று புரியாமலே எதிர் திசையில் உள்ள ஷாலினியின் வீடு நோக்கி ஓடினாள். உள்ளே கண்ட காட்சி, இதயத் துடிப்பே ஒரு கணம் நின்று போய்விட்டது. ஆம், அந்தப் பெண் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். பெற்றோர் அருகில் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். அந்த மென்மையான அழகிய முகம், முழி பிதுங்கி, நாக்கு தொங்கி அவ்வளவு விகாரமாக காணவே சகிக்கவில்லை. அடுத்து ஆக வேண்டிய காரியங்கள் மளமளவென நடக்க ஆரம்பித்துவிட்டது. போலீசு வழக்காகிவிட்ட நிலையில், துக்கமும், சேர்ந்து கொள்ள ஒருவரையும் பார்க்கப் பிடிக்காமல் அவர்கள் தங்கள் தோட்ட வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். மெல்ல மெல்ல மக்கள் அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.

"ரகு எப்பப் பார்த்தாலும் ரூமில கதவைச் சாத்திக்கிட்டு என்ன பண்றே"

"படிச்சுட்டுதான் இருக்கேன்.. பிராஜெக்ட் ஒர்க் இருக்கும்மா.. சத்தமில்லாம அமைதியா செய்யணும். அதான்......"

"என்னமோப்பா, ஏதோ உனக்கு சகவாசம் சரியில்லாத மாதிரி தெரியுது. அப்பா இல்லாத பையன், தாயோட வளர்ப்பு சரியில்லைன்னு பேரு வாங்கிக் கொடுத்துடாதே... வேற என்ன நான் சொல்லட்டும்"

"அப்படீல்லாம் ஒன்னும் இல்லைம்மா.. நீங்க வருத்தப்படும் அளவுக்கு இப்ப என்ன ஆச்சு... ஏன் திடீர்னு இப்படி பேசறீங்க....?

"மூன்றாவது வருசம் வந்துட்ட.. ஏற்கனவே நாலு பேப்பர்ல அரியர்ஸ் வச்சிருக்க.. அடுத்த வருசத்திற்குள்ள அதையும் முடிக்கணும். புதுசா அரியர் சேராம இருக்கணும். நீ என்னடான்னா கவலையில்லாம இருக்க... எப்படி கேம்பஸ் இண்டர்வியூல செலக்ட் ஆவுறது ... சொல்லு?"

"அம்மா, அதெல்லாம் பாத்துக்கலாம். நீங்க ஒன்னும் கவலைப்படாதீங்க. என் பிரண்ட் மகேந்திரன் மினிஸ்டரோட நெருங்கிய உறவு. தெரியுமில்லம்மா.. அவன் பார்த்துக்குவான்... "

"என்னப்பா சொல்ற? அதுதான் எனக்கு பயமா இருக்கு. ஒழுங்கா நீ படிக்காம, அவன் எப்படி பாத்துக்க முடியும்?"

"அதெல்லாம் உங்களுக்குப் புரியாதும்மா.. விடுங்க. நான் பாஸ் பண்ணி, வேலையும் வாங்கிடுவேன். கவலைப்படாதீங்க"

ரகுவின் போக்கும், பேச்சும் புரிபடாமல் இருந்தாலும், அதற்குமேல் அவனிடத்தில் தன் பேச்சு எடுபடாது என்று தெரிந்ததால், கொஞ்சம் விட்டுப் பிடிப்போம் என்று அமைதி காத்தாள். பேஸ்புக், டிவீட்டர் என்று எப்பொழுது பார்த்தாலும் கதைத்துக் கொண்டிருப்பதும், நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு ஊர் சுற்றுவதும் என்று ரகுவின் போக்கு நாளுக்கு நாள் வேதனையளிப்பதாகவே இருந்தது. அடிக்கடி போனில் ஏதோ சீரியசாக பேசுவதும், தான் வந்தால் பேச்சை மாற்றுவதும் என்று சந்தேகம் அதிகமாகிக் கொண்டிருந்தது. கணவனின் இழப்பு, முன் எப்போதையும் விட இப்போது மிக அதிகமாக வருத்தத்தைக் கொடுக்க ஆரம்பித்தது. ஏதேனும் கேட்டால் எரிந்து விழும் மகனைக் கண்டு வேதனைப் படுவதைவிட தலைக்குமேல் வளர்ந்து நிற்பவனிடம் எப்படி கண்டிப்பது என்பதும் புரியவில்லை. வீட்டில் பேச்சும் கூட வரவர குறைந்து போனது. வெளியில் சுற்றிவிட்டு நேரம் கழித்து வருவது, வீட்டில் இருந்தாலும், ரூமில் கதவை அடைத்துக் கொள்வது என்று பொழுது போய்க்கொண்டிருப்பது சரசுவிற்கு வேதனையை அதிகமாக்கிக் கொண்டிருந்தது.

அன்று வகுப்பில் பாரதியின் பாஞ்சாலி சபதம் பாடம் எடுத்துக் கொண்டிருந்தாள்.

துச்சாதனன் ஊரார் வேடிக்கைப் பார்க்க, திரௌபதியின் நீண்ட கருங்குழலைப் பிடித்திழுத்துக் கொண்டு அரச சபைக்கு வருகிறான். மனம் நொந்து சபையிலே அவள் அழுது துடிக்கிறாள். அதனைத் துளியும் சட்டை செய்யாமல் மீண்டும் அவள் மைகுழல் பற்றி இழுக்கிறான் அந்தக் கிராதகன். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பீமன் தருமனை நோக்கி கடும் சினம் கொள்கிறான்.

சிறுமை கொண்டு பொங்கிய கவிஞன் பாரதி. அடிமைத் தளையில் சிக்குண்டு கிடந்த தமிழ் சமூகத்தை எழுச்சிமிகு தம் பாடல் திறத்தால் வீறு கொண்டு எழச் செய்தவர் பெண்ணடிமை தீர்ந்தால் மட்டுமே நாடு சுபிட்சம் பெறும் என்ற கருத்தினை வலியுறுத்தவே பாஞ்சாலி சபதம் எனும் காவியம் படைத்தான் பாரதி. பாண்டவர்களின் மூத்தோன், தருமன் சூதாட்டத்தில் தம் உடைமைகளனைத்தையும் இழந்ததோடு, இளவல்கள், மனைவி என அனைவரையும் பகடையாக்கி ஆடித் தோற்றான் பாஞ்சாலி கௌரவர் சபையில் அவமதிக்கப்பட்டதைக் கண்ணுற்ற பீமன், அண்ணனை, மூத்தவன் என்றும் பாராமல் கடும் சொற்களால் சாடுகிறான்.

இது பொறுப்பதில்லை தம்பி!
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்!

என்று உணர்ச்சிவசப்பட்டு வகுப்பு எடுத்துவிட்டு வந்தாள். ஏனோ திடீரென்று அண்மையில் இறந்து போன ஷாலினியின் நினைவு வந்து அலைக்கழித்தது. அந்தப் பெண்ணிற்கும் ஏதோ பாலியல் கொடுமை நடந்திருப்பதாகவும், பெரிய இடம் என்பதால் வெளியில் வராமல் மறைக்கப்பட்டிருப்பதாகவும், அரசல் புரசலாக காதில் விழுந்து கொண்டிருந்ததுதான் காரணம். ஏனோ அதே நினைவாக இருந்தது. பெண்கள் நன்கு படித்து முன்னேறிக் கொண்டிருந்தாலும், தற்காப்புக் கலைகளில் அதிக கவனம் செலுத்தாமல் இருப்பதே, இது போன்ற நேரங்களில்

எதிர்த்துப் போராடும் வல்லமையின்றி உயிரையே துறக்க நேரிடுகிறதே என்று அதே நினைவாக இருந்தது. அரசாங்கம் பள்ளி மாணவிகளுக்கு ஏதோ ஒரு பாதுகாப்புக் கலையை கட்டாயமாக்குவதுடன், அதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய வழி முறைகளையும் ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அந்தப் பெண்ணின் பால் வடியும் முகமே வந்து போய்க்கொண்டிருந்தது. சளி பிடித்துக் கொண்டிருந்ததால் ஒரே தலை பாரம், அதற்குமேல் வகுப்பு எடுக்க முடியவில்லை என்பதால், தலைமை ஆசிரியரிடம் அரை நாள் விடுமுறை சொல்லிவிட்டு வீட்டில் சென்று ஓய்வெடுக்கலாம் என்று கிளம்பிவிட்டாள்.

வீடு பூட்டாமல் சாத்தியிருந்தது அதிர்ச்சியாக இருந்தது. காலையில் மகன் பூட்ட மறந்துவிட்டு சென்றிருப்பானோ என்று நினைத்து கதவைத் திறக்கப்போனவள், உள்ளே பேச்சுக் குரல்கள் வரவும் கதவைச் சத்தமின்றி லேசாகத் திறந்து கேட்க ஆரம்பித்தாள். மகனும், அவனுடைய நண்பர்களும் ஏதோ சீரியசாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். மூன்று பேர் இருப்பதாகத் தெரிந்தது. முதலில் தலையும் புரியவில்லை, வாலும் தெரியவில்லை. ஆனால் சற்று நேரம் உற்று கவனித்த பின்பு அவர்கள் பேசியதைக் கேட்டு தரையில் கால் பாவாமல், கண்கள் தட்டாமாலை சுற்ற ஆரம்பித்து விட்டது.

“ரகு, மகேந்திரனைப்பத்தி கவலையில்லை. அவன் அவங்க மாமா வீட்டிற்கு டெல்லிக்குப் போயிட்டான். ஷாலினி மேட்டர் கொஞ்சம் சீரியசாப் போகும் போல இருக்காம். போலீசை சரிகட்டினாலும், பெண்கள் அமைப்பெல்லாம் தலையிட ஆரம்பித்திருக்கிறார்களாம். அதனால் பிரச்சனை பெரிதானால் அவள் வீட்டின் பக்கத்தில் குடியிருக்கும் நாம்தான் முதலில் மாட்டுவோமாம். அதனால் கொஞ்ச நாளைக்கு நம்மளையும் எங்கயாவது வெளியூர்ல போய் இருக்கச் சொல்லி போன் பண்ணினான்”

“ஐயோ.. அப்படியா? நான் எங்க அம்மாவை விட்டுட்டு எங்கடா போக முடியும். ?”

“அதெல்லாம் இப்ப பேசற நேரமில்லைடா. நான் எங்க அக்கா வீட்டிற்கு பாம்பே போகப் போறேன். எங்க அம்மாகிட்ட பிராஜக்ட் வேலைன்னு சொல்லப் போறேன். எங்க அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அதுக்கு மேல புரியாது அதனால பிரச்சனை இல்லை. இதோ பாலுவும் கிராமத்தில் இருக்கும் பாட்டி வீட்டிற்குப் போக திட்டமிட்டிருக்கிறான்”

“டேய்.. என்னடா மச்சி இது, இப்படி என்னய மட்டும் கழட்டி உட்றீங்க. எங்க அம்மாகிட்ட என்ன சொல்லி தப்பிக்க முடியும்னு தெரியலையே..”

“இப்ப பேசி என்ன ஆகப் போகுதுடா. மகேந்திரன் கூட சேர்ந்துகிட்டு அந்தப் பொண்ணு ஷாலினியை கெடுக்கும்போது புத்தி இருந்திருக்கணும். அவன் தன்னை உண்மையாலுமே லவ் பண்றதா நம்பி அந்தப் பொண்ணு பாவம் மகாபலிபுரம் அவன்கூட வர நாமும் அவன்கூட சேர்ந்து செய்யக் கூடாத பாவத்தை செய்துப்புட்டோமே.. அந்தப் பொன்னு பாவம் பயத்துல தற்கொலை பண்ணிக்கிச்சு. இப்ப வருத்தப்பட்டு என்ன ஆகப்போகுது. நம்ம வீட்டுல தெரியறதுக்கு முன்னாடி ஏதாவது செய்யணும்”

“அடப்பாவிகளா... என்ன சொல்றீங்க? அந்தப் பொண்ணு ஷாலினி சாவுக்கு நீங்கதான் காரணமா? அய்யோ கடவுளே, ரகு கடைசீல நீ இந்த நிலைக்குப் போயிட்டியா? நான் என்ன பண்ணுவேன்,.”

அதிர்ச்சியில் பலமாகக் கூச்சல் போடும் நிலைக்கு வந்துவிட்ட அம்மாவையும், சூழ்நிலையின் ஆபத்தையும் உணர்ந்து கொண்ட ரகு வேகமாக அம்மாவை உள்ளே இழுத்து வந்து சமாதானப்படுத்த முயற்சி செய்தான். அதிர்ச்சியில் அரண்டு போய் நின்றிருந்த தாயைப் பார்க்க அச்சமாக இருந்தது. இந்த இடைவெளியில் ரகுவின் நண்பர்கள் இருவரும் சத்தமில்லாமல் கதவைச் சாத்திவிட்டு வெளியேறிவிட்டனர்.

பதினைந்து நாட்களாக ரகு மருத்துவமனையில் சுயநினைவின்றி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். அதிர்ச்சியிலிருந்து மீளாத அவன் தாயும் மூளை அப்படியே அதே இடத்தில் நிலைத்து நிற்க, வாய்ப்பேச்சும் நின்று போய், அரசு பாதுகாப்பில் மனநல மருத்துவமனையில் இருந்தாள்.

ரகுவிற்கு லேசாக அன்று நினைவு திரும்ப, வாக்குமூலம் வாங்குவதற்காக காவல்துறையினர் புடைசூழ நின்றிருக்க, சரசுவையும் அங்கு அழைத்து வந்திருந்தார்கள். ரகு மிகத்தெளிவாகப் பேச ஆரம்பித்தான்.

“அப்பா திடீரென்று விபத்தில் இறந்து போனவுடன், உறவுகளும் ஒதுங்கிவிட, அப்பாவுக்கு அப்பாவா, அம்மாவுக்கு அம்மாவா இருந்து என்னை வளர்த்தாங்க என் அம்மா. சக்திக்கு மீறி செலவு செய்து நான் சந்தோசமா இருக்கணும்னு, கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து, நல்லா பாத்துக்கிட்டாங்க. நானும் பள்ளிக்கூடத்தில் படிச்ச வரை ஒழுங்காத்தான் இருந்தேன். காலேஜீக்கு வந்தவுடன் அந்த சுதந்திரமான சூழலும், கலர் கனவுகளும் என்னை தன்னிலை மறக்க வச்சதும் உண்மைதான். சிகரெட் குடிக்கிறது, காலேஜ் கட் அடிச்சுட்டு ஊர் சுத்தறதுன்னு ஆரம்பிச்ச தப்பு கடைசீல ஒரு பெண் தற்கொலைக்கு காரணமாகிற அளவிற்கு பெரிசானதே இப்பத்தான் புரியுது. அன்னைக்கு அம்மா அதிர்ச்சியில பலமா சத்தம் போட்டப்ப அக்கம் பக்கத்துல தெரிஞ்சிடப்போகுதுன்னு அம்மா கால்ல உழுந்து சத்தம் போடாதேன்னு கெஞ்சினேன். அம்மா கோபத்துல என்னைக் கண்டபடி அடிச்சதோட, போலீசுக்குப் போன் செய்யப் போறதா வேறச் சொன்னாங்க. அதனால வேற வழி தெரியாம நான் மண்ணெண்ணையை எடுத்து மேலே கொட்டிக்கிட்டு, நீங்க போலீசுக்குப் போன் செய்தால் நான் என்னையே பத்த வச்சிக்குவேன்னு மிரட்டினேன்.. அம்மா பயந்துபோய் அப்படியே உறைந்து நின்னுட்டாங்க. ஆனா அதுக்குள்ள அங்க இருந்த சாமி விளக்கு, அம்மா காலைல பூஜை முடித்து, அணைக்க மறந்து போயிட்டாங்க போல, அது லேசாக எரிந்து கொண்டிருந்தது.அம்மாவை முதன் முறையாக அப்படிப் பார்த்த டென்சன்ல ஓடிப்போய் புடிக்கப் போகும்போது தெரியாம விளக்கு மேல விழுந்துட்டேன், குப்புனு தீ பிடிச்சிடிச்சி.. என்னால ஒன்னுமே செய்ய முடியல. அதுக்கபுறம் என்ன நடந்துச்சின்னு தெரியல. அம்மா.. அம்மா என்னை மன்னிச்சுடும்மா. நான் அப்படி செய்திருக்கக் கூடாது.“

**கேட்டுக் கொண்டிருந்த சரசு "ரகு.. " என்று ஓவென்று அலற ஆரம்பித்தாள். ரகு எப்போது இப்படி மாறினான் என்று பலவிதமான குழப்பங்கள் நெஞ்சை அழுத்த மயங்கிச் சரிந்தாள்.**

## 4. குடும்ப விளக்கு

**குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா**

**குறையொன்றுமில்லை கண்ணா**

**குறையொன்றுமில்லை கோவிந்தா!**

எம்.எஸ் சுப்புலட்சுமி அம்மாவின் குரலில் உள்ளத்தை உருக்கும் இந்தப்பாடலைக் கேட்காமல் ஒருநாளும் பொழுது விடியாது கல்யாணிக்கு. விடியற்காலை 5 மணிக்கு குளித்து சுவாமி விளக்கேற்றி, வாசல் கூட்டித் தெளித்து, கோலம் போட்டு செம்மண் கரைகட்டி, சமையலறையில் நுழைந்தால் பம்பரமாய் சுழல வேண்டும்.

''கல்யாணி.. பேப்பர் வந்துடுத்தா?''

''வந்துடுத்துண்ணா.. அதோ அங்க டேபிளில் இருக்கே...''

"கல்யாணி.. காப்பி தரயாடீ... ?"

"இதோ தர்றேண்ணா..."

"நேரமாயிடுத்தோண்ணோ...... சீக்கிரம் வாடீ.. "

மணக்க,மணக்க பில்டர் காப்பியுடன் வந்தாள் கல்யாணி.

"ஏண்ணா காப்பிப் பொடி தீரப்போறதுண்ணா.. நேத்தைக்கே வர வேண்டிய சாய்பாபா காப்பி வேன் வரவேயில்லை போல.. என்னமோ தெரியல.."

‘‘போன் பண்ண வேண்டியதுதானே.. செல் நம்பர் கொடுத்திருக்கான் இல்லியோ’’

’’ஆமாண்ணா , இதோ பண்றேண்ணா..’’

‘‘பேப்பர்ல என்ன முக்கியமான நியூஸ் சொல்லுங்கோண்ணா.. கேக்கலாம்’’

‘‘டெய்லி நியூஸ் பேப்பர் படின்னு சொன்னா கேக்கறதில்ல. சரி. பேப்பர்ல நியூஸ் என்ன இருக்கு..கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம், இதை விட்டா அரசியல் விளையாட்டு.. நாடு போற போக்கே சரியில்ல. மனுஷாள்ட்ட நியாயம், தர்மம் எல்லாம் போயே போச்சு....’’

’’ சரிண்ணா, மதியம் சாப்பிட என்ன செய்யணும்.. லேட்டாயிடுத்தே....’’

‘‘ஆமா..ஆமா.அப்புறமா பஸ் போயிடுத்தேன்னு குய்யோமுறையோன்னு சத்தம் போட்டுண்டு நிக்க வேண்டியதுதான்.. மோர் குழம்பும், கேரட் உசிலியும் பண்ணிடு. ‘‘

‘‘கேரட் இல்லையேண்ணா, பரங்கிக்காய் இருக்கு, கூட்டு பண்ணவா?’’

‘‘அது மோர்க்குழம்புக்கு சூட் ஆகாதேடி.. கேரட் உசிலிதான் சரியான மேட்ச். இல்லேனா உருளைக்கிழங்கு கறி பண்ணிடு’’

‘‘இல்லேண்ணா, ஏற்கனவே உங்களுக்கு சுகர் கொஞ்சம் அதிகமாயிருக்கு. இப்ப உருளைக்கிழங்கு கறி வேண்டாமே. இதோ இந்த முக்குல ராசு கடையில கேரட் இருக்கும். நான் போய் வாங்கிண்டு வந்துட்றேனே ‘‘

‘‘அப்படியே, வெற்றிலை, சீவலும் வாங்கி வந்துடும்மா.. தீர்ந்து போச்சு’’

‘‘சரிண்ணா. ‘‘

‘‘இன்னும் சமையல் ஆகலையா.. என்ன பண்றே.. சுறுசுறுப்பா வேலை ஆக வேண்டாமோ. நேரம் ஆயிடுத்தோன்னோ’’

‘‘இதோ ஆச்சுண்ணா.. காலையில சாப்பிட இடலியும், தக்காளி கொத்சும் பண்ணியிருக்கேன். ‘‘‘‘சரி போதும்.. நான் பாத்துக்கறேன்...’’

“அப்பாடி.. எல்லா வேலையும் ஆச்சு. சொல்ல மறந்துட்டேனே... கேஸ் புக் பண்ணியிருக்கேன். இன்னைக்கு வருமே. பணம் இருக்காண்ணா.. ? அவன் சாயங்காலமாத்தானே வருவான்.. வந்து பாத்துக்கலாம்”

“சரிண்ணா.. நான் கிளம்பறேன். ஸ்கூல் பஸ் வந்துடும். இப்ப ஓடினாத்தான் போய் பிடிக்க முடியும். இல்லேன்னா டவுன் பஸ்சுல முட்டி மோதி சீப்பட்டுப் போகணும். நீங்க ரெஸ்ட் எடுங்கோ.. சாயங்காலம் பாக்கலாம்”

“அப்பாடி... உன்னை ஸ்கூலுக்கு அனுப்பறதுக்குள்ள போதும்னு ஆயிடறது... கிளம்பு.. நானும் போய் ரெஸ்ட் எடுக்கறேன்.. அப்புறமாத்தான் வாண்டட் காலம் பாக்கணும். துபாய்ல இருந்து ஏதாவது வேலைக்கு ஆர்டர் வருதான்னு பாக்கணும்... சொல்ல மறந்துட்டேனே.. சாயங்காலம் வரும்போது ஏ.டி.எம் போய் ஒரு 1000 ரூபாய் எடுத்துண்டு வந்துடு. சரி நீ பத்திரமா போயிட்டு வாம்மா..”

## 5. பாசச்சுமைகள்

காலை நேர பரபரப்பு ஏதுமில்லாமல் ஒரு மயான அமைதி.. சரியான இடைவெளியில் டொக்.. டொக்.. என்று செக்யூரிட்டி சிஸ்டத்தின் சத்தம் மட்டும் பலமாக ஒலிப்பது போல இருந்தது. வீடு முழுவதும் ஊதுவத்தியின் நறுமணம். புகை வரும் திசை நோக்கிச் சென்ற கால்கள் பூஜை அறையில் ஜெகஜோதியாக விளக்குகளும், புத்தம் புது மலர்களின் மென்மணத்துடன் பளபளவென துடைத்து வைக்கப்பட்டிருக்கும் வெள்ளியிலான விக்கிரகங்கள். வரவேற்பறையில் அலங்காரமாக வீற்றிருக்கும் புத்தர் மற்றும், நடராசர் சிலைகளும்கூட குறைவில்லாமல் இருந்தது. சமயலறையில் சமையல் செய்வதற்குத் தோதாக அனைத்தும் தயார் நிலையில் இருந்தது.

கனகலட்சுமி, மஞ்சள் பூசிய முகத்துடன், கருகருவென்ற தன் நீண்ட கூந்தலை,காதுகளின் இரு புறமும் ஒரு சிறு கற்றை முடியை எடுத்து தண்ணீர் சடை போட்டு, நுனியில் சின்ன முடிச்சாக இட்டு, அதன்மீது சிறு மல்லிகைச்

சரமும் சூடிக்கொண்டு நேரே பூஜையறைக்குள் சென்றவள், அன்றாட வழிபாட்டை முடித்து வந்தாள். இந்த 30 நாட்களாக வீடு நிசப்தமாக இருக்கிறது. மாமியார் இறந்து சடங்குகளெல்லாம் முடிந்து, உறவினர்கள் அனைவரும் திரும்பிச் சென்றாகிவிட்ட நிலையில் வேலையாட்களின் நடமாட்டம் மட்டுமே ஆறுதலளித்தது. ஒரே செல்ல மகளின் திருமணம் பேசி முடியப்போகும் வேளையில் மாமியாரின் மரணமும், அதைவிட கணவனின் திடீரென்ற புத்தி பேதலிப்பும் அவளை ரொம்பவும் வாட்டிவிட்டது. சம்பந்தமில்லாமல் ஏதேதோ உளறிக் கொண்டு,ஒழுங்கான சாப்பாடும், தூக்கமும் இல்லாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு, அவ்வப்போது ‘‘அம்மா.. போயிட்டியா... ஏன் இப்படி பண்ணினே.....’’ என்று மட்டும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் கணவனை நினைத்து அதைவிட வேதனையாக இருந்தது. 75 வயதில் தாயை பறி கொடுக்கும்போதும் கூட இந்த அளவிற்கு சோகம் தாக்குமா என்று அனைவருக்கும் ஆச்சரியம்தான்.

தியாகராஜன் வியாபாரத்தில் பெரும்புள்ளி. இவர்களுடைய தீபா ஃபுட் புராடக்ட்ஸ்தான் மாநிலத்திலேயே நம்பர் ஒன் என்று பெயர் பெற்றது. தெய்வ பக்தியும், தொழில் பக்தியும், அன்பான குணமும் கொண்ட தியாகராஜனுக்கு ஊரில் மிக நல்ல பெயர்தான். தன் மகளின் பெயரில் சாதாரணமாக ஆரம்பித்த கம்பெனி இன்று ஆலமரமாய் தழைத்து பல இடங்களில் விழுதாய் பரவியும் உள்ளதற்கு இவருடைய கடுமையான உழைப்பு மட்டுமே காரணம்.

சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்து, தாய்க்குத் தாயாகவும், தந்தைக்கு தந்தையாகவும் இருந்து தம்மை வளர்த்த தாயின்மீது அதிகமான பாசம் கொண்டிருந்ததும் இயற்கைதான். ஆனாலும் தாயின் இழப்பு இந்த அளவிற்கு பாதிக்குமா என்பது மருத்துவர்களுக்கு சந்தேகமாகவே இருந்தது. மன்நல மருத்துவர்கள் பல விதங்களில் சோதனை செய்து கொண்டிருந்தனர். எந்தவித முன்னேற்றமும் இல்லை. மகளின் திருமணமும், தொழிலும் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் நிற்பது பெரும் வேதனையாக இருந்தது.

‘அம்மா.. அம்மா... என்னம்மா அப்படி பாக்கறே... ஏன் அப்படி செய்தயாம்...’’ ஐயோ.. அந்த பார்வை என்னை துரத்திட்டே இருக்கே... திரும்பிய பக்கமெல்லாம் உறுத்துப் பார்த்து துளைத்து எடுக்குதே... ஏன்... அப்படி பாக்கறே..... கட்டிலுக்கடியில் ஒடுங்கி, குந்தவைத்து உட்கார்ந்திருக்கும் கணவனைப் பார்க்க சகிக்க முடியவில்லை கனகலட்சுமிக்கு. எத்துனை கம்பீரமான மனிதர். இப்படி ஆகிவிட்டாரே என்று துடித்துப்போனாள். தூக்க மாத்திரை கூட முழுமையான தூக்கம் வரவழைக்கவில்லை. அமைதியற்ற தூக்கம். மெதுவாக எழுப்பி அணைத்து, பயம் தெளியவைத்து, குளியலறைப் பக்கம் கூட்டிச்சென்று பல் துலக்கி, முகம் அலம்பச் செய்து கொண்டுவந்து உட்கார வைத்துவிட்டு காப்பி எடுத்துவரச் சென்றாள்.

லக்கிடி, (வயநாடு), இயற்கை அழகு உள்ளம் கொள்ளை கொள்ளும் நகரம். தாமராசேரி மலைப்பாதையின் மகுடமாக, அதன் அடிவாரத்திலிருந்து ஒன்பதாவது ஊசிமுனை வளைவில், அதாவது கடல் அளவைக்காட்டிலும் 2296 அடி உயரத்தில் அமைந்துள்ள அற்புதமான வனப்பகுதி. மலையேற்றம் செய்பவர்களுக்கு, இதன் பள்ளத்தாக்கிலும், பக்கவாட்டிலும் பசுமையின் அழகு சூழ்ந்த சொர்க்க பூமியாகவே இருக்கும். தியாகராஜனுக்கும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் இங்கு மலையேற்றம் செய்வதில் அப்படி ஒரு மகிழ்ச்சி....

காப்பியை போட்டு எடுத்துக்கொண்டு தியாகராஜனின் அறையில் நுழைந்தவள் ஒரு கணம் அதிர்ச்சியில் ஒன்றும் புரியாமல் அப்படியே நின்றுவிட்டாள். பால்கனி கதவைத் திறந்து கணவன் வெளியில் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லை அவள்.

‘ ’’ஆ.. காலங்காத்தால சில்லுனு காத்து எப்படி அடிக்குது.. அட வானம்கூட பளிச்சினு இருக்கே.... கீழே மட்டும் எங்கே பச்சப்பசேல்னு இருக்குற அந்த காட்சியக் காணோமே... ஒரு வேளை எனக்குத்தான் கண்ணு சரியா தெரியலியோ.... நல்லா குனிஞ்சு உத்து பாத்தாலும் தெரியலியே... சரி.. சரி.. ஜாக்கிரதையா நடக்கணும். இவ்ளோ பெரிய பள்ளத்துல உழுந்தா எலும்புகூட சிக்காது... அம்மாவோட எலும்பு என்னாயிருக்கும்.... உடனே

சிரிப்புதான் வந்தது.. அட அதைத்தான் கரண்ட்டுல சுட்டு கொஞ்சமா சாம்பலா குடுத்தாங்களே.... ஆனாலும் அங்கே இரண்டு கண்ணு உத்து பார்த்துட்டே இருக்கே.. சரி.. சரி.. மெதுவா.. மெதுவா நட.... ஸ்...ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் ..ஆ இது என்ன குறுக்க செவுரு இருக்கு.. டங்குனு மண்டையில இடிச்சுடுச்சோ.. பிசுபிசுங்குதே.... ரத்தம் வருதோ.... அப்புடியே திரும்பி நட.. ஜாக்கிரதை... ஆமா. சரிம்மா.. சரிம்மா.. பாத்துதான் வறேன்.. இரு வறேன்.... '.. '

தனக்குள்ளேயே பேசிக்கொண்டு சுய நினைவில்லாமல் 40 அடி உயரத்தில் அரைக்கல் கைப்பிடிச்சுவரில் நடந்து கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தால் ஈரக்குலையெல்லாம் நடுங்காமல் என்ன செய்யும்.. நல்ல வேளையாக வாட்ச்மேனும் கீழேயிருந்து கவனித்துவிட உடனடியாக மற்ற ஆட்களையும் பிடித்து தார்பாயை எடுத்துவந்து, கீழே விழுந்தால் பிடிப்பதற்கு தயாராக இருந்தார்கள்.... அதற்குள் கனகலட்சுமி அதிர்ச்சியில் இருந்து மெல்ல மீண்டு மெதுவாக கணவனிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே அப்படியே முன்னேறி நெருங்கும் போது, கால் இடறி விழப்பார்த்த கணவனை தாங்கிப் பிடித்தவள்,கனம் தாங்காமல் இருவரும் உள்புறமாக சரிந்து விழுந்தார்கள். நல்லவேளையாக உயரம் குறைவானதால் பெரிய அடியெல்லாம் ஒன்றுமில்லாமல் தப்பித்துக் கொண்டார்கள்.

சூழ்நிலையின் ஆபத்து புரிய இனிமேல் வீட்டிற்குள் வைத்துக்கொண்டு வைத்தியம் பார்ப்பது சரியல்ல என்று ஊரிலேயே பெரிய மனநல மருத்துவமனையில் சேர்க்க முடிவு செய்து மளமளவென காரியத்திலும் இறங்கினாள்..

பலவிதமான பரிசோதனைகள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். மனைவியிடமும்,மகளிடமும், பணியாட்களிடமும் பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு சிறு புள்ளியில் புத்தி தடுமாறியிருக்கிறது. அந்தப் புள்ளியைக் கண்டுபிடித்து விட்டால் வெகு எளிதாக குணப்படுத்தும் சாத்தியம் அதிகம். அம்மா உயிர் விட்ட நேரம் தாயும், மகளும் கோவிலுக்குச் சென்றிருந்தார்கள். தியாகராஜனின் அலறல் கேட்டே வேலையாட்கள் வந்து பார்த்திருக்கிறார்கள் . அப்போது பெரியம்மா சுருண்டு

கீழே விழுந்து கிடந்ததையும் தியாகராஜன் அப்படியே நிலையற்று வெறித்துப் பார்த்து அருகில் உட்கார்ந்திருப்பதையும் பார்த்திருக்கிறார்கள். ஏற்கனவே அம்மாவிற்கு இருதய வியாதி இருந்ததால் மாரடைப்பு வந்திருக்கும் வாய்ப்பு அதிகம்.. திடீரென்று எதிர்பாராத நேரத்தில் அம்மாவின் இழப்பு அதிர்ச்சி ஏற்படுத்தியிருக்கலாம், போகப்போக சரியாகிவிடும் என்றுதான் நினைத்திருந்தார்கள்.

ஊரிலேயே பெரிய மனநல மருத்துவர் டாக்டர் மதன். கவுன்சிலிங், சைக்கோதெரபி என பலவிதமான வழிகளில் மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்தவருக்கு திடீரென்று ஏதோ பொறிதட்டியது. தாய் இறக்கும் போது ஏதோ அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்திருக்கக் கூடும் என்று . யாரும் உடன் இல்லாதலால்,தியாகராஜனும் சொல்லும் நிலையில் இல்லாதலால், என்ன செய்வது என்று குழப்பிக் கொண்டிருந்தவர்களுக்கு செக்யூரிட்டி சிஸ்டம் நினைவிற்கு வர குறிப்பிட்ட அந்த நாளில் என்ன நடந்திருக்கும் என்று போட்டுப் பார்க்க ஆரம்பித்தனர்....

குறிப்பிட்ட அந்த நாளில் காலை 8 மணி இருக்கும். கோவிலில் குருபெயர்ச்சிக்கான விசேச பூஜை. திருமணம் ஆகப்போகும் மகளுக்காக அதில் கலந்து கொள்ளலாம் என்று அவளையும் அழைத்துக்கொண்டு கிளம்புகிறாள் கனகலட்சுமி. அவர்கள் கிளம்பிய சற்று நேரத்திற்கெல்லாம் தியாகராஜனும் கம்பெனிக்கு கிளம்புகிறார். அப்போது அவருக்கு ஒரு போன் வருகிறது. போனில் பேசியபடி நடந்து கொண்டிருக்கிறார்....

''அப்படியா..... என்னப்பா சொல்லறே.. உண்மையாவா .. நீ சொல்றதை அப்படியே நம்பலாமா..?''

‘‘நான் ஏனப்பா பொய் சொல்லப்போறேன். நான் உன்கிட்ட சொல்லிப்போடுவேன்னு தெரிஞ்சுதானே உங்கம்மா என்கிட்ட அப்படிச் சொன்னாங்க.. ‘‘

‘‘அதான் ஏன்னு எனக்குப் புரியல..’’ தன் பேத்தியின் கல்யாணத்தைத் தானே கெடுக்கக்கூடிய அத்துனை கல்மனம் கொண்டவளா தம் தாய் என்பதை கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை அவனால்.. முகத்தில் அந்த உணர்வு அப்பட்டமாகத் தெரிகிறது.

நேரே அம்மாவின் அறைக்குச் சென்றவன், அம்மா கழிவறையிலிருந்து வரும்வரை காத்திருக்கப் பிடிக்காமல் வெளியில் வந்தவன், திருமணம் பேசி முடித்த இன்னொரு நண்பனுக்கு போன் செய்து பேசுகிறான்.. மறு முனையில் பேசிய நண்பன் சொன்ன விசயம் நல்லதாக இல்லை என்பது தியாகராஜன் முகம் போன போக்கில் நன்கு புரிந்தது.

‘‘என்னப்பா.. நான் ஏன் அப்படி சொல்லப் போறேன். எங்கள் எல்லாருக்கும் ரொம்பவும் பிடிச்சுப்போனதால்தான் திருமண ஏற்பாடுகள் செய்யத் துணிந்தேன். அம்மா ஏன் அப்படிச் சொன்னாங்கன்னு தெரியலியே.. இருப்பா. அம்மாகிட்ட பேசிட்டு கூப்பிடுறேன்’’

’’அம்மா.. அம்மா..’’

‘சொல்லுப்பா ..அம்மா ரூமுக்கு வர்றதுக்கு இப்பதான் வழி தெரிஞ்சுதா.. அம்மாவைப் பாத்து அன்பா, ஆசையா நாலு வார்த்தை பேசலாம்னு வந்தியா.. இல்ல உன் பொண்ணுக்காகத்தான் வந்தியா..?’’

‘‘அம்மா.. ஏம்மா.. இப்படீல்லாம் பன்றே நீ.. உனக்கு என்னதான் பிரச்சனை. சொந்த பேத்தி கல்யாணத்தை நிறுத்தப் பாக்கிறயே.. நியாயமா உனக்கு? அவதான் உனக்கு என்ன துரோகம் செய்தாள்?’’

‘‘ஏண்டாப்பா.. அப்படி கேளு. இன்னைக்கு உன் பொண்ணு கல்யாணத்துல பிரச்சனை வரும்னு தெரிஞ்சதும் ஓடியாந்து நிக்கறியே.. எப்பவாச்சும் என்கிட்ட உக்காந்து 10 நிமிசமாச்சும் பேச மனசு இருக்கா உனக்கு..’’

‘‘அம்மா, என் பிசினஸ் அப்படி. நிக்க நேரமில்லாம ஓடிக்கிட்டிருக்கேன். இதுல உக்கார்ந்து ஊர் நியாயம் பேசவெல்லாம் ஏது நேரம். உனக்கு வேணுங்கற

வசதி எல்லாம் செய்து குடுத்திருக்கேனே. பெல் அடிச்சா ஓடிவர வேலையாள் தயாரா இருக்காங்க. உன்னோட ரூமுக்குள்ள சகல வசதியும் செய்து குடுத்திருக்கேனே.. இதோட என்ன வேணும் உனக்கு''

''ஆமாண்டா, எவ்ளோ நேரந்தான் இந்த மிசினையெல்லாம் பாத்துக்கிட்டு கிடக்கிறது. பைத்தியம் புடிக்கிறா மாதிரி இருக்கு. அதான் பொழுது போவலைன்னு உன் சிநேகிதனை வரச்சொல்லி ஆளை அனுப்பினேன். ''

''வரச்சொன்னதெல்லாம் சரிதான், உன் பேத்திக்கு கல்யாணத்துல இஷ்டமில்லேன்னு ஏன் சொன்னே.. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க காதுக்குப் போனா என்ன ஆவுறது.. அவளைப்பத்தி தப்பான அபிப்ராயம் வந்துடாதா?''

''வரட்டும், நல்லா வரட்டும். எனக்கு என்னா வந்துது. எல்லாத்துக்கும் அவங்கவங்க வேலை பெரிசாப் போச்சு. இங்கன ஒரு கிழவி தனியா கிடந்து அல்லாடுறது யாருக்கு தெரியுது. இப்ப தெரியுதா நான் நினைச்சா என்னா வேணா செய்ய முடியும்னு''

''ஏம்மா இப்படி பைத்தியக்காரத்தனமா பேசிட்டிருக்கே.. நிம்மதியா ஓய்வெடுக்காம இப்படி தேவையில்லாத வேலையெல்லாம் பண்ணிட்டிருக்கியே, உனக்கே இது நல்லாயிருக்கா..''

''இதுக்கே இப்புடி சொல்றியே, மாபிள்ளை வீட்டுக்கே போன் பண்ணி பேசப்போறேனே.. அப்ப என்ன செய்வே.. இதோ பாரு நம்பரெல்லாம் வாங்கி வச்சிருக்கேன்..''

''அம்மா.. இங்க கொண்டாம்மா .. அந்த நம்பரை என் பொண்ணு வாழ்க்கையையே நாசம் பண்ணிப்புடாதே... இதுக்கும் மேல ஏதாவது பேசினாயான்னா எனக்கு கோபம்தான் வரும் பாத்துக்க''

''என்னடா பண்ணுவே.. தர மாட்டேன். அவங்ககிட்ட பேசத்தான் போறேன்.. உன்னால என்னா பண்ண முடியுமோ பண்ணு போடா..''

தியாகராஜனுக்கு கோபம் தலைக்கேற வேகமாக கட்டில் நுனியில் உட்கார்ந்திருந்த அம்மாவின் கையிலிருந்த சீட்டை பிடுங்க எத்தனிக்க, அவர் அதைத் தர மறுக்க,அந்தப் போராட்டத்தில் நொடியில் அம்மா அப்படியே தலை குப்புற கீழே விழ.. அம்மா.. அம்மா.. என்று கத்திக்கொண்டே தியாகராஜன் அவரை உலுக்க, தலை அப்படியே சரிய, அந்த நொடியில் அப்படியே கிலி பிடித்தவன் போல தியாகராஜன் தொம்மென்று உட்கார்ந்து கண்கள் நிலைகுத்திப் போனவன்தான் இந்த நிமிடம் வரை அந்த மனநிலை தெளியவே இல்லை.

அதிர்ச்சியில் அனைவரும் உறைந்து நின்றாலும், பாவம் அந்த மூதாட்டி,அன்பிற்காக எவ்வளவு ஏங்கியிருக்கிறார் என்று புரிந்தபோது குற்ற உணர்ச்சியே மேலிட்டது தாய்க்கும், மகளுக்கும்.

விவரம் அறிந்தவுடன் டாக்டர் மதனுக்கு மருத்துவம் பார்ப்பதில் சிரமம் இருக்கவில்லை. ஹிப்னாடிச முறையில் அவனை ஆழ்நிலை உறக்கத்தில் ஆழ்த்தி, தாய் இறந்தது தன்னால் அல்ல, அவருடைய இறுதிக்காலம் என்பதால் ஏதோ ஒரு சாக்கில் உயிர் பிரிந்துவிட்டது. இதற்கு தியாகராஜன் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்பதால் குற்ற உணர்ச்சி தேவையில்லை என்று புரிய வைத்தார். கொஞ்சம் கொஞ்சமாக தியாகராஜனின் நிலையில் மாற்றம் தெரிந்தது.

கனகலட்சுமியின், விரதமும், வேண்டுதலும் பலித்துவிட்டது என்ற நிம்மதியில் அவளும், தந்தை குணமாகிவிட்டார் என்ற மகிழ்ச்சியில் மகளும் இருந்தபோதுதான் யாரும் எதிர்பார்க்காத அது நடந்துவிட்டது.

ஆம், பூரணமாக குணமாகிவிட்டது என்று மருத்துவர் மகிழ்ச்சியாகச் சொல்லி,மருந்து, மாத்திரைகளெல்லாம் நிறுத்திவிடலாம் என்று சொல்லி அனுப்பிய அன்று இரவு, மனைவி, மகளுடன் கலகலப்பாகப் பேசிவிட்டுப் படுத்தவன் தான். காலையில் எழுந்திருக்கவே இல்லை. இரவு என்ன நடந்திருக்கும் என்று இன்றுவரை யாருக்கும் புரியவே இல்லை!

## 6. யாதுமாகி நின்றாய்..... !

மலைகளின் இளவரசி கொடைக்கானல். தமிழகத்தில் தேனிலவுத் தம்பதிகளுக்காகவே உருவாக்கப்பட்ட இயற்கை வரம். கோக்கர்ஸ் வாக்,கொடைச்சாலையின் தென் புறம், செங்குத்தான சரிவுகளின் விளிம்பில் அமைக்கப்பட்டுள்ள், 1கி.மீ தொலைவுள்ள குறுகிய நடைபாதையின் இரு புறமும் இயற்கை அன்னையின் இன்ப ஊற்று உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். பனி மூட்டம் இல்லாத நாட்களில் தென்புறம் டால்பினின் மூக்கு, பாம்பர் பள்ளத்தாக்கு பெரியகுளம் மற்றும் மதுரை நகரின் பறவைக்கண் காட்சி, என அனைத்தும் இன்னொரு உலகிற்கே இட்டுச்செல்லும்.

”அனாமிகா, என்னம்மா.. பலத்த யோசனையோ?”

“ம்ம்ம்ம்.. “

அனாமிகாவின் இது போன்ற மௌனமொழி இந்த 10 வருடத்தில் பழகித்தான் போய்விட்டது. அவளுடைய இயற்கையான குணத்தையே முழுவதுமாக மாற்றி,முடக்கிப்போட்ட அந்தக் கொடிய விபத்து நினைக்கவே அச்சமூட்டியது. இந்த கொடைக்கானல்தான் தங்கள் வாழ்வின் எத்தனை, எத்தனை பரிமாணங்களைப் பார்த்துவிட்டது என்ற எண்ணமே ஆச்சரியமாக இருந்தது.

***

புதுத்தாலியின் பசுமை மஞ்சள் நிறம், காலை இளங்கதிரொளியில் பளபளக்க,கணவனின் கையோடு, கை கோர்த்துக்கொண்டு, தோளில் லேசாக சாய்ந்து கொண்டு வெள்ளி நீர்வீழ்ச்சியின் சாரலில் சுகமாக நனைந்து, கிறங்கிப்போய்க் கிடந்தாள் அனாமிகா..

“அனாமிகா, நீ இதுக்கு முன்னாடி எப்ப கொடைக்கானல் வந்த”

‘‘ம்ம்ம்... கடைசியா ஸ்டேட்சில இருந்து அக்கா வந்திருப்ப, போன வருசம் எல்லோருமா வந்திருந்தோம்’’

‘‘நாம் இப்ப எவ்வளவு உயரத்துல இருக்கிறோம் தெரியுமா? கடல் மட்டத்திலிருந்து5900 அடி உயரத்துல இருக்கோம்... நினைக்கவே மலைப்பா இருக்கு இல்லே’’

‘‘நான் அதுக்கும் மேலே இருக்கேன்ப்பா......’’

‘‘என்ன சொல்றே நீ.. எப்படி நீ மட்டும் அதுக்கும் மேல இருப்பியாம்....’’?

‘‘ம்ம்ம்.. என்னை மாதிரி நீங்களும் அதுக்கு அந்த உலகத்துக்குள்ளேயே போகணுமாக்கும். அப்பத்தான் புரியும் உங்களுக்கும்’’

‘‘அது சரி, நீ லிட்டரச்சர் ஸ்டுடண்ட் இல்லையா.. அப்படித்தான் பேசுவே.. செல்லியும், கீட்சும் ஷேக்ஸ்பியரும் படிச்சு, கற்பனை உலகத்துல வாழறவங்களாச்சே’’

‘‘இந்த நீர்வீழ்ச்சி 55 மீட்டர் உயரம் இருக்காம்.. பாரேன் போட்டிருக்காங்க..’’ என்று போர்டை காட்டினான் கணவன் மனோகரன்...

போர்டைப் பார்க்கவும், கணவன் சொல்வதைக் கேட்கும் மனநிலையிலும் இல்லை அவள் என்பதை உணரும் நிலையில் இல்லாத கணவனோ மேலே பேசிக்கொண்டே போக, ‘‘மனோ’’ போதும்ப்பா.... என்று அழகிய பிங்க் வண்ண நெயில் பாலிஷ் பூசிய வெண்டை விரலால் அவன் இதழைப் பொத்தினாள்.

ப்ரயண்ட் பூங்காவில் வகை வகையான, வண்ண, வண்ண ரோஜா மலர்களைக் கண்டதும், அதன் அழகில் மயங்கி நின்றிருக்கும் நேரம், அங்கிருந்த 150 வயதான போதி மரம் பற்றி அதிசயமாகப் பேசியவனின் வார்த்தைகள் ஏதும் காதில் விழவேயில்லை அவளுக்கு. 20 ஏக்கர்

பரப்பளவில் பரந்து விரிந்து கிடந்த அந்தப் பூங்காவைப் போன்றே அவளுடைய மனமும் வான எல்லையில், பரவசமாக மிதந்து கொண்டிருந்தது.

இரவு சுற்றிவிட்டு வெகு நேரங்கழித்து ஓட்டல் அறைக்கு வந்தவர்கள் மிகவும் களைப்பு மேலிட அசந்து தூங்கப் போகும் போது, கணவனின் அன்புக் கட்டளையாக,

“அனாமிகா, நாளை காலை 5.30 மணிக்கெல்லாம் எழுந்து கோக்கர்ஸ் வாக்கில் வாக்கிங் போக வேண்டும். எனக்கு தினமும் 5.30 மணிக்கு வாக்கிங் போவது பழக்கம், தெரியுமில்லையா...” என்றது அரைகுறையாகத்தான் காதில் விழுந்தது.“ம்ம்ம்..” என்று சிணுங்கிக் கொண்டே கம்பளிக்குள் இதமாக, கணவனின் அணைப்பில் ஆனந்தமாக உறங்கிவிட்டாள்.

காலை சுள்ளென்று வெயில் முகத்தில் அடிக்க, புரண்டு படுத்தவள், அருகில் கணவன் இல்லாதது கண்டு, பாத்ரூமில் இருக்கலாம் என திரும்பவும் தூங்க முயற்சித்தாள். வயிறு பசியில் குடைய ஆரம்பித்த போதுதான், இரவு சரியாக சாப்பிடாதது நினைவிற்கு வந்தது.; சூடாக ஒரு கப் கா.ஃபி சாப்பிட்டால் தேவலாம் போல இருந்தது. மெல்ல எழுந்து மணியைப் பார்த்தவள், “அட 8 மணி ஆகிவிட்டதே” என்று ஆச்சரியமாக வாக்கிங் போக வேண்டும் என்று சொன்ன மனோ ஒரு வேளை தான் மட்டும் கிளம்பிப் போயிருப்பாரோ என்று யோசித்து மெதுவாக எழுந்தவள் சுற்று முற்றும் பார்த்து, கண்ணாடி வைத்த பெரிய சன்னலின் மொத்தமான திரைச்சீலையை விலக்கி, மெல்லிய சூரிய கிரணங்கள் சுள்ளென்று இதமாக தைத்ததை சுகமாக அனுபவித்து நின்றாள். மெல்லத் திரும்பிப் பார்த்தவள் பாத்ரூம் கதவும் லேசாக திறந்திருக்க, கணவன் வாக்கிங்தான் போயிருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டு கேண்டீனில் போன் செய்து கா.ஃபி வரவழைத்து குடித்துக் கொண்டிருக்கும்போது கதவைத் திறந்து கொண்டு மனோகரன் உள்ளே நுழையும்போதே, முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்க,

“நான் விடிகாலம் 5.30 மணிக்கு வாக்கிங் போக வேணுமின்னு சொன்னேனே, நீ எழுந்திருக்கவே இல்லையே.. ?” என்று சிடுசிடுத்தபோது, சுள்ளென்று

கோபம் வந்தது அனாமிகாவிற்கு..

“ அவ்வளவு சீக்கிரம் எழுந்து போக வேண்டும் என்று என்ன சட்டமா?. சுகமா தூங்கிட்டிருக்கும்போது இந்தக் குளிர்ல எழுந்து அப்படி வாக்கிங் போகணுமா.. 8மணிக்கு மேல போனா என்ன?”

“எதிலும் ஒரு சிஸ்டமேட்டிக்கா இருக்கணும்ங்கற பழக்கமே இல்லையா உனக்கு?எப்பவுமே இப்படித்தானா?”

சாட்டையடியாக வார்த்தைகள் வந்துவிழ கோபத்தில் நா எழவில்லை. என்ன இது இவன் என்னமோ அடிமையைப் போல நடத்துகிறானே.. இவனுடன் காலம் முழுவதும் சேர்ந்து வாழ முடியுமா என்ற அச்சம் வந்தது. அதற்குப் பிறகு இருவரும் அதிகம் பேசவில்லை. அடுத்து ஊசியிலைக் காடு, கொடைக்கானல் ஏரி என எல்லா இடத்திலும், அவன் மட்டும் பள்ளிப் பிள்ளைகளுக்கு பாடம் எடுப்பது போல லெக்சர் கொடுத்துக் கொண்டே வர அவள் கையைக் கட்டிக் கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் வந்து கொண்டிருந்தாள். உணவு விடுதியில் கூட எதுவுமே பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு கொரித்துவிட்டு எழுந்தாள். பல்லில் சிக்கிய துணுக்காய் கணவனின் வார்த்தைகள் உறுத்திக்கொண்டேயிருந்தது.

சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தவர்கள், எதிரில் வயதான தம்பதியர் இருவர்,வடநாட்டுக்காரர்கள் போல இருந்தார்கள்... அவர்களைப் பார்த்தவுடன் எங்கிருந்துதான் அனாமிகாவுக்கு அவ்வளவு உற்சாகம் வந்ததோ, “ஹாய்,அங்க்கிள், ஆண்ட்டி” என்று ஓடிச்சென்று கட்டிக் கொண்டவள், அவர்களிடம் வெகு சரளமாக ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் படபடவென பொரிந்து தள்ளிவிட்டாள். வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த மனோகரன், முதல் முறையாக அவளிடம் இந்த குழந்தைத்தனமான உற்சாகத்தைக் கண்டான். தான் ஒருவன் அருகில் இருக்கும் உணர்வே இல்லாமல் அவர்கள் மூவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். இறுதியாக அவர்கள் “இதுதான் உன் கணவரா, என்ன

செய்கிறார்? ஏன் இப்படி ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருக்கிறார்?'' என்று கேட்க,

இங்கிதமே தெரியாத இந்த மனிதர்கள் யார் என்று கேட்கத் துடித்த நாவை கட்டுப்படுத்த ரொம்பவே சிரமப்பட்டது அவன் கண்களில் தெரிந்தது. இறுதியாக புறப்படும்போது சும்மாப் போகாமல், அவளருகில் சென்று மெதுவாகப் பேசுவதாக நினைத்து அவன் காதிலும் விழும்படியாக, ''ஏன் உன் அப்பா இப்படி உனக்கு கொஞ்சமும் பொருத்தமே இல்லாத மாப்பிள்ளையாக பார்த்திருக்கிறார். எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. உன் அழகிற்கும், அறிவிற்கும் கொஞ்சமும் சமபந்தமில்லாத ஒருவரை ஏன் பார்த்தார்.'' என்று சொல்லி அதிர்ச்சியை கிளப்பிவிட்டுச் சென்றார்கள். அத்தோடு நிற்காமல் மனோவைப் பார்த்து, ''கிடைத்தற்கரிய பொக்கிசமாக உங்களுக்கு மனைவி வாய்த்திருக்கிறாள். அவள் மனம் கோணாமல் நடந்து கொள்ளுங்கள்'' என்று வேறு போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள், அதன் பின் விளைவுகள் பற்றிய எண்ணமே இல்லாமல்!

அதையே மனதில் வைத்துக் கொண்டு கருவிக் கொண்டிருந்த அனாமிகா தேவையில்லாமல் சண்டையை இழுத்தாள். வாக்குவாதம் வளர, மீதமிருந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிட்டு ஊருக்குத் திரும்ப வேண்டும் என்று அடம்பிடித்து சாதித்தும் விட்டாள். அதற்குப் பிறகு எத்தனையோ முறை கோபித்துக்கொண்டு தாய்வீடு போவதும், பெற்றோர் சமாதானம் செய்து திரும்ப கொண்டுவந்து விடுவதும் வாடிக்கையாகிவிட்டது.

நினைவுகள் பின்னோக்கிச் சென்றதில் முன்னால் இருப்பது எதுவுமே கண்ணிற்குப் புலப்படவில்லை..குளிர் சற்று அதிகமாக இருக்கவே சால்வையை இறுக்கிக் கொண்டு, சுயநினைவிற்கு வந்தபோது யதார்த்தம் ரொம்பவே சுட்டது.

''அனாமிகா..... என்னடா பலமா யோசனை. உனக்குப் பிடிச்ச சுட்ட சோளக்கதிர் வாங்கிட்டு வந்திருக்கேன் பார்.. சூடா சாப்பிடு. உனக்காக அதிக

மசாலா போட்டு வாங்கியாந்திருக்கேன் பாரு'' என்றபோது ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தவளாக,

''மனோ, எனக்கு ஒரு சந்தேகம், உன்னோடு வாழ்ந்த இந்த 27 வருட வாழ்க்கையில, ஒரு முறையாவது, ஏதாவது ஒரு சின்ன விசயத்திற்காகவாவது நான் விட்டுக் கொடுத்திருக்கேனாப்பா.... எப்பவுமே நீயேதான் எல்லா விசயத்திற்கும் விட்டுக் கொடுத்திருக்கே இல்லையா?''

'' ஏன் திடீர்னு இப்படி ஒரு சந்தேகம் உனக்கு. நம்ம குழந்தைகள் இன்னைக்கு யாருடைய தயவையும் நாட வேண்டியத் தேவை இல்லாமல் சுயமாக நின்று நல்ல முறையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு முழு காரணமும் உன்னோட வளர்ப்புதானே. குழந்தைகள் மட்டுமே வாழ்க்கை என நீ படித்த படிப்பு, தொழில், என அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்தாயே. இந்த மனசு யாருக்கு வரும். நல்லதை மட்டுமே நினைக்க வேண்டும். அனாமிகா... ''

''இல்லப்பா... ஒரு சின்ன விசயமாவது உனக்காக நான் செய்ததுன்னு ஏதாவது இருக்கான்னு நானும் யோசிச்சு, யோசிச்சு சலிச்சுப்போச்சு. உனக்கு அப்படி ஏதாவது நினைவில் இருக்கா...?

அழகான புன்சிரிப்பை பதிலாக உதிர்த்த கணவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

கிட்டதட்ட 15 வருசமா நம்மகூட இருந்த உங்க அம்மா, கடைசி காலத்துல உடம்பு முடியாமப் போனப்பக்கூட என்னால பாத்துக்க முடியலைன்னு நர்சு போடச் சொன்னேன். நர்சும் ஒழுங்கா வேலைக்கு வரலைங்கறதாலே முதியோர் இல்லத்துல கொண்டுபோய் விடலாம்னு மனசார சொன்னப்போக்கூட நீ என்கிட்ட பெரிசா சண்டையெல்லாம் போடலை. ஆனா, அதற்கப்புறம் உன் அம்மாவிற்கு ஒரு தாயாய் இருந்து அத்தனைப் பணிவிடைகளையும், கிட்டத்தட்ட ஒரு வருடம் நீ ஒருவனே தனியாவே, என்னை கிட்டயே விடாம செய்தியே.. அப்பக்கூட உனக்கு

என்மேல பெருசா கோப்ம் வந்த மாதிரி தெரியல. அவங்கவங்க கடமையை ஒழுங்கா செய்யணும்னு பாடம் சொல்லிக் கொடுத்த நீ,இதையும் உன் கடமையா சுமக்க துணிஞ்சிட்டே இல்லையா?''

பழைய நினைவுகளில் ஒன்றுகூட தன்னை ஒரு நல்ல குடும்பத் தலைவியாகக் காட்டவில்லையே என்ற மனபாரம் அனாமிகாவின் கண் கலங்கலில் தெரிந்தது. . தொலைந்து போன நாட்களை கணக்கிலெடுப்பதைக் காட்டிலும், மீட்டெடுத்த நாட்களை வாழ்ந்துதான் பார்ப்போமே என்ற நம்பிக்கையை ஊட்டிய அந்த சில வார்த்தைகள்......

நிற்காமல் காற்றாக ஓடிக் கொண்டிருந்தவள் வாழ்க்கையில் அனைத்துமே இழந்தது போன்ற ஒரு வெறுமை, சொந்த உயிரே பெரும் பாரமாய் ஆகிப்போக,அந்தச் சம்பவம் நடந்த பிறகு யதார்த்தம் புரிய,வெறுப்பின் உச்சத்தில் விடியாத இரவுகளாகவே பொழுதுகள் கழிந்தது.

அன்று வழக்கம் போல காலையில் யோகா வகுப்பிற்குச் செல்வதற்காகக் கிளம்பியவள், மனோவிற்குக் காய்ச்சல் இருந்ததால் பணிக்குச் செல்லாமல் அன்று வீட்டில் இருந்தபோதும் கஞ்சி வைத்துக் கொடுத்து, கூடவே ஒரு மாத்திரையும் கொடுத்து தூங்கச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். கிளம்புவதற்கு தாமதமானதால் வேகமாக வண்டியை விரட்டிய சமயம், குழந்தை ஒன்று குறுக்கே ஓடிவர செய்வதறியாது கட்டுப்பாடிழந்த நிலையில் தெருவோரத்தில் இருந்த ஒரு பெரிய மரத்தில் மோதி பெரும் விபத்திற்குள்ளானதில் உயிர் பிழைத்ததே பெரும்பாடாகிப் போனது. ஆனாலும், மீதி வாழ்க்கை முழுவதும் சக்கர நாற்காலியிலும், அன்றாடக் கடமைகளையும், இயற்கை உபாதைகளையும் கூட ஒருவரின் உதவியின்றி செய்ய முடியாதவாறு இடுப்பிற்குக் கீழே உள்ள பகுதி மொத்தமாகச் செயலிழந்து போனது பற்றியும், அன்று முதல், எந்த கணவனை மென்மையான காதலை வெளிப்படுத்தத் தெரியாத சடம் என்று நிந்தனை செய்தாளோ, எந்தக் கணவனால் தம் மனைவியை மகிழ்ச்சிப்படுத்த இயலாத கையாலாகாதவன் என்று சொல்லம்புகளால் துளைத்தெடுத்தாளோ, அதே கணவனால் இன்று ஒரு குழந்தையைப்போல அனைத்துத் தேவைகளுக்காகவும் காத்திருந்து

கடமையாற்றும் கணவனின் தயாள குணத்தினால் குற்ற உணர்வின் வேதனையால் குமைந்துக் கிடந்தாள்.

இதோ இன்றும் கோக்கர்ஸ் வாக்கில் மனோவின் மென்கரங்கள் தம்முடைய சக்கர நாற்காலியின் இரும்புப் பிடியை அழுத்திப் பிடித்து செலுத்திக் கொண்டிருக்க கரைந்து போன நினைவுகளின் பாரத்தின் அழுத்தம் அதிகமாக திடீரென தான் செய்வது பற்றிய உணர்வே இல்லாமல் சக்கர நாற்காலியை கண்,மண் தெரியாமல் வேகமாக உருட்டிச் சென்று...... அதள பாதாளத்தில் குதிக்க முயன்றாள். சூழ்நிலையின் அபாயம் உணர சில நொடிகளே ஆன நிலையில் சட்டென்று எட்டிப்பிடித்து, அவளைப் பாதுகாத்த மனோகரன், கண் இமைக்கும் நேரத்தில் கால் தடுக்கி தான் சரிவில் விழுந்ததைக் கண்ட அனாமிகா வீல் என்ற அலறலுடன் மயங்கிச் சரிந்தாள்.

மெல்ல கண் திறந்து பார்த்தபோது சுற்றி யார் யாரோ உறவுகள் இருந்தும்,பார்வை மட்டும் தீவிரமாக மனோவைத் தேடிக்கொண்டிருந்தது. நான்கு நாட்களாக சுய நினைவின்றி தான் கிடந்திருப்பது அவர்கள் பேச்சில் புரிந்தது. மெல்ல அன்று நடந்தது நினைவிற்கு வர, ஐயோ மனோவிற்கு என்ன ஆனதோ தெரியவில்லையே என, தன்னையறியாமல், ‘மனோ’ என்று கத்திக் கொண்டே எழ முயன்றாள். சகோதரியின் சமாதானம் ஏதும் காதில் விழவேயில்லை அவளுக்கு.

மனோவிற்கு என்னமோ ஆகிவிட்டது என்ற அதிர்ச்சியில் உறைந்து கிடந்தவளுக்கு, மீண்டும் கண்கள் செருக எத்தனிக்க அன்பான அந்த ஸ்பரிசம்,தலையை வருட, அடுத்த நொடி, மனோ... என்று தேட ஆரம்பித்தாள். கையில் சிறிய கட்டுடன் காலிலும் லேசான காயங்களுடன், மனோ அருகில் நிற்பதைப் பார்த்தவுடன் போன உயிர் திரும்பி வந்தது போல இருந்தது அவளுக்கு. அவள் பார்வையில் இருந்த குழப்பத்தைத் தெளிவாக்கும் விதமாக்,

‘‘என்னம்மா.. அப்படிப் பார்க்கிறே. அன்னைக்கு உன்னைப் பிடிக்க எடுத்த முயற்சியில கொஞ்சம் கால் சிலிப் ஆகி அந்தப் பள்ளத்தில நான்

விழுந்திட்டேன்,ஆனா சரியா ஒரு மரத்தில் மாட்டித் தொங்கியதால் கீழே விழாமல் தப்பிச்சுட்டேன். அதுவும் அப்படி ஒன்னும் பெரிய பள்ளம் இல்லை. ஒருவேளை மரம் என்னைக் காப்பாற்றாமல் கைவிட்டிருந்தால் கை, கால் ஏதாவது போயிருக்கலாம்.. என் செல்லத்தைக் கவனிப்பதில் சிரம்மேற்பட்டிருக்கலாம். நல்ல வேளையாக சின்ன சிராய்ப்புகளுடன் தப்பிச்சுட்டேன். உன்னை விட்டுட்டு அவ்வளவு சீக்கிரமா போயிடுவேன்னா நினைச்சே..? நீ இருக்கும் வரை நானும் இருப்பேன் அனாமிகா..''

அலங்காரமில்லாத அவனுடைய அந்த யாதார்த்தமான வார்த்தைகள் அவளை மௌனமாக்கியது. ஒன்றுமே பேசாமல், மெல்ல அவன் கைகளை எடுத்து கண்களில் ஒற்றி, முத்தமிட்ட போது ஓராயிரம் அர்த்தங்கள் அவர்களுக்குப் புரிந்தது. அவள் மனதில் ஏனோ 150 ஆண்டு பழமையான அந்த போதி மரம் நினைவிற்கு வந்தது. அங்கு போய் சுகமாக சிறிது நேரம் இருக்க வேண்டும்போல் தோன்றியது!.

இளமைக் காலம் உணர்வுகளுக்கு ஆட்பட்டு குற்றங்குறைகளை காண்பதிலேயே செலவாகிவிட, இன்று ஆத்மார்த்தமான அந்த நெருக்கம் , சாய்ந்து கொள்ள ஒரு தூணாய், நிழல் கொடுக்கும் ஆலமரமாய் விரிந்து நிற்கும் மனோ எனும் அன்பு நெஞ்சம்..... எங்கோ வானொலியில் பாரதியின் வரிகள் ஒலிப்பது காதில் விழுந்து உடல் சிலிர்த்தது .....

**யாதுமாகி நின்றாய்—காளி!**

**எங்கும் நீதி றைந்தாய்;**

**தீது நன்மையெல்லாம்—காளி!**

**தெய்வ லீலை யன்றோ;**

**பூத மைந்தும் ஆனாய்—காளி!**

**பொறிக ளைந்தும் ஆனாய்;**

**போத மாகிநின்றாய்—காளி!**

**பொறியை விஞ்சி நின்றாய்**

**இன்ப மாகிவிட்டாய்—காளி!**

**என்னு ளேபு குந்தாய்**

**பின்பு நின்னையல்லால்—காளி!**

**பிறிது நானும் உண்டோ?**

**அன்ப ளித்துவிட்டாய்—காளி!**

**ஆண்மை தந்து விட்டாய்;**

**துன்பம் நீக்கிவிட்டாய்—காளி!**

**தொல்லை போக்கிவிட்டாய்!!**

## 7. வெளுத்ததெல்லாம் பால்தான்!

ஏண்ணா.. உங்களுக்கே இது நியாயமா இருக்காண்ணா.. இந்த 55 வயசுல என்னை தையல் கிளாசுக்குப் போகச்சொன்னேள். முடியாட்டியும் உங்க தொல்லை தாங்காம போய் என்னோட இரவிக்கைக்கு பேப்பர் கட்டிங்காவது போட்டு தைச்சுப் பழகிண்டு வந்தேன்.. ஆனா பென்ஷன் தர்றவாகிட்ட, அசோசியேஷன் மீட்டிங்குல போய் சட்டம் பேசிண்டு, அழிச்சாட்டியம் பண்ணிண்டு இருக்கேளே.. இதுக்கு என்னண்ணா பன்றது? நீங்க கொடுத்த பெட்டிஷன் பெரிய புயலையேக் கிளப்பிடித்துன்னு எல்லோரும் புலம்பறாளே.. அந்த கலாட்டுவுல இப்ப பென்சனை நிறுத்தி வச்சிருக்காளே அவாளைப்போயி இப்ப கேக்க முடியாம தேமேன்னு உக்கார்ந்திண்டிருக்கேளே? இந்த மாசம் சாப்பாட்டிற்கு என்னண்ணா பன்றது?

''பின்ன என்னடி செய்யிறது? ஆத்துல நடக்குறதெல்லாம் பார்த்துண்டுதானே இருக்கே.... போன் மாசம் உன் இரவிக்கையை எடுத்துண்டு டெய்லர் கடைக்குப்போனா அங்க பெரிசா போர்ட் வச்சிருக்கான். ஒரு சாதா இரவிக்கைக்கு 170 ரூவா கேக்கறான். இத்தனைக்கும் அதுல ஒரு சன்னலோ

அல்லது கவுரோ எதுவுமே இல்லாத பிளெயின் இரவிக்கை. இதுல வேடிக்கை என்னன்னா ஜாக்கிட் துணியே 80 ரூபாய்தான்.

நேத்து என்ன நடந்தது, நீயே சொல்லு. துணியை சலவை பண்ண வந்த வண்ணார் பையன் என்ன சொன்னான்..

'சாமீ.. இனிமே எங்க சங்கத்துல எடுத்த முடிவுபடி காட்டன் புடவைக்கு 25 ரூபா, சட்டைக்கு 10 ரூபா, பேண்ட்டுக்கு 15 ரூபா, ஜாக்கெட்டுக்கு 5 ரூபாய்னு கூலியை ஏத்திப்பிட்டோம்னு சொன்னானே, அவனைப்போயி கேளுடி... ஏண்டா இப்படி அழிச்சாட்டியம் பண்றேன்னுட்டு''

''அதெப்படிண்ணா முடியும், நம்ம ஒருத்தருக்காகவா ஏத்தறான், ஊருக்கே உண்டானது நமக்கும்''

''அதுசரி. நேத்து முடி வெட்டிக்க நாசுவன் கடைக்குப் போனப்ப, எங்க சங்கத்துல முடிவெட்ட ரூ 150, சவரம் பண்ண ரூ 50, தலைக்கு கண்டீசனரோட ஷாம்பு பாத் எடுக்கறதுக்கு ரூ 150, இப்படி இஷ்டத்துக்கு ஏத்திப்பிட்டானுங்களே..அவனைப் போயி நீ கேக்க முடியுமா... ஏண்டாப்பா இப்படி அழிச்சாட்டியம் பண்றேன்னு''?

''அதெல்லாம் சரிதாண்ணா, பென்சன் வர்றதையே நிறுத்திப்பிட்டேளே? இப்ப என்னன்னா செய்யிறது.. இதுக்கு யாரைப்போயி கேக்கப் போறேள்?''

அதுதாண்டி நேக்கும் புரியல? அசோசியேஷன்ல பெட்டிசன் குடுத்திருக்கேன். சீக்கிரமா பதில் வரும்னு செக்ரட்டரி சொல்றார். அது வரைக்கும் சமாளிக்கணும். வேறவழி இல்ல..

''ஏண்ணா, பையன் அமெரிக்காவுல நன்னாத்தானே சம்பாதிக்கிறான். அவனாண்டையும் வாங்கக் கூடாதுன்னா அப்பறம் சோத்துக்கு என்னதான் பண்றதுண்ணா.. சொல்லுங்கோ..''

''எல்லாம் நான் பாத்துப்பேண்டி.. இத்தனை நாள் என்ன பண்ணினேன்.. உனக்கு ஒழுங்கா சாப்பாட்டுக்கு, அதுக்கு இதுக்குன்னு பணம் கொடுத்துண்டுதானே இருக்கேன்.. ''

‘‘ஆமாண்ணா,அதான் நீங்க கொடுக்கற இலட்சணம் தெரியறதே.. அன்னைக்கு பால்காரன் கூட எவ்ளோ கேவலமா பேசிட்டுப் போனான், ஒரு பால் காசு கூட மாமா உங்கள நம்பி தர மாட்டாரா மாமின்னு நாக்கைப் புடுங்கிக்கறா மாதிரி கேட்டுட்டுத்தானே போனான்.. ‘‘

‘‘அதுக்காகத்தாண்டி அந்தப் பால்காரனையே நிறுத்தினேன்.. வேற என்ன பண்ண முடியும் அதுக்கு’’

‘‘ஏண்ணா இப்படி இருக்கேள் ஒன்னுமே புரியாத மாதிரியே நடிக்கிறேளே.. எப்படிண்ணா அது? தூங்கறவாள எழுப்பலாம், ஆனா தூங்கறாப்போல நடிக்கறவாளை எழுப்ப முடியாதுங்கறதுக்கு நீங்கதாண்ணா சரியான உதாகரணம்... போதுண்ணா.. சலிச்சுப்போச்சு, வாழ்க்கையே....’’

வக்கீல் குமாஸ்தா சாதாசிவ ஐயர்னா, அந்த ஏரியாவுல தெரியாதவரே இருக்க முடியாது. அவ்வளவு கறார் பேர்வழி. எதுக்கெடுத்தாலும் சட்டம் பேசிக்கொண்டு, ஆனா,ஊன்னா, பெட்டிசன் எழுதிப் போட்டுடுவார்னு எல்லோரும் அவர்கிட்ட ஒரு அடி தள்ளி நின்னே பழகுவார்கள். அதையும் பெருமையாகவே எடுத்துக்கொள்வார் மனிதர். எல்லோருக்கும் பெரிய ஆச்சரியமே இந்த கமலா மாமி எப்படித்தான் இத்தனை வருசமா இந்த மாமாகிட்ட குப்பை கொட்டிக்கிட்டு இருக்கா என்பதுதான். அதுக்கும் இப்படி ஒரு முடிவு வரும்னு யாரும் நினைச்சுக்கூடப் பார்க்கவில்லைதான்.

அன்று காலை குளித்து பூஜை, புனஸ்காரமெல்லாம் முடித்து சாப்பிடத் தயாராக மேசைக்கு அருகில் வந்தவர் அப்போதுதான் கவனித்தார், வழக்கமாக இந்த நேரத்தில் சாப்பாட்டு மேசை கமகமவென மணந்து கொண்டிருக்கும். இன்று காலியாக இருந்ததுடன் சகதர்மினி கமலாதேவி இருக்கும் இடமே தெரியாமல் வீடே அமைதியாக இருந்தது. ’கமலா’ என்று உரக்க குரல் கொடுக்க வாயைத் திறந்தபோது, அலைபேசியின் அழைப்பு அதைத் தடை செய்தது.

‘ஹலோ... வணக்கம். சொல்லுங்கோ’’

‘‘என்னத்த சொல்றது சதாசிவம், இதை நான் எதிர்பார்க்கலை, அதுவும் இந்த வயசுல.... நோக்கு சப்ஷடியப்த பூர்த்தி ஆயிடுத்தோ?’’

‘என்னப்பா ஆச்சு உனக்கு. காலங்கார்த்தாலே இன்னைக்கு நான் தான் கிடைச்சேனோ உமக்கு.. பொழுது போகலையோ’’

‘‘அடப்போப்பா.. இங்க வந்து பாரு.. உடனே கிளம்பி வா என் ஆபீசுக்கு. இங்க உன் ஆம்படியாள் பன்ற கூத்தை வந்து பாருப்பா... என் வேலையெல்லாம் கெட்டுப் போகுது’

‘‘என்னப்பா சொல்ற.. என் ஆம்படையாளா.. இங்கதானே இருந்தா.. அங்க எப்படி வந்தா..?’’

‘‘ஏன் வந்தாள்னு கேளுப்பா.. அதுதான் சரியா இருக்கும், அதெல்லாம் இருக்கட்டும் நீ உடனே கிளம்பி வாப்பா..’’

‘‘என்ன் மாமி, இந்த வயசுல இதெல்லாம் உங்களுக்குத் தேவையா... நாலு பேர் கேட்டா சிரிப்பாங்களே... உங்க மருமகப் பொண்ணே உங்களை மதிக்க மாட்டாளே.. ‘‘

‘‘அதைப்பத்தியெல்லாம் நேக்கு கவலை இல்லே.. எனக்கு அந்த மனுசர்கிட்டயிருந்து டைவர்ஸ் வேணும்.. ஆமா.. உங்களால முடியாதுன்னா சொல்லுங்கோ. நான் வேற நல்ல அட்வொகேட்டா பார்த்துண்டுடுறேன்,ஆமா.. இந்த அட்வைஸெல்லாம் வேண்டாம் நேக்கு’’

‘பாத்தியாப்பா, சதாசிவம் இப்படித்தான் வந்ததிலிருந்து என் ஜீனியர்கிட்ட மிரட்டி உருட்டிண்டிருக்கா உன் தர்மபத்தினி’’

:’’என்னவாம், இப்ப புதுசா பிரச்சனை?’’

‘‘இதோட நாலாவது தரமா வரேன் நான், டைவர்ஸ் கேட்டுண்டு. நீங்களும் ஒவ்வொரு தரமும் ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பிடுறேள். இந்த முறை எந்த சமாதானமும் நேக்கு வாண்டாம், நியாயம்தான் வேணும்.. உங்களால முடியாதுன்னா சொல்லிடுங்கோ..நான் வேற வக்கீல பாத்துக்கறேன்’’

“சரி… சரி.. ஆன்னா.. ஊன்னா மிரட்டுறேளே…. உங்க பிரச்சனைதான் இப்ப என்னா, அதைச் சொல்லுங்கோ..”

“அதை ஏன் கேக்கறேள்.. வர வர இவரோட அழிச்சாட்டியம் தாங்கலை.. போகப்போக அதிகமாயிண்டேயிருக்கு. என்னோட, டிரைவிங் லைசென்ஸ், வோட்டர்ஸ் ஐடி கார்ட், ஆதார் கார்ட் எல்லாத்தையும் கூட பிடுங்கி வச்சுண்டு தான் மட்டும்தான் பத்திரமா வச்சிக்க முடியும்ங்கறாப்பல பேசிண்டிருந்துட்டு நேக்கு எல்லாந்தெரியும்னு வாய் ஓயாம சொல்லிண்டிருந்திட்டு, நேத்து 200 கி.மீ டிராவல் பண்ணி பாஸ்போர்ட் ரினியூவலுக்காகப் போனா, எல்லாத்தையும் ஆத்துலயே வச்சிப்புட்டு வறார்.. 4 மணி நேரம் வெய்யில்ல கியூல நின்னு உள்ளே போனா ரிஜெக்ட் ஆயிடுத்து .. என் பொண்ணு அடுத்த வாரம் கிளம்பற அவ ஃபிரண்டோட என்னையும் வரச்சொல்லியிருக்கா.. நிம்மதியா போய ஆறு மாசம் அமெரிக்காவுல இருந்துட்டு வரலாம்னா, அதையும் கெடுக்கறாரு.. இனிமே டைம் இல்ல.. கோபம் வருமா, வராதா சொல்லுங்கோ… அடக்கு முறைக்கு ஒரு அளவு வேணாமா.. இனிமே பொறுத்திண்டு போக முடியாது என்னால.. நான் ஃப்ரீயா இருக்கனும்னு முடிவு பண்ணியாச்சு ஆமா.. எனக்கு விடுதலை வேணும் அவ்ளோதான்”

வக்கீல் ரங்காச்சாரி சதாசிவத்தின் நண்பர்தான் என்றாலும் நியாய, அநியாயம் தெரிந்த நல்ல மனிதர். கமலாவை தன் உடன் பிறந்த சகோதரியாகவே நினைப்பவர். அதனாலேயே இவரை மீறி வேறு ஒரு வக்கீலிடம் செல்ல மனம் இடம் கொடுக்கவில்லை அவளுக்கு. இதோடு நான்கு முறை சமாதானம் செய்து அனுப்பியாகிவிட்டது. இந்த முறை ஒரே பிடிவாதமாக இருப்பதால் ஒன்றும் செய்ய முடியாமல் புரொசீட் செய்ய வேண்டியதாகிறது என்று வருத்தமாக சொல்லிவிட்டு கமலாவை கொஞ்ச நேரம் வெளியில் உட்காரச் சொல்லி, சதாசிவத்திடம் தனியாகப் பேச வேண்டும் என்றார் ரங்காச்சாரி. ரொம்ப நேரமாக அப்படி என்ன பேசுகிறார்களோ தெரியவில்லையே என்று யோசித்தவள், மெல்ல கதவினருகில் செல்ல நினைத்தபோது உள்ளேயிருந்த ஜீனியர் வக்கீல் படாரென கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவர், திரும்ப கதவைச் சரியாகச் சாத்தவில்லை. அந்த இடைவெளியில் கணவர் தன் நண்பரிடம் ஓவென்று கதறி அழுதுகொண்டு அப்படி என்ன சொல்கிறார்

என்று உற்றுக் கேட்டவள் அப்படியே உறுகித்தான் போய்விட்டாள். ஆம், அவர் வேண்டுமென்றேதான் அவளுடைய ஐட்ண்டிட்டி கார்ட் எதையும் பாஸ்போர்ட் ஆபீசிற்கு எடுத்துச் செல்லவில்லையாம். ஆறு மாதம் மனைவியைப் பிரிந்து இருப்பது நினைக்கக்கூட முடியாத காரியமாம். அதை நேரிடையாகச் சொல்ல ஈகோ இடம் கொடுக்கவில்லையாம்.. இப்போது அவள் ஒரேயடியாக பிரிந்து போனால் செத்தே விடுவாராம்.. இதைக்கேட்டதும் அப்படியே இதயமே நின்றுவிடும் போலாகிவிட்டது கமலாவிற்கு. அது வக்கீல் ஆபீஸ் என்பதையும் மறந்து ஓடிச்சென்று, அப்படியே கணவனின் கையைப் பிடித்துக்கொண்டு,

“ஏண்ணா.. என்ன சொல்றேள்.. அப்டீல்லாம் சொல்லாதேள் ஏண்ணா இப்படி பெரிய வார்த்தையெல்லாம் சொல்றேள்.. உங்களை விட்டுட்டு நான் மட்டும் சந்தோசமாவா இருக்கப் போறேன். ஏதோ கோவத்துல சொல்லிட்டேண்ணா, அதுக்குப்போயி இப்படி சின்னக் குழந்தையாட்டமா அழறேளே.... உடம்பு கெட்டுடப்போகுது. வாங்கோண்ணா ஆத்துக்குப் போகலாம். இன்னும் சாப்பிட்டிருக்க மாட்டேளே.. பக்கத்துல இருக்கற பாலாஜி பவன் போயி சாப்பிட்டுட்டு ஆத்துக்குப் போலாம் வாங்கோ...”

“ஐய.. அங்கயா... பாலாஜி பவன் ஓட்டல்காரன் கொள்ளை லாபமில்ல அடிப்பான்.. நாம் வழக்கமா போற.... இல்லல்ல நீ எங்க சொல்றியோ அங்கேயே போலாம்..”

“இல்லண்ணா நீங்க சொன்னா சரியாத்தான் இருக்கும்.. உங்க விருப்பம் போலயே செய்யுங்கோ ”

## 8. கனிகரம்

”அம்மா.. அப்பா நம்மளை விட்டுப்போயி எத்தனை வருசம் ஆவுதும்மா...?
“அவுரு போயி எட்டு வருசம் ஆவுதேப்பா.. நீ காலேசுல சேர்ந்த முதல் வருசமே போயிட்டாரே... நிமிச நேர நெஞ்சு வலியில பொசுக்குனு போயிட்டாரே..”

“நானும் வருசா வருசம் வரும்போதெல்லாம், உன்கிட்ட இந்த தறிப்பட்டறையெல்லாம் ஏறகட்டிட்டு என்கூடவே வந்துடுன்னு சொன்னா கேக்க மாட்டேங்கறியேம்மா… “

‘என்னமோப்பா, உங்க அப்பாரோட வாழ்ந்த இந்த மண்ணை உட்டுப்போட்டு எனக்கு எங்கியும் வர புடிக்கலைப்பா. என்னமோ அந்த மகராசரு யாபாரத்துல கடனும் வக்காம, சொத்துல வில்லங்கமும் பண்ணாம போனதால நம்ம பொழைப்பும் பிரச்சனை இல்லாம போவுது. இருக்குற சொச்ச காலமும் இங்கியே இப்புடியே கிடந்துட்டுப் போயுடலாம்னு தோணுது. தறிப்பட்டறையை லீசுக்கு உட்டுப்போடலாம்னு இருக்கேன்..”
“அம்மா அதெல்லாம் வாணாம். எல்லாத்தையும் வித்துப்புட்டு நீ என்கூடவே மலேசியாவுக்கு வந்துடும்மா. உன் பேரன் கூட இருக்கணும்னு உனக்கு ஆசையே இல்லையா..?”

பேரன் பற்றி சொன்னவுடன் அந்தப் பாட்டிக்கு பாசம் பொத்துக்கொண்டு வந்தாலும், சொந்த ஊரை சுத்தமா காலி பண்ணிட்டுப் போக மனம் இல்லை. ஆனாலும் மகனின் பிடிவாதமும், பேரனின் மீது இருந்த பாசமும் கண்ணை மறைக்க மகன் முருகானந்தன் சொன்னதை எல்லாம் அப்படியே கண்ணை மூடிக்கொண்டு கேட்கத் துணிந்தாள். அதன் பலனையும் விரைவிலேயே அனுபவித்தாள். தறிப்பட்டறை, குடியிருந்த கடல் போன்ற வீடு, 2 காலி மனைகள்,தட்டுமுட்டு சாமான்கள் என அனைத்தையும் விற்று கையில் வந்த 2 கோடி ரூபாயும் அப்படியே மகன் கையில் கொடுத்தபோது பேரன் முகம் மட்டுமே கண்ணில் தெரிந்தது.

முதன் முதலில் கிராமத்தை விட்டு பட்டணத்தில் அதுவும் பிரம்மாண்டமான சென்னை விமான நிலையத்தைப் பார்த்தவுடன் மலைப்பாக இருக்க மகனின் கையை இருக்கிப் பிடித்துக்கொண்டாள் அந்தத் தாய். ஏனோ சிறு வயதில் தன் முந்தானையினுள் ஒளிந்து கொள்ளும் அந்தக் குழந்தை முருகானந்தனின் முகம் நினைவிற்கு வந்தது. இன்று அதே நிலையில் தான் இருப்பதை நினைத்து வேடிக்கையாக இருந்தது. கையில் பேப்பரையும், ஏதோ புத்தகங்களையும் வைத்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் மகனைப்

பார்க்க பெருமையாக இருந்தது. ஒரு ஓரமாக பஞ்சு மெத்தை இருக்கையில் உட்கார வைத்துவிட்டு சென்ற மகன் திரும்பி வருவான் என்று காத்திருந்தவர் அசதியில் அப்படியே கண்ணயர்ந்துவிட, எவ்வளவு நேரம் தூங்கிப் போனாரோ தெரியவில்லை.

“ஹலோ, அம்மா.. அம்மா..”

யாரோ கோட், சூட் போட்ட புதிய மனிதர்கள் முன்னால் நிற்க ஏதும் புரியாமல் திருதிருவென விழித்தவரை, யார்,எங்கிருந்து வருகிறார் என்று விசாரிக்க அப்போதுதான் அருகில் மகன் இல்லாததை உணர்ந்த அந்த தாய் குழந்தையைப்போல சுற்றும் முற்றும் மகனைத் தேட, அருகில் தன்னுடைய டிரங்க்கு பெட்டி மட்டும் இருக்க, மகனின் விலையுயர்ந்த அனைத்து பெட்டிகளும் காணாமல் போயிருந்தது. இரவு வெகு நேரமானதால் அங்கு தனியாக இருப்பதற்கு விமான நிலைய அதிகாரிகள் தடைவிதிக்கவும், கண்களைக் கட்டி காட்டில் விட்டதுபோல ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து ஆண்டவன் போல தூரத்து உறவினர் துரை, சிங்கப்புரிலிருந்து திரும்பியவர் அங்கு வந்துசேர, சொத்தையெல்லாம் பிடுங்கிக் கொண்டு தாயை அத்துவானத்தில் விட்டுச்சென்ற மகனின் துரோகத்தைக்கூட உணராத அந்த பரிதாபமான தாயின் நிலையைக் கண்டு மனம் பதறிய துரை தன்னுடன் தன் வீட்டிற்கு வரும்படி பலமுறை அழைத்தும் மறுத்துவிட்டதால், அவரைக் கட்டாயப்படுத்தி, ஒரு முதியோர் இல்லத்தில் தன் கைப்பணம் ரூ. 50,000டெபாசிட்டாக செலுத்தி சேர்த்துவிட்டுச் சென்றார்.

பழைய நினைவுகளில் மூழ்கித் தவித்திருந்த முத்தாயம்மாள் யாரோ அருகில் நின்று மெல்லிதாக அழைப்பது புரிய மெல்ல அதிலிருந்து மீண்டு வந்து அருகில் தன்னுடைய மேனேஜர் மணிகண்டன் நிற்பதைப் பார்த்து சுய நினைவிற்கு வந்தார்.

'கனிகரம்’ அமைப்பினரின் வெற்றி விழா மேடை. இந்த ஆண்டின் நான்காவது விருதைப் பெறும் நிறுவனம் என்பதால் பொது மக்களின் கவனம் மட்டுமல்லாமல் வெளி நாட்டு தொழில் முனைவோர் அமைப்புகளின்

பிரதிநிதிகள், மருத்துவ ஆய்வாளர்கள், பிரபல சிறு தொழில் நிறுவனங்கள்,பன்னாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொள்ள தங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருந்ததால், இந்த விழா எவரும் எதிர்பாராத வகையில் தமிழ் நாட்டின் பெயரை உலகம் முழுக்க நொடிப்பொழுதில் மின்னச் செய்த ஒரு விழா மேடையாக மாறிப் போனது! முதலமைச்சரின் கவனத்திற்கு இந்த விசயம் வந்தபோது இவ்வளவு நாட்கள் அமைதியாக இத்துனை அருமையாக செயல்பட்டுக் கொண்டிருந்த இப்படி ஒரு நிறுவனத்தின் உரிமையாளர்களை உடனே சந்திக்க ஏற்பாடு செய்யச் சொல்லி ஆணை பிறப்பிக்க, பரபரவென அடுத்த ஐந்து மணி நேரத்தில் முதலமைச்சரின் அலுவலகத்தில் அந்தச் சந்திப்பிற்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். மற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் தள்ளி வைத்துவிட்டு முதலமைச்சர் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் காரணம் புரிந்தபோது அதற்கு அந்த தகுதி இருப்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

பெரும் எதிர்பார்ப்புடன் தம் வரவேற்பறைக்கு அவர்களைச் சந்திக்க வந்த முதலமைச்சருக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. வேறு யாரையோ மாற்றிக் கூட்டி வந்து விட்டார்களோ என்ற சந்தேகம் வர தன் உதவியாளரைத் திரும்பிப் பார்க்க, அவர் அதைப் புரிந்து கொண்டு அங்கு சங்கடத்துடன் நாற்காலியின் விளிம்பில் அமர்ந்து கொண்டிருந்து முதலமைச்சரைப் பார்த்தவுடன் சட்டென்று எழுந்து நின்று, தயக்கத்துடன் வணக்கம் சொன்ன, 60வயது மதிக்கத்தக்க, அல்லக் கொசுவம் வைத்த சாதாரண நூல் சேலை கட்டிய,முகத்திலும், தலையிலும் எண்ணெய் வழிய, நிற்கும் ஆறு பெண்களைக் காட்டி,இவர்கள்தான் ’கனிகரம்’ குரூப் ஆப் நிறுவனங்களின் முதலாளிகள் என்று சொன்ன போது அசந்து போய் தன்னையறியாமல் கையெடுத்துக் கும்பிட்டார்,முதலமைச்சர். அவருடைய விரிந்த பார்வையும், ஆழ்ந்த பேச்சும், இறுகிய முகமும், அவர் ஆச்சரியத்திலிருந்து மீளாதது தெரிந்தது.

மிகச் சாதாரண கிராமப்புற பாட்டி வைத்திய விசயங்களை மிக அழகாகத் திட்டமிட்டு, சக்கரை வியாதி, மஞ்சள் காமாலை, டெங்கு காய்ச்சல், பன்றிக்

காய்ச்சல், இரத்தக் கொதிப்பு, கேன்சர் வியாதி, ஆட்டிசம் என அனைத்திற்கும் உணவு முறை மூலமாக நோயைக் கட்டுப்படுத்தும் மூலிகைகளால் ஆன பொடிகள், டயட் ஊறுகாய்கள், தொக்கு வகைகள், என அனைத்தையும் தயாரித்து விற்க ஆரம்பித்தவர்கள், நாளடைவில் மக்களிடம் பிரபலமானதோடு மருத்துவர்களும் அதன் மதிப்பை உணர்ந்து தங்கள் நோயாளிகளுக்கு பரிந்துரைக்க ஆரம்பிக்க அப்படியே சிறிது சிறிதாக வளர்ந்த நிறுவனம் இன்று பெரும் ஆய்வுக் கூடங்களுடன், பல ஆய்வாளர்கள் மற்றும் டாக்டர்களுடன் மிகச் சிறந்த முறையில் உயர்ந்து நிற்கிறது. முதலமைச்சர் ஆர்வம் தாங்காமல் அவர்களுக்கு இந்த எண்ணம் உருவான விதம் பற்றி அறிந்து கொள்ள விரும்பினார்.

’கனிகரம்’ நிறுவனத்திற்கு பிள்ளையார் சுழி போட்ட முத்தாயம்மாள் பேச ஆரம்பித்து,

‘‘ஐயா, நீங்க நினைக்கிற அளவுக்கு பெரிய சாதனை பண்ணப்போறோம்னு நினைச்செல்லாம் ஏதும் செய்யலீங்க. என்னமோ அந்த நேரத்துல பிழைப்புக்கு ஒரு வழி தேவையா இருந்தது. நமக்கு தெரிஞ்ச தொழிலாவும் இருக்கோணும். கம்மி முதலீடு முக்கியம், அப்படி ஆரம்பிச்சதுதாங்க இது’’ என்று ஆரம்பித்து தன் முழு கதையையும் சொல்லி முடித்தபோது தன்னையறியாமல் கண்களில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டாலும், இதயம் கனத்துப் போனதை சரிசெய்ய மிகவும் பாடுபட்டார் என்பது முகம் காட்டிக் கொடுத்துவிட்டது. தான் இந்த நிலைக்கு வந்ததற்கும், நம் தமிழ் நாடே பெருமை கொள்வதற்கும் காரணமான மலேசியாவில் வசிக்கும் அந்த முக்கிய நபரையும் இந்த விழாவிற்கு குடும்பத்துடன் அழைக்க வேண்டும் என்ற வேண்டுதலையும் வைத்தார் அந்த அம்மையார். அதனை ஏற்றுக்கொண்டு உடனடியாக அதற்கான ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லி தன் உதவியாளரைப் பணித்தார், முதலமைச்சர்.

இன்று அந்த நாளும் வந்துவிட்டது. முத்தாயம்மாளுக்கு பழைய நினைவுகள் அனைத்தும் வந்து காலையிலிருந்து மனதை வாட்டிக் கொண்டிருந்தது. எவ்வளவு பெரிய அதிர்ச்சியிலிருந்து தாம் மீண்டு வந்தோம் என்று நினைத்துப்

பார்த்த போது, இந்த ஐந்து ஆண்டு காலங்கள் தாம் எதையும் திரும்பிப் பார்க்காமல் ஓடிக் கொண்டிருந்தது புரிந்தது. வாழ்வின் இறுதிக் கட்டம் வரை யாரை பார்க்கவேக் கூடாது என்று நினைத்திருந்தோமோ அந்த உறுதியும் தளர்ந்து போனது புரிந்தது. தன்னையறியாத பாசமும், எதிர்பார்ப்பும் ஏனோ செயலிழக்கச் செய்து கொண்டிருந்தது.

தமிழ் நாடு முதலமைச்சரின் உதவியாளரிடமிருந்து, குடும்பத்துடன் ’கனிகரம்’விருது பெறும் விழாவில் வந்து கலந்து கொள்ள வேண்டுமென்ற அழைப்பிதழும், தனிப்பட்ட கடிதமும் கண்டு காரணம் புரியாமல் பெருங்குழப்பத்துடன் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் கிளம்பி வந்து கொண்டிருந்தான் முருகானந்தன்.

விழா மண்டபம் பல நாட்டு அறிஞர்களுடன் நிறைந்திருக்க அவனுடைய குழப்பம் மேலும் அதிகமானது. மிக உயரமான மேடையில் மிகப்பழமையான முறையில் உடை உடுத்திக் கொண்டு சம்பந்தமில்லாமல் அமர்ந்திருக்கும் சில மூதாட்டிகளைப் பார்த்தவுடன் குழப்பம் கூடித்தான் போனது. அதிலொருவர் தன் தாயைப் போல இருக்கவும், சந்தேகம் மேலும் கூடிப்போக, ஒன்றும் புரியாமல் அமர்ந்திருந்தான்.ஆனால் அவையனைத்தும் விழா ஆரம்பித்து விழா நாயகி பேச ஆரம்பிக்கும் வரைதான். அதற்குப் பிறகு குற்ற உணர்ச்சியும், அதிர்ச்சியும்,ஆச்சரியமும் உந்தித் தள்ள வாயடைத்துக் கிடந்தான் முருகானந்தன்.

விழாத் தலைவர் “கனிகரம்’ நிறுவனத்தாரை அனைவருக்கும் அறிமுகப்படுத்தியபோது பெரும் கரகோசம் விண்ணைப் பிளந்தது. 'கனிகரம்’என்பதன் பொருள், ‘அன்பு’ அல்லது அக்கறை. மனித இனத்தின் மீது இவர்கள் கொண்ட மாளாத அன்பும், அக்கறையும்தான் இந்த ‘கனிகரம்’ நிறுவனத்தின் வளர்ச்சி. பல நாட்டு அறிஞர்களும் இதன் சேவையை பாராட்டியுள்ளதோடு இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகளையும், நலத் திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருப்பதே இதற்கான ஆதாரம். இந்த‘கனிகரம்’ உருவானதன் வரலாறு நாம் அனைவரும் அறிய வேண்டிய ஒன்று. இதோ அதன் நிறுவனர் திருமதி

முத்தாயம்மாள் அவர்கள் இப்போது பேசுவார்கள் என்றபோது அரங்கமே அமைதியாக அவருடைய பேச்சைக் கேட்க காத்துக் கொண்டிருந்தது.

அவர் எழுந்து அனைவருக்கு வணக்கம் சொல்லிவிட்டு, ‘‘நான் பெரிய பேச்சாளியெல்லாம் இல்லீங்கோ.. என்னமோ எனக்குத் தெரிஞ்சதை எதையாவது செய்து நானும் பிழைக்கோணும், என்னைப் போல ஆதரவில்லாமல் நிற்பவங்களுக்கும் உதவியா இருக்கோணும், அது நம்ம மக்களுக்கும் உபயோகமா இருக்கோணும், இம்புட்டுதான் நான் யோசிச்சதுங்க…’’ என்று வெகு யதார்த்தமாக ஆரம்பித்து அவர் சொன்ன விசயங்களைக் கேட்டு சபையே கண்ணீர் சிந்தியது.

ஈரோடு மாவட்டம், திருச்செங்கோடு அருகே, மண்டகப்பாளையம் எனும் கிராமம். உழைப்பு மட்டுமே பிரதானமாக வாழும் மக்கள். திரும்பிய புறமெல்லாம் கைத்தறி ஓடும் சத்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த காலத்தில், மெல்ல ,மெல்ல மக்கள் சொத்து பத்தை விற்று விசைத்தறிக்கு மாறிக்கொண்டிருந்தபோது மணிமாறனும் தன்னிடமிருந்த பரம்பரைச் சொத்தான ஒரு ஏக்கர் நிலத்தையும் விற்று அதனை விசைத்தறியாக மாற்றியதோடு, மனைவி முத்தாயம்மாளுடன் இராப்பகல் பாராமல் உழைத்து ஊரே மெச்சும் அளவிற்கு வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில் திடீரென மாரடைப்பால் மணிமாறன் உயிரை விட்டாலும், தன் ஒரே மகன் முருகானந்தனை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் துக்கத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு அதே கடுமையுடன் உழைத்து மகன் தொழிலில் உதவிக்கு வருவான் என்று காத்திருந்த சமயத்தில் அவனோ வெளியூரில் சென்று பொறியியல் படிப்பு படிக்க ஆசைப்பட்டதால் மகன் விருப்பம் போல அதையும் நிறைவேற்றி வைத்திருக்கிறார் முத்தாயம்மாள். படித்து முடித்த மகன், அங்கேயே வேலையும் கிடைத்து சென்னை நகரிலேயே குடியிருந்ததோடு, உடன் பணிபுரியும் வந்தனாவை காதல் மணமும் புரிந்து கொண்டு செட்டில் ஆகிவிட்டான். அதற்குப் பிறகு மலேசியாவில் வேலை கிடைத்து சென்றவன் வருடம் ஒரு முறை மட்டும் அம்மாவை பார்த்துச் செல்வான். அவன் பெற்ற செல்வங்களைக்கூட இன்னும் கண்ணில் காட்டவில்லை.

வேதனையிலும், அதிர்ச்சியிலும் இருந்து மீள பல நாட்கள் ஆனாலும், உடன் இருப்பவர்கள் அத்துனை பேருக்கும் தன்னைப் போல பல விதமான பிரச்சனைகள் இருப்பதைக் கேட்டவர் மெல்ல சமாதானம் ஆக ஆரம்பித்ததோடு,உழைத்து உரமேறிய கைகள் சோம்பலாக உட்கார்ந்து சாப்பிட இடம் கொடுக்காதலாலும், தனக்காக தம் உறவினர் கட்டிய பணம் கடனாக நிற்பதையும் கருத்தில் கொண்டு, பிழைப்பிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசித்த போதுதான், தன்னுடன் ஒத்த கருத்துடைய மேலும் ஐந்து பெண்களைச் சேர்த்துக் கொண்டு அந்த முதியோர் இல்லத்தின் காப்பாளரின் உதவியுடன் மற்றும் அவரவர்கள் கையில்,கழுத்தில் போட்டிருந்த சிறு தங்கங்களை விற்று மூலதனமாக்கி ஆரம்பித்த ஒரு சிறு குடிசைத் தொழில்தான் இன்று ‘கனிகரமாக’ஆலமரமாக விழுது விட்டு மிகக் குறைந்த காலத்திலேயே பரவி நிற்கிறது!

சபையே அந்தச் சூழலினுள் சென்று அமைதியாக உறைந்திருந்த போது, ‘ஆத்தா’என்று கையைத் தூக்கிக் கொண்டு பின் வரிசை இருக்கையிலிருந்து ஒரு நான்கு வயது பெண் குழந்தை ஓடிவர, அங்கு மௌனம் கலைந்தது. அக் குழந்தையைத் தொடர்ந்து வந்த அதன் பெற்றோர் மற்றும் ஒரு மூத்த ஆண் குழந்தை மேடை ஏறி வந்து அந்தத் தாயின் காலில் விழுந்த போது முருகா, எப்படிப்பா இருக்கே.. என்று அன்பாக ஆரத்தழுவிக்கொண்ட தாயைக் கண்டு அந்த அரங்கமே எழுந்து நின்று கைதட்டி மரியாதை செய்தது.

விழா முடிந்தவுடன் அந்த மகனை மன்னிக்க எப்படி மன்னிக்க மனம்வந்தது என்று பலரும் பல முறைகளில் கேள்வி கேட்டாலும், அதுதான் தாயுள்ளம் என்று அனைவருக்கும் புரிந்தது. விமான நிலையத்தில் மகன் விட்டுச்சென்ற போதே அவருடைய உறவினர் வந்து காப்பாற்றிய போது, அவர் போலீசில் ஒரு புகார் கொடுத்தால் தாயை அனாதையாக விட்டுச் சென்ற மகனை எங்கிருந்தாலும் கைது செய்து கொண்டு வந்துவிடுவார்கள் என்று சொல்லியும் அதற்கு சம்மதிக்காத அந்தத் தாய் மகன் எங்கிருந்தாலும் நன்றாக வாழ வேண்டும் என்று வாழ்த்திய தாயல்லவா அவள்! ..தவறை உணர்ந்து கதறியழுத மகனையும்,மருமகளையும் மன்னித்ததோடு, அவர்களுக்கு அந்த குற்ற உணர்ச்சியைப் போக்கவே அங்கு வரவழைத்திருந்ததையும்

சொன்னபோது மகன் தாயை ஆரத்தழுவியபோது அதில் இருந்த உண்மையான பாசம் புரிந்தது அந்தத் தாய்க்கு!

## 9. நிழல் தேடும் நிஜங்கள்

''ஏம்மா.. யாரும்மா அது, கையுறையும், தலையுறையும் போடாமல் வேலை செய்யிறது வாம்மா.. வெளியில வா... முதலாளி வர நேரத்துல ஏம்மா இப்புடி உசிர வாங்குறீங்க?''

''அண்ணே.. நான் புதுசா இன்னைக்குத்தான் வேலைக்குச் சேந்தேன். லேட்டாத்தான் வந்தேன். அதான்.. சூப்பர்வைசரை பாக்கச் சொன்னாங்க.. யாருன்னு தெரியல.. அதான்..'' என்று தலையைச் சொறிந்தாள்.

''பாத்தியா.. இதான் பிரச்சனை. தின்பண்டங்கள் பேக் செய்யுற இடத்துல இப்படி தலையை சொறிஞ்சிக்கிட்டு நின்னா.. பாக்குறவங்க என்ன சொல்லுவாய்ங்க.. போம்மா.. போய் அங்கன ஸ்டோர்சுல நான் சொன்னேன்னு சொல்லி கையுறையும், தலையுறையும் வாங்கி போட்டுக்கிட்டு வா..''

எங்கிருந்துதான் வர்றாய்ங்களோ.. நம்மள டென்சன் பன்றதுக்குனே... என்று முணுமுணுத்துக்கொண்டே சென்றவன் பின்னாலேயே,

''சார், சார்... '' என்று சென்ற லட்சுமியை முறைத்துப் பார்த்து, ''உனக்கென்னம்மா பிரச்சனை. வழக்கம் போல பர்மிசனா.. இன்னைக்கெல்லாம் டெலிவரி நிறைய இருக்கு.. போம்மா, போய் வேலையைபபாரு. முதலாளி அம்மா வந்திருக்காய்ங்க. எந்த நேரமும் ரவுண்ட்ஸ் வருவாய்ங்க.. '' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். பேக்கிங் செக்ஷனில் எப்பவுமே ஆள் பற்றாக்குறைதான். அதனாலேயே டூட்டி மாத்தி, மாத்தி போடுவாங்க. ஊர்லயே பெரிய ஸ்வீட் கடை. என்பதால் கூட்டம் எப்பவும் நிரம்பி வழியும். நிறைய கல்யாணம் மற்றும் இதர விசேசங்களுக்கான

ஆர்டர் வருசம் பூரா குவிஞ்சி கிடக்கும். தலையை தொங்க போட்டுக் கொண்டு வந்த லட்சுமியைப் பார்க்க பாவமா இருக்க,

‘‘என்னக்கா, பர்மிசன் கிடைக்கலியா, சுப்பர்வைசர் நொம்ப எகிறிடிச்சோ.. இவ்ளோ சோகமா வறயே.. அதான் கேட்டேன்’’ என்றாள் பார்வதி.

‘‘இல்லம்மா.. அது எப்பவும் திங்கற பேச்சுதானே.. அதைப்பத்தி இல்ல.. இன்னைக்கு ரேசன் கடையில பொங்கலுக்கு குடுக்குற அந்த இலவச வேட்டி, சேலைக்கு கடைசீ நாள். அதான் .எப்படியாவது போய் வாங்கிப்புடலாம்னு பாத்தா இப்புடி ஆயிப்போச்சு. இந்தப் பொங்கலுக்கு என் பெண்ணுக்கு தாவணி போட்டுடலாம்னு பாத்தேன். ஒரு சேலை வாங்கினா இரண்டு தாவணி ஆவுமே. சொந்தத்துல விசேசமெல்லாம் போறதுன்னா, பாவாடை தாவணி போடலேன்னா ஒரு மாதிரியா பேசறாளுக.. ஒரே வெசனமா இருக்கு பார்வதி’’

‘‘அக்கா, நான் ஒரு ரோசனை சொல்லவா.. நீ நேரா போய் முதலாளி அம்மாகிட்ட உண்மையைச் சொல்லி கேட்டுப்புடு.. பட்டா படுது, திட்டுனாலும் போவுது. முயற்சி பண்ணித்தான் பாரேன். அப்பறமா சூப்பருவைசர்கிட்ட எதையாவது சொல்லி சமாளிச்சிப்போடலாம். போக்கா, போய் கேளு சீக்கிரம். அந்த சூப்பர்வைசர் சிடுமூஞ்சி வந்தா, உன்னைப் போவவும் உடாது.. ‘‘

கேபின் கதவு திறந்தே இருந்ததால, ‘‘மேடம் ‘‘ என்று கூப்பிடப் போனவள், நல்ல வேளையாக போனில் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்துவிட, நாக்கைக் கடித்துக்கொண்டு அப்படியே கதவைப் பிடித்துக்கொண்டு நின்றுவிட்டாள் லட்சுமி. சுற்றும் நாற்காலி பக்கவாட்டில் திரும்பியிருந்ததால் முதலாளி அம்மாவிற்கு இவள் நிற்பது தெரியவில்லை. வேறு வழியில்லாமல் பேசுவதைக் கேட்க வேண்டியதாயிற்று.

மறு முனையில் யாரோ, மேடம் இளைத்து விட்டதாக ஐஸ் வைப்பாய்ங்க போல... அந்தம்மா முகத்துல அப்படி ஒரு பூரிப்பு.

‘‘.......’’

“ம்ம்ம் அப்படியா.. குறைஞ்சிருக்கேனா.. டயட்டுலதான் இருக்கேன். ம்ம் ஆமா அரிசியை சுத்தமா தொடறதில்ல.  வெறும் கோதுமை ரொட்டி, புல்கா, இல்லேனா வெஜிடபிள் சூப், ஜூஸ் இப்படித்தான் சேத்துக்கறேன். சின்ன, சின்னதா எனக்காக ஸ்பெஷ்லா இரண்டு ரொட்டி போடச்சொல்லிடுவேன் சமையல்காரம்மா கிட்ட. சக்கரை இல்லாம ஏதாவது ஜூஸ் இல்லேனா உப்பு இல்லாம மோரு. மதியம், சேலட் நிறைய அப்பறம் இரண்டு ரொட்டி, கொழுப்பில்லாத யோகர்ட் அவ்ளோதான். இரவு ஏதாவது பழமும், ஒரு கப் பாலும். மாலையில பசிச்சா மேரி பிஸ்கட் டீயோட 2 சாப்பிடுவேன்.”

இதற்குமேல் அந்த மேடம் பேசியது காதில் விழவில்லை. காலையில் வீட்டில் நடந்தது நினைவிற்கு வந்தது. மாதக் கடைசி என்பதால் மளிகை சாமான, அரிசி எல்லாம் காலியாக ஆரம்பித்து விட்டது. பாக்கெட் மாவு வாங்கி மூத்தவன் பன்னீருக்கு (பன்னீர் செல்வம்) காலேஜீக்கு நாலு தோசை ஊத்திக் கொடுத்துப்பிட்டு, இளையவள் அமிர்தாவுக்கு டப்பாவுல நாலு தோசை மதியம் சாப்பிட ஊத்தி, பழைய சாம்பாரை சுண்ட வைத்து அதையே தொட்டுக்கவும் கொடுத்துப்போட்டு, கணவனுக்கும், தனக்கும் முதல் நாளைய பழைய சோற்றை மோர் ஊத்தி பிசைந்து டப்பாவுல போட்டாள். காலையில சாப்பிட கணவனுக்கு ஊத்தியது போக மாவு ரொம்ப கம்மியாக இருக்க, மகள் ”அம்மா, நீ சாப்பிடலையா” என்று தொணப்புவாளேன்னு, இருந்த ஒரு கரண்டி மாவுல கொஞ்சம் தண்ணி ஊத்தி, அதை குட்டியா இரண்டு தோசையா வார்த்து மகள் முன்னால நன்றாக சாப்பிடுவதாக பாவ்லா பண்ணிவிட்டு கிளம்பியது நினைவிற்கு வந்தது. ‘அட நாமக்கூடத்தான் டயட்டுல இருக்கோம் போல’ என்று எண்ணியபோது தன்னையறியாமல் சிரிப்பு வந்துவிட்டது. திடீரென்று யாரோ முதுகில் தட்ட, விலுக்கென்று திரும்பிப் பார்த்தாள். கையில் வைத்திருந்த நீளமான கணக்கு நோட்டினால் சூப்பருவைசர்தான் தட்டியிருக்கார். சைகையால் அந்தப்பக்கம் வருமாறு சொன்னார்.

“ஏம்மா.. அங்கே வேலையைப் போட்டுப்பிட்டு இங்க என்ன பண்றே நீ.... ஒழுங்கா வேலை பாக்கற நினைப்பு இல்லை போலருக்கே.. முதலாளியம்மா பேசறதை ஒட்டு கேட்டுக்கிட்டு நிக்கறயா ..... ?”

‘‘அண்ணே. அப்டீல்லாம் இல்லண்ணே... அவசரமா ஒரு ஜோலிண்ணே. கொஞ்சம் போகணுமிண்ணே, அதான் அம்மாகிட்ட பர்மிசன் கேட்டுப்பாக்கலாமேன்னு.....’’

‘‘என் வேலைய தொலைக்கலாம்னு பாக்குறீகளோ... பேசாம வீட்டிலயே இருந்துக்கலாமே நீயெல்லாம் எதுக்கு வேலைக்கு வர.... வாரத்துல மூனு நாளைக்கு பர்மிசன் கேக்கற.... கேட்டா ஆயிரம் காரணம் சொல்லுவே.. இலவசங்களை வாங்குறதுக்குனே அலைஞ்சு திரியற... இன்னையோட உன் சீட்டை கிழிக்க வேண்டியதுதான் போலயிருக்கு. நீ ஒழுங்குக்கு வரமாட்டே’’

‘‘அண்ணே, அபடீல்லாம் சொல்லாதீங்கண்ணே. எம் பையன் கடைசீ வருசம் படிக்கிறான். இந்த வ்ருசம் டிகிரி முடிச்சவுடனே, இங்கதான் கூட்டிக்கிட்டு வரலாம்னு இருக்கேன்.. கொஞ்சம் கருணை காட்டுங்கண்ணே.. என்றற ஊட்டுக்காரவிகளும் தச்சு வேலைக்கு காலைலை வெள்ளனே போனா, இராத்திரி லேட்டாத்தான் சுயநினைவே இல்லாம வருவாக... சம்பாதிக்கிற காசு பாதி டாஸ்மாக்கு கடையில குடுத்துப்போட்டுத்தான் வருவாரு. ஊட்டுல உலை பொங்குறதே, எம்பட இந்த வருமானத்துலதானுங்க அண்ணே.. என்ன பண்றது ரேசன்ல போடுற இலவச அரிசிக்காக அன்னைக்கு பர்மிசன் கேட்டேன். இன்னைக்கு பொங்கலுக்கு குடுக்குற சேலைக்காக போகணும் அண்ணே.. கொஞ்சம் மனசு வையுங்க..’’

‘‘இங்கபாரு, உன் பாட்டை இங்க ஆரம்பிக்காதே, இன்னைக்கு மதியம் பூரா இப்படியே அலையிறே நீ... வேலையே பாக்க்லை. அரை நாள் லீவு கொடுக்கிறேன் போயிட்டு வா.. ‘‘

என்று சொல்லிவிட்டு நிக்காமல் போனவரிடம் அதற்குமேல் பேச ஒன்றுமில்லாமல் தலையை தொங்கப்போட்டுக்கொண்டு அரை நாள் சம்பளம் போன வெசனத்தோடு வேகமாக கிளம்பியவளை செக்யூரிட்டியில் நிற்கும் பெரியவரின் குரல் தடுத்து நிறுத்தியது.

‘‘ஏம்மா.. உன் பையன் காலேஜூலதானே படிக்கிறான். ஒழுங்கா படிக்கிறானான்னு பாக்குறீங்களா..?’’

‘‘ஏண்ணே, என்ன ஆச்சு..?’’

கிளம்புகிற அவசரம் அவளுக்கு.

‘‘நான் நைட் டூட்டி முடிச்சு காலையில வீட்டுக்குப் போற வழியில இருக்குற டாஸ்மாக் கடைக்குள்ள உன் பையன் போறதை நிறையவாட்டி பாத்திருக்கேன். ஏதாச்சும் வேலை செய்யுறானோன்னு நினைச்சு நேத்து அவன்கிட்ட கேட்டேன். கொஞ்சம்கூட மருவாதி இல்லாம உன் வேலையைப் பாத்துக்கிட்டு போ பெரிசுங்கறான். அவன் போக்கு எனக்கு என்னவோ சரியா படலே.. பாத்துக்கோ அவ்ளோதான்’’

அதிர்ச்சியில் நா எழவில்லை லட்சுமிக்கு. பையன் சீக்கிரம் காலேஜு படிப்பை முடிக்கப்போறானே.. இந்தப் போராடடத்துக்கு ஒரு விடிவு வரும்னு பார்த்தா, இந்த செய்தி தலையில் இடியாய் இறங்கியது. நேரமானதால், ஒன்றுமே பேச முடியாமல் ஆயிரம் எண்ணங்களைச் சுமந்தபடியே ரேசன் கடை நோக்கி ஓடிக்கொண்டிருந்தாள் லட்சுமி. இதயக்கூட்டில் ஓராயிரம் சம்மட்டி கொண்டு அடித்தாற்போல ஒரே வலி. கொஞ்ச நாட்களாகவே இப்படித்தான், ஏதாவது சின்ன அதிர்ச்சி என்றாலும் நெஞ்சில் பளிச்சென்று அப்படி ஒருவலி. அரசாங்க ஆஸ்பத்தியில போய் மணிக்கணக்கா நிக்க ஏது நேரம். என்னமோ வாழ்க்கை ஓடுற மட்டும் ஓடட்டும்.

இரவு மணி எட்டாகியும், காலையில் காலேஜுக்குப் போவதாகச் சொல்லிச்சென்ற மகனை இன்னும் காணவில்லையே என்று வாசலிலேயே உட்கார்ந்திருந்தாள் லட்சுமி.

‘‘அம்மா, ஏம்மா. வாசல்லயே உக்காந்திருக்கே.. இன்னும் அப்பா வ்ரலியா’’? என்றான்.

ஏனோ மகனைப் பார்த்தவுடன், அன்பான அவனுடைய பேச்சைக் கேட்டவுடன், அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த துக்கம் காட்டாற்று வெள்ளமாக பீறீட்டுக்கொண்டு வந்தது கண்டு நடுநடுங்கிப் போனான் பன்னீர் செல்வம்.

அவள் கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டு, ‘‘என்னம்மா, என்னாச்சு’’ என்றான் படபடப்பாக.

‘‘எங்கப்பா போயிட்டு வரே.. இவ்ளோ நேரமா.. பசங்க கூட படிச்சுட்டு வரேன்னு பொய் மட்டும் பேசாதே... ‘‘

அம்மாவின் முகத்தைப் பார்த்தவுடன் விபரீதம் புரிந்தது மகனுக்குத் தன் கண்களை நேரடியாகப் பார்க்கும் தைரியம் இல்லாத போதே லட்சுமியும் புரிந்து கொண்டாள்.

‘‘ஏன் இப்படி செய்தே... வீட்டு நிலைமை உனக்குத் தெரியாதா..உங்கப்பன் செய்யுற அதே தப்பை நீயும் செய்யலாமா.... மெதுவாக ஆரம்பித்த அவள் கோபம் சுற்றுப்புறம், சூழல் என அனைத்தையும் மறக்கச் செய்ய வெறி பிடித்தவள் போல கையில் கிடைப்பதெல்லாம் தூக்கி எறிந்ததோடு, கண்டபடி திட்டவும் ஆரம்பித்துவிட்டாள். இனிமேல் தாயிடம் பேசிப் பலனில்லை என்பதை உணர்ந்தவனாக ஒன்றும் பேசாமல் பசியுடன் போய் சுருண்டு படுத்துவிட்டான்.

மகனை பசியுடன் படுக்கச் செய்துவிட்ட விசனம் ஒரு புறமும், எத்தனை நெஞ்சழுத்தம் இருக்கோணும், ஒருவார்த்தை இனிமேல குடிக்க மாட்டேம்மா நீ கவலைப்படாதேன்னு, சொல்லுகிற கரிசனம் கூட இல்லையே என்கிற ஆத்திரம் ஒரு புறமும் அலைக்கழிக்க, தானும் விசும்பிக்கொண்டே படுத்து விட்டாள். மனது கேட்காமல் பன்னீர் மீண்டும் வந்து அம்மாவின் அருகில் உட்கார்ந்து தலையை நீவிக்கொடுத்து,

‘‘அம்மா.. அம்மா.. வாம்மா, சாப்பிடலாம். வயிறு பசிக்குதும்மா.. ‘‘ என்றான். ஆனால் தீராத கோபமும், உடல் அலுப்பும், அவளை எழுந்திருக்கவிடவில்லை. அம்மாவைப் பார்க்க பாவமாக இருந்தாலும், தூக்கத்திலாவது தாய்க்கு நிம்மதி கிடைக்கட்டுமே என்று சற்று நேரம் அந்த பரிதாபமான முகத்தையேப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தானும் பக்கத்திலேயே படுத்து உறங்கிப் போனான்.

அசதியில் வெகு நேரம் தூங்கிப் போயிருந்தது புரிய வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தவள், மகன் கிளம்பிப் போயிருப்பது தெரிந்து மேலும் வேதனை பிடுங்கித்திங்க, ஓடிப்போய் சமையலறையில் பாத்திரங்களைத் திறந்து பார்த்தாள். இரவு வைத்த சாப்பாடு குறைந்திருந்தது பார்த்து ஒரு வேளை மகன் சாப்பிட்டிருக்கக் கூடும் என்று நிம்மதி பெருமூச்சு விடப்போனவள், கீழே இறைந்து கிடந்த சாப்பாடும், எச்சில் வட்டிலும் பார்த்து இது கணவனின் வேலை என்பதைப் புரிந்து கொண்டபோது மகன் காலையிலும் சாப்பிடாமலே சென்றுவிட்டது வேதனையின் உச்சமாகிப்போனது. தனக்கும் சமைக்கவும் பிடிக்காமல், சாப்பிடவும் தோன்றாமல் இருக்கிற சாப்பாட்டை அப்பாவிற்கும், மகளுக்குமாகப் போட்டுக் கொடுத்துவிட்டு வேலைக்குக் கிளம்பினாள். நல்ல வேளையாக குடிகாரக் கணவனாக இருந்தாலும், சாப்பாட்டிற்கு தண்ணீர் ஊற்றி வைத்தானே, சாப்பாடு கெடாமல் காப்பாற்றினானே என்று நினைத்துக் கொண்டாள்.

லட்சுமியின் சோர்ந்த முகத்தைப் பார்த்தவுடன் புரிந்து கொண்டாள் பார்வதி, ஏதோ பெரிதாக நடந்திருக்கிறது என்று. சூப்பர்வைசர் அந்தப் பக்கம் போகட்டும் என்று காத்திருந்தவள் அவசரமாக “ஏங்க்கா.. என்னாச்சு, வீட்டில ஏதும் பிரச்சனையா, இவ்ளோ டல்லா வந்திருக்கே, சாப்பிடலையா..?” என்றாள்.

யாரிடமாவது மனம் திறந்து கொட்டினால் தேவலாம் என்று காத்திருந்தவளுக்கு பார்வதியின் அன்பான கேள்வி ஆதரவாக இருந்தது. இரவு நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் கொட்டித் தீர்த்தாள்.

“தப்புப் பண்ணிப்புட்டயேக்கா.. வயசு பசங்ககிட்ட அப்படியா நடந்துக்குவாய்ங்க.. அவிங்க என்ன முடிவு வேணா எடுப்பாய்ங்களே. நாமதானே சாக்கிரதையா இருக்கோணும். சமாதானமா சொல்லித் திருத்தாம இப்படியா நடந்துக்குவே. பாரு நீயும் சாப்பிடாம வந்திருக்கே. சரி சீக்கிரமா என்னோட சாப்பாட்டுல நாலு வாயாவது எடுத்து போட்டுக்கிட்டு வா..மயக்கம் போட்டு உழுந்துப்பிடாதே..” என்றாள் அக்கறையாக.

‘‘இல்ல பார்வதி இன்னும் செத்த நேரத்துல டீ கொடுப்பாங்கல்ல.. அது போதும். மத்தியானமா கேண்டீன்ல எதுனாச்சும் வாங்கிக்கறேன்’’ என்றாள்.

மதியம் கேண்ட்டீனில் பட்டை சாதம் ஒரு பொட்டலம் வாங்கியவள் மகன் சாப்பிட்டானோ இல்லையோ என்ற நினைவு வாட்ட அப்படியே வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவளை பார்வதிதான் திட்டி சாப்பிட் வைத்தாள். ஏதோ சாப்பிட்டோம் என்று பேர் பண்ணிவிட்டு வேலைக்குத் திரும்பியவள், கொஞ்ச நேரத்திலேயே, செக்யூரிட்டி வந்து, ‘‘ஏம்மா லட்சுமியம்மா, எங்கம்மா இருக்கே.. ‘‘ என்ற சத்தமான குரல் கேட்டு, ‘‘இதோ இங்கத்தான் இருக்கேண்ணே, சொல்லுங்க’’ என்று ஓடினாள்.

மகன் பன்னீர் செல்வத்தை யாரோ நன்கு அடித்துப்போட்டதால் குற்றுயிரும், குலை உயிருமாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும், உடனே வரும்படியும் போன் வந்திருப்பதாக செக்யூரிட்டி சொன்னது முழுவதும் காதில் விழும் முன்னேயே மயங்கிச் சரிந்துவிட்டாள், லட்சுமி. அருகில் இருந்த பார்வதி அப்படியே தாங்கிப் பிடித்ததோடு, சூப்பர்வைசரிடம் சொல்லிவிட்டு அவளைக் கூட்டிக்கொண்டு ஆட்டோவில் அரசாங்க மருத்துவமனை நோக்கி ஓடினார்கள்.

அங்கு போனவுடன் தான் தெரிந்தது, காலையிலேயே டாஸ்மாக் கடையில் ஆரம்பித்த பிரச்சனை பெரிதாக வெடித்து கல்லூரியில் மதியம் சாப்பாட்டு இடைவேளையில் வாக்குவாதம் வளர்ந்து சில மாணவர்கள் சேர்ந்து பன்னீர் செல்வத்தை ஆன மட்டும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள் என்று. இதைக்கேட்ட லட்சுமி தலை,தலையாக அடித்துக் கொண்டு, ‘‘பாவிப்பய, எவ்ளோ சொல்லியும் கேக்காம, அப்பனாட்டமே குடிகாரனா ஆகிப்போயி, இன்னைக்கு அடிதடி தகராறுன்னு இப்படி சாவக்கடக்கிறானே, கடவுளே.. இப்புடி ஒரு பையனப் பெத்ததுக்கு என் வவுத்துல பெரண்டையத்தான் வச்சிக்கட்டோணும்.. போய்த் தொலைடா..நாயே.. நீ எனக்கு வாணாம்..’’ என்று அலறினாள்.

இவள் அலறுவதைக் கேட்டு பண்ணீர் செல்வத்தின் தாய் என்பதைப் புரிந்து கொண்டு ஒரு சிலர் அருகில் வந்து, ‘‘அம்மா, இங்க பாருங்க, நீங்க நெனக்கிற

மாதிரி உங்க பையன் மோசமானவன் இல்ல... தங்கமான புள்ளையத்தான் பெத்துயிருக்கீங்க, மகராசி நீங்க'' என்று சொல்லிவிட்டு அங்கு நடந்ததைக் கூறினர்.

பன்னீர் செல்வம் தனக்கும், தங்கைக்கும் படிப்பு செலவிற்காக பணம் சம்பாதிக்க வேண்டி டாஸ்மாக் கடையில் நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்ததால், கல்லூரி நேரம் போக கிடைத்த நேரமெல்லாம் அங்கு வேலை செய்திருக்கிறான். சக மாணவர்கள் பலர் வந்து குடித்து சீரழிந்துப் போவதை அறிவுரை சொல்லி திருத்தியும் இருக்கிறான். அதில் ஒரு மாணவன் எவ்வளவு சொல்லியும் திருந்தாமல் மற்ற மாணவர்களையும் கூட்டிக்கொண்டு வந்து மது வாங்கிக் கொடுத்து கெடுத்துக் கொண்டிருந்தது பொறுக்காமல் வேறு வழியில்லாமல் கல்லூரி பிரின்சிபாலிடமும், அவனுடைய பெற்றோரிடமும் போய் சொல்லிவிட்டு வந்துவிட்டான். இதனால் கல்லூரி முதல்வர் அவனை கல்லூரியிலிருந்து சஸ்பெண்ட் செய்திருக்கிறார். அந்த ஆத்திரத்தில் சில கூலிப்படைகளின் உதவியுடன் பன்னீர் செல்வத்தை கொலை வெறியுடன் தாக்கியிருக்கிறான். அந்த மாணவனின் பெற்றோர் லட்சுமியின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் மல்க இதைக் கூறிவிட்டு, மகனை இனிமேல் தாங்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதாகவும், எத்தனை இலட்சம் ஆனாலும் பன்னீர் செல்வத்தைக் காப்பாற்றுவதாகவும் உறுதி கூறியதோடு போலீசிடமும் கேஸ் கொடுக்க வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

தன் மகன் குடிகாரன் அல்ல, நல்லது செய்யப்போய்த்தான் இப்படி அடிபட்டு வந்திருக்கிறான் என்பதை அறிந்த அடுத்த நொடி புத்துயிர் பெற்றவளாக நிமிர்ந்து உட்கார்ந்தாள். இறைவன் நல்லவர்களை சோதிப்பானேத் தவிர ஒருநாளும் கைவிட மாட்டார் என்று பக்கத்தில் யாரோ சொல்லிக் கொண்டிருக்க லட்சுமியும் அதே நம்பிக்கையில், தம் மகன் சத்தியமாக நல்லபடியாக திரும்பி வருவான் என்று காத்திருக்கிறாள்.

## 10. பேராண்மை!

"ஏண்ணா, கோவில் நடையைத் திறக்க நாழியாயிடுத்துன்னு பறந்துண்டு ஓடினேள்.... என்ன ஆச்சு, திரும்ப வந்துட்டேள்''

''என்னத்தச் சொல்ல.. வழக்கம் போலத்தான். அந்தப் பக்கத்தாத்துல புதுசா குடி வந்திருக்காளே அந்த தில்லிக்காரா.. அந்தப் பொண்ணு காலங்கார்த்தாலே வந்து நிக்கிறா.. நல்ல காரியமா போறச்சே இவோ மூஞ்சியில முழிச்சுட்டுப் போக சங்கடமா இருக்கு. கொஞ்சம் தூத்தம் கொண்டாடி. குடிச்சிப்பிட்டு கிளம்பறேன்''

''ஏண்ணா நம்மாத்தை விட்டு வெளியில் படியிறங்கறா வரையிலத்தான் சகுனம் எல்லாம் பார்க்க முடியும். தெருவில் இறங்கி நடக்க ஆரம்பிச்சப்பறம் யார், யாரோ வருவா.. போவா... அதெல்லாம் சகுனத்தடையா நினைச்சா எப்படிண்ணா..''

''அப்படியில்லைடி.. புதுசா எதிர்த்தாத்துக்கு வந்திருக்கவா, அந்தப் பொண்ணு ஏதோ ஒரு காரணத்துக்கு கரெக்டா எதிர்ல வந்துட்றா.. அவளைப் பார்த்துட்டு அப்படியே கிளம்ப மனசு ஒப்பலைடி நேக்கு. நல்ல காரியம் பண்றதுக்கு கிளம்பும்போது இப்படி வெறுங்கழுத்தோடவும், பாழும் நெற்றியோடவும் இருப்பவளைப் பார்த்துட்டுக் கிளம்ப மனசு என்னமோ பண்றது.. அதான் வந்து, தண்ணி குடிச்சுப்பிட்டு, சித்த நாழி கழிச்சி புறப்படலாம்னு வந்தேன்''

''அந்தப் பொண்ணு நம்ம பக்கத்துல இருக்கிற பள்ளியில டீச்சரா வேலை மாத்தி வந்திருக்காண்ணா.. குடும்பத்தோட வந்திருக்காங்க. அவ்ளுக்கு ஒரு பையனும் இருக்கான். ஐந்து வயசு இருக்கும். அவனையும் கூட்டிண்டு ஏதேதோ கிளாஸ், அப்பறம் பள்ளிக்கூடம் போவா.. தினமும் நீங்களும் அதே நேரத்துல கிளம்பறேள். இனிமேல் அரை மணி முன்னாலேயே கிளம்புங்கோ. அவ்ளோதானே. அதுக்கு ஏன் சலிச்சுக்கறேள்''

“ ம்ம்.. அதுவும் சரிதான்.. சரி நான் வறேன்..”

அருணா, அன்று சமையல் எல்லாம் முடித்துவிட்டு, ஓய்வு நேரத்தில் புதிதாகக் குடி வந்திருக்கும் அவர்கள் வீட்டில் போய் பேச்சுக் கொடுக்கலாம் என்று கிளம்பினாள். என்ன இருந்தாலும் தன் கணவர் இப்படி மூஞ்சியில் அடித்தாற்போல படக்கென்று திரும்பி உள்ளே வந்ததாலே, அந்தப் பெண் மனசு என்ன பாடு பட்டிருக்கும் பாவம் என்று வேதனையாக இருந்தது. அன்று மார்கழி மாத, ஆண்டாள் உற்சவத்திற்காக கோவிலில் கொடுத்த அக்கார அடிசல் பிரசாதம் இருந்ததை, ஒரு தொண்ணையில் எடுத்துக் கொண்டு, அதன் மேல் மற்றொரு தொண்ணையால் மூடிக்கொண்டு கிளம்பினாள்..

அவர்கள் வீட்டு வாசலை நெருங்கும்போதே வெளி நடையில் உட்கார்ந்து ’இந்து’ நாளிதழ் வாசித்துக் கொண்டிருந்த பெரியவர்,

“வாங்க, வாங்கம்மா.. “ என்று இன்முகத்துடன் வரவேற்றார். உள்ளே எட்டிப் பார்த்து ’பிரமீளா’, என்று குரல் கொடுக்கவும்,

“இதோ வ்றேன் மாமா” என்ற மெல்லிய குரல் வந்த திசையை ஆர்வமாகத் திரும்பிப் பார்த்தாள், அருணா. ஓரிரு முறை பள்ளிக்குச் செல்லும் தன் மாட்டுப் பெண்ணை வழியனுப்ப வாசல்வரை அந்த அம்மா வரும்போது பார்த்திருக்கிறாள். அதைத் தவிர அதிகமாக வெளியே பார்த்ததில்லை.

“வாங்க.. வாங்கம்மா” என்று முகம் மலர வரவேற்றவர் அதற்குமேல் அதிகம் பேசவில்லை. அருணாவும், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, வெளிநாட்டில் வேலை பார்க்கும் தம் ஒரே மகள் பற்றி சொல்லிவிட்டு, அதற்குமேல் அமைதியாக அமர்ந்திருக்கும் அந்த அம்மாவிடம் என்ன பேசுவது என்று தெரியாமல், தான் வந்த விசயத்தை மெல்ல ஆரம்பிக்கலாம் என்று நினைத்து, கையில் கொண்டுவந்த பிரசாதத்தை அவர் கையில் கொடுத்துவிட்டு, மெல்ல பேச்சை ஆரம்பித்தாள்.

“நாங்க பரம்பரையா இதே ஊரில் இருக்கும் பெருமாள் கோவிலுக்கு அர்ச்சகரா சேவகம் பண்ணிண்டிருக்கோம். அவர் கொஞ்சம் சகுனம் பார்ப்பவர்.

அதான் சில வேளைகளில் உங்க மாட்டுப் பெண்ணைப் பார்த்துவிட்டுக் கிளம்ப முடியாமல், திரும்ப வீட்டிற்குள் வந்துடுவார். அந்தப் பெண் மனசு எவ்வளவு சங்கடப்பட்டிருக்கும்னு நேக்குப் புரியறது. அவராண்டையும் அதைப்பத்தி சொல்லியிருக்கேன். ஆனாலும், அவர் தன்னையறியாமல் ஒவ்வொரு முறையும் அப்படியே நடந்துக்கறார். உங்க மாட்டுப் பொண்ணுகிட்ட அதை பெரிசா எடுத்துக்க வேண்டாம்னு சொல்லுங்கோ. எல்லாம் பகவான் கிருபை. நாம என்ன செய்ய முடியும். எந்தப் பொண்ணுதான் இந்தக் கோலத்தை விரும்பி ஏத்துப்போ.. என்னமோ மனசு சங்கடமா இருந்துச்சு. இப்ப பாரத்தை இறக்கி வச்சாப்பல இருக்கு. நான் வரேன்.. எந்த உதவி வேணும்னாலும் தயங்காம எங்காத்துக்கு வாங்கோ'' என்று சொல்லிவிட்டு அதிகம் வாய் திறந்து பேசாத அந்த அம்மாவிற்கு, தான் இவ்வளவு நேரம் பேசியது ஏதாவது புரிந்ததா இல்லையா என்றே தெரியவில்லையே என்று யோசித்துக் கொண்டே வந்துவிட்டாள். ஆனால் அன்று அவள் பேசிய விசயம் அவர்களுக்கு நன்றாகவேப் புரிந்திருந்தது என்பது அவர்களின் நடவடிக்கையில் தெரிந்தது. அதற்குப் பிறகு அந்தப் பெண்ணை தன் கணவன் கிளம்பும் நேரத்திற்குப் பார்க்க முடிவதில்லை.

‘‘அருணா.. இங்க வாம்மா.. எதிர்த்தாத்துல யாரும் இல்லையா.. அவாளுக்கு ஏதோ கொரியர் வந்திருக்கு. அவா நம்மளாண்ட கொடுக்கச் சொல்லியிருக்காளாம். உன்கிட்ட ஏதாவது சொல்லிட்டுப் போனாளா அவா...?''

‘‘ஆமாண்ணா, அவா எல்லாரும் தில்லியில ஏதோ விழாவாம். அதுக்குப் போயிருக்காண்ணா. கொரியர் வந்தா வாங்கி வைக்கச் சொல்லியிருக்கா. இன்னும் ஒரு வாரம் ஆகுமாம் திரும்பி வர்றதுக்கு''

அன்று மாலை அலுவலகம் முடிந்து வீட்டிற்கு வந்தபோது எதிர்த்த வீட்டின் கதவு திறந்திருந்ததைப் பார்த்து அவர்கள் ஊரிலிருந்து வந்துவிட்டது தெரிந்தது.

‘‘அருணா.. எதிர்த்தாத்துக்காராளுக்கு ஒரு கொரியர் வந்ததே. அவா வந்துட்டா போலயிருக்கே. அதைக் கொடுத்திட்டியோ?’’

‘‘இல்லண்ணா மதியம்தான் வந்திருப்பாங்க போல. இனிமேதான் கொண்டுபோய் கொடுக்கணும். ‘‘

‘‘சரி, கொடு நானே கொடுத்துட்டு வறேன் என்று வாங்கிக் கொண்டு சென்றார். சென்றவர் அரை மணி நேரமாக வரவில்லையே. அப்படி என்னதான் பேசிக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லையே என்று யோசிக்கும் போதே, மளமளவென உள்ளே வந்தவர் தன் அருகில் வந்து, ஒன்றும் பேசாமல் தரதரவென கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, எதிர் வீடு நோக்கிச் செல்பவரின் செயல் எதுவுமே புரியாமல் பின்னாலேயே சென்றாள். நேரே உள்ளே அழைத்துச் சென்றவர் அங்கு ஈசி சேரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த பெரியவரின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிட்டு, தன்னையும் விழுந்து வணங்கச் சொன்னதன் காரணம் ஏதும் புரியாவிட்டாலும், பெரியவரை வணங்குவதற்கு எந்தக் காரணமும் தேவையில்லை என்றே எண்ணி தானும் சற்றும் தாமதியாமல் விழுந்து வணங்கினாள். ஆனால் எவர் காலிலும் சட்டென விழத் தயங்கும் தன் கணவனின் போக்குதான் அவளுக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஆனால் இவையனைத்தும் அவளுக்கு அந்த விசயத்தை தன் கணவன் மூலமாக அறிந்து கொள்ளும் வரைதான்....... அவர் அங்கு சென்ற போது நடந்ததைப் பற்றி சொன்ன விசயம் இதுதான்....

"வாங்க.. வாங்க. நானே உங்களை வந்து சந்திக்கணும்னு இருந்தேன். எங்க வீட்டுப் பெண்ணால உங்களுக்கு சில சங்கடம்னு சொன்னாங்க. இனி அப்படி நடக்காம பார்த்துக்கலாம். டெல்லியில என் மகனுக்கு ஒரு பாராட்டு விழா வச்சிருந்தாங்க. அதுக்காகப் போயிட்டு வந்தோம். அதான் கொரியரை உங்ககிட்ட கொடுக்கச் சொல்லியிருந்தேன். சிரமத்திற்கு மன்னிக்கணும். வந்ததிலிருந்து ஒரே கால்வலி. அதான் வந்து வாங்க முடியல’’

‘‘பரவாயில்லைங்க. கால்ல என்ன பிரச்சனைன்னு தெரிஞ்சிக்கலாமா?’’

“அதுங்களா, செயற்கைக் கால் பொருத்தியிருக்கேன். வயசாகுதில்லையா, டிராவல் பண்ணினா வலி அதிகமாயிடுது” என்று சொல்லி, காலைக் காண்பித்தார். ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்த ராமச்சந்திரனிடம் பெருமை பொங்க,

”1962ம் ஆண்டில் இந்தியாவிற்கும், சீனாவிற்குமான எல்லைப் பிரச்சனையினால் நடந்த போரில், இந்தியப் படையை முன்னின்று நடத்திச் செல்லும் அருமையான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த யுத்தத்தில் ஒரு கால் போனதால் செயற்கைக் கால் பொருத்தியிருக்கேன” என்றார் சர்வ சாதாரணமாக.

அவர்மீது இருந்த மரியாதை அதிகமாக இருக்கையின் விளிம்பிற்கு நகர்ந்து வந்த ராமச்சந்திரன், “மகனுக்கு ஏதோ பாராட்டுவிழா என்றீர்களே” என்று ஆர்வமாகக் கேட்டான்.

தன் மகனைப் பற்றிக் கேட்டவுடன், கண்களில் மின்னல் தீப்பொறியாய் பிரகாசிக்க, பெருமை பொங்க, ” சிங்கம் போல என் ஒரே மகன் வீரேந்திரன். நம் இந்திய இராணுவத்தின் கமாண்டரா பணிபுரிந்து கொண்டிருந்தான். கார்கில் போரில் அவனுடைய பங்கும் இருந்தது. கார்கிலில் முதன்முதலில் நம் நாட்டு தேசியக் கொடியை நட்டது வீரேந்திரன் தான்! அதற்குப் பிறகு பீகார்ல நடந்த நக்சலைட் தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டத்திற்கு தலைமை தாங்கிச் சென்றபோது, அங்கு நடந்த போரில் தன்னுடைய இன்னுயிரை இழக்க வேண்டிவந்தது. அந்த இறுதி நேரத்திலேயும், தம் ஆயுளை முழுமையா நாட்டிற்கு அர்ப்பணிக்க முடியலையே, அதற்குள்ளாக இறப்பு வந்துவிட்டதேன்னு வேதனைப்பட்டானாம் என் சிங்கக்குட்டி. தான் பெற்ற குழந்தையைக்கூட சரியாத் தூக்கி கொஞ்ச முடியலயேங்கற வேதனையைவிட நாட்டிற்குத் தன்னுடைய சேவையை முழுமையா அர்ப்பணிக்க முடியலையேன்னு நொந்து போனதோட, தன் மகனையும் இராணுவப் பள்ளியில் சேர்க்கணும்னு சொல்லியிருக்கான். என் பேரன் பரத்தும், என் மகனுக்குக் கொஞ்சமும் சளைத்தவன் இல்லை. அத்தனை சூட்டிப்பு. அத்தனை தேசபக்தி. அப்படியே அப்பாவைக் கொண்டு பிறந்திருந்தான்.

பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்புப் படையில் இருக்கும்போது, எதிரிகளின் தாக்குதலால், பல உயிர்களைக் காக்கும் பொருட்டு தம் இன்னுயிரைக் கொடுத்தவன். தன்னுடைய குழந்தைக்கு இரண்டு வயசாக இருக்கும் போதுதான் அவன் கடைசியாப் பார்த்தது. தம் மகனை இராணுவத்தின் ஒரு உயர் அதிகாரியாகப் பார்க்க வேண்டும் என்பதுதான் என் பேரனுடைய தீராத ஆசை. அதை நிறைவேத்த வேணும்னுதான் ஆண்டவ்ன் என்னை இன்னும் வச்சிருக்கான் போல. பேரனை விரைவில் டேராடூனில் உள்ள இராணுவப் பள்ளியில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்''

இதைச் சொல்லும்போது அந்தப் பெரியவரின் முகத்தில் துளியும் அச்சமோ, வேதனையோ இல்லை. மாறாக தாய்நாட்டிற்காக, பிறந்த மண்ணிற்காகத் தங்கள் கடமையைச் செவ்வனே செய்கிறோம் என்ற பெருமிதம்தான் தெரிந்தது.

ராமச்சந்திரனின் உள்ளத்தில் சொல்லொணா பலவிதமான எண்ணங்கள் சூழ்ந்துகொண்டு இருக்கையில் உட்காரவும் முடியாமல் எழுந்தவன், செய்வதறியாமல் மனைவியை அழைத்துக் கொண்டு வந்து அந்தப் பெரியவரின் கால்களில் விழுந்தபோது பாரதமாதாவின் கால்களில் விழுந்து ஆசி பெற்றது போன்றதொரு உணர்வில் புளங்காகிதம் அடைய அவர் கைகளைப் பிடித்து தம் கண்களில் ஒற்றிக் கொண்டபோது, ஏற்பட்ட பரவசம் சாட்சாத் அந்தப் பெருமாளையேத் தீண்டிய இன்பம் பெற்றது போல உணர்ந்தான்..

## 11. குரங்கு மனம்

"அருந்ததி, அம்மா சாப்பிட்டாங்களா? எங்கே ஆளையேக் காணோம்''

“இல்லப்பா, எங்கப்பா நேரத்துக்குச் சாப்பிடறாங்க.. என்ன சொன்னாலும் கேட்க மாட்டேங்கறாங்க. அழுதுகிட்டே இருக்காங்க. இன்னும் உங்கப்பா செத்த அதிர்ச்சியில இருந்து மீளவே இல்லை பாவம். நானும் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தேன். வேற என்ன செய்யிறதுன்னு தெரியல. நீ போய் பாரு ஜனா”.

கணவனும், மனைவியும் மாறி மாறி வருந்திக் கொண்டிருந்தனர். அப்பாவை திடீரென்று இப்படி ஒரு விபத்து அள்ளிச் சென்றுவிடும் என்று கனவிலும் யாரும் நினைக்கவில்லை. இந்த அறுபது வயதிலும், வங்கி மேலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் கூட, தான் ஓய்ந்து உட்காராமல், ஸெராக்ஸ் மிஷின் மற்றும் கம்ப்யூட்டர் சென்ட்டரும் வைத்து நடத்திக்கொண்டிருந்தவர். அவருடைய சுறுசுறுப்பைப் பார்த்து இளைஞர்களே பொறாமை கொள்ளும் அளவிற்கு அவர்தம் நடவடிக்கை இருந்தது அந்த ஆண்டவனுக்கேப் பொறுக்கவில்லை போலும். 15 வருடமாக தன்னோடு ஒட்டி உறவாடிய அந்த இரு சக்கர வாகனமே எமனாகிப் போனது. அப்படி ஒரு கோரமான விபத்தில் பாவம் மனிதர் அந்த இடத்திலேயே உயிரை விட்டுவிட்டார். மனைவியிடம், சீக்கிரம் வந்து டாக்டரிடம் கூட்டிச் செல்வதாகச் சொல்லிச் சென்றவர், வெகு சீக்கிரமே போன கையோடு, கருப்பு வண்டியில் வெள்ளைக் கட்டுகளுடன் வந்து சேர்ந்த போது மயங்கிச் சரிந்த மனைவி கௌரி இன்னும் முழுமையாகத் தெளியவே இல்லை. மகன் ஜனார்த்தனனும், மருமகளும் ஒரு குழந்தையைப் போல கௌரி அம்மாவை கவனித்துக் கொண்டதை அக்கம் பக்கத்தினர் பாராட்டாத நாளில்லை. நேர, நேரத்திற்கு கட்டாயப்படுத்தி உணவு உண்ணச் செய்து, பெரும்பாலான நேரங்கள் கூடவே இருந்து ஆறுதலும் சொல்லி தேற்றிக் கொண்டிருந்தனர். கௌரியும் மற்ற மாமியார்கள் போல டிவியின் முன்னால் உட்கார்ந்து சீரியல் பார்த்துக்கொண்டு மருமகளை அதிகாரம் செய்து வேலை வாங்கும் வழக்கம் இல்லாதவள் ஆயிற்றே . வீட்டில் எல்லா வேலைகளையும் தானே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வதோடு மருமகளையும், தன் மகளைப் போலவே, கண்ணே, பொன்னே என்று தலையில் தூக்கி வைத்துக்கொண்டல்லவா திரிந்தாள். இன்று அவளுக்கென்று ஒரு பெருந்துயரம் வந்தபோது தூணாகத் தாங்கி நிற்பதில் என்ன அதிசயம். திருமணம் ஆகி 12 வருடம் ஆகியும்

குழந்தை பாக்கியம் இல்லாத மருமகளை இன்றுவரை ஒரு சொல்லேனும் சலிப்பாகப் பேசியவளில்லை. ஆண்டவன் செயல், நேரம் காலம் வரும்போது எல்லாம் தானாக நடக்கும் என்று பாடும் பழைய பஞ்சாங்கமாக இருக்காமல், மருமகளை கோயில் குளங்களுக்குக் கூட்டிச் செல்வதுடன், ஊரில் உள்ள நல்ல குழந்தைப் பேறு மருத்துவமனைகள் அனைத்திற்கும் கூட்டிச் செல்வாள். எந்த வகையிலும் மருமகள் மனம் தளராமல் தைரியம் சொல்லி பாதுகாப்பதில் தன் தாயை மிஞ்சியவள் மாமியார் என்பதில் அப்படி ஒரு பெருமை அருந்ததிக்கு. வயது ஏறிக்கொண்டே போவதால் இனி காத்திருந்து பயனில்லையென சோதனைக் குழாய் குழந்தை முயற்சிக்கலாம் என்று மகனையும், மருமகளையும் கட்டாயப்படுத்தி ஒப்புக்கொள்ள வைத்த இந்த நேரத்தில்தான் இப்படி பேரிடி தாக்கி, உறைந்துபோய் கிடக்கிறாள் கௌரி. தில்லியில் வேலை பார்க்கும் மகளும், மருமகனும்கூட அதிக நாள் லீவு போட்டு தங்க முடியாத சூழ்நிலையில், அம்மாவை அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்லியும், கணவன் வாழ்ந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட எங்கும் நகர மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கும் தாயை அனுப்ப மகனும் தயாராக இல்லை. நடந்ததை ஏற்றுக் கொள்ளும் பக்குவமே இல்லாமல் துவண்டு போய் கிடக்கும் மாமியாரைத் தேற்றுவதற்கு தன்னால் ஆன அனைத்தும் செய்து கொண்டிருந்தாள் அருந்ததி. இந்த நேரத்தில்தான், அவளுக்கும் குழந்தைபேறு உண்டாகி வாந்தி மயக்கம் என வர ஆரம்பித்திருந்ததால் மெல்ல தன்னைத் தேற்றிக் கொண்டு தன் கணவனே குழந்தை உருவில் வரப்போவதாக நம்பிக் கொண்டு மருமகளை கவனிக்க ஆரம்பித்திருந்தாலும், முகத்தில் பழைய உற்சாகம் சுத்தமாக இல்லை.

அம்மா, மெல்ல தேறி வந்து மருமகளை கண்ணுக்குள் வைத்து தாங்கிக் கொண்டிருப்பதில் ஜனாவிற்கு போன நிம்மதி திரும்ப வந்தது. தன் வியாபாரத்தை கவனிக்க நேரம் கிடைத்தது. அருந்ததிக்கு ராஜ உபசாரம் நடந்து கொண்டிருந்தது. எல்லாம் பழைய நிலைக்கு வந்து கொண்டிருப்பதில் அவரவர் தம் வேலையை பார்க்க ஆரம்பித்தபோதுதான் அடுத்த பிரச்சனை ஆரம்பித்தது. ஆம் யாருமே நினைத்துக்கூடப் பார்க்காத பிரச்சனைதான்.... நாடகத்தில் அடுத்தடுத்து காட்சிகள் மாறிக்கொண்டிருந்தால்தானே சுவாரசியம் கூடுகிறது?

அன்று வெள்ளிக்கிழமை. வழக்கம் போல 5 மணிக்கே எழுந்து வாசல் தெளித்து செம்மண் கரையுடன், மாக்கோலம் போட்டு, தலை குளித்து, சாமி விளக்கேற்றி, சமையலறைக்கு வந்து, பால் பாக்கெட்டை எடுத்து பாத்திரத்தில் உடைத்து ஊற்றி , மணக்க, மணக்க பீபரி கொட்டையை அரைத்த காப்பித்தூளுடன், அளவான சிக்கரி கலந்து பில்டரில் போட்டு, கெட்டியான டிகாக்‌ஷன் இறக்கி, அது வடிவதற்குள் பாலைக் காய்ச்சி இறக்கி வைத்து, இரண்டையும் கலந்து தேவையான சர்க்கரை சேர்த்து, சுடச்சுட காப்பியுடன், மகனையும், மருமகளையும் கதவைத்தட்டி எழுப்பிக் கொண்டு நிற்கும் போது ஏதோ லேசாக தலை சுற்றுவது போல இருந்தது. இப்போதெல்லாம் அடிக்கடி அப்படி ஆகிறதுதான். ஆனாலும் இன்று சற்று அதிகமாகத்தான் இருக்கிறது. சாப்பாடும் சரியாகக் கொள்வதில்லை. அதனால்கூட பலகீனத்தினால் இப்படி ஆகியிருக்கலாம். போகப்போக சரியாகிவிடும் என்று விட்டுவிட்டாள். ஆனால் இன்று என்னவோ குடலைப் புரட்டி வாந்தியெடுக்க வருகிறதே என்று நினைக்கும் போதே, தொண்டைக்குழி வரை வந்துவிட்டது. அருகில் இருந்த மேசையின் மீது காப்பியை வைத்துவிட்டு வாஷ் பேசினுக்கு ஓடிச் சென்று கடகடவென அப்படியே வாந்தி எடுத்தாள். பித்தம் அதிகமாகிவிட்டது என்று கொஞ்ச நேரம் போய் அப்படியே படுத்தவள் கண்ணயர்ந்துவிட்டாள். தோளில் தட்டி ‘கௌரிம்மா.. கௌரிம்மா’ என்று யாரோ கூப்பிடுவது போல இருந்தது. கணவர் மட்டுமே அப்படித்தட்டி செல்லமாகக் கூப்பிடுவாரே…

‘என்னங்க… என்னங்க… எங்க போனீங்க.. ஏன் இப்படி செய்தீங்க..’

…… ‘ம்ம்ம்ம்ம். சரி.. சரி. வந்த வேலையை முடிச்சிட்டு சீக்கிரமா நீயும் வந்து சேரும்மா.. உனக்குத் தேவையானதெல்லாம் உன் பீரோவிலேயே இருக்கு. எதுக்கும் கலங்காதே. தைரியமா இருக்கணும். எல்லாம் நன்மைக்கே’

விலுக்கென்று விழித்தவள் மேலெல்லாம் தெப்பமாக நனைந்திருந்தது வியர்வையால்.. ஒன்றும் புரியாமல் கணவனின் போட்டோவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். கனவா, நனவா என்று ஏதும் புரியாமல் மெல்ல எழுந்து சமயலறைப் பக்கம் சென்று காலை டிபனுக்கு ஏற்பாடு செய்தாலும், மனதில் இன்னும் கணவன் சொன்னது ரீங்காரமிட்டுக் கொண்டேயிருந்தது..

மாலை மருமகளுக்கு மருத்துவமனையில் செக்கப்பிற்கு போக வேண்டிய நாள் , மகன் வர தாமதமாகும் என்பதால் தானே அழைத்துக்கொண்டு கிளம்பினாள் கௌரி. ஆட்டோ உருட்டிப் பெரட்டி ஒரு வழியாகக் கொண்டு சேர்த்தது. நல்ல வேளையாக திரும்பச் செல்லும்போது ஜனா வந்து காரில் கூட்டிச் சென்றுவிடுவான் என்று நிம்மதியாக இருந்தது. டோக்கன் வாங்கி வந்து உட்கார்ந்திருக்கும்போது, திரும்பவும் லேசாக தலை சுற்றல். 'அருந்ததி.. ' என்று மெதுவாக கூப்பிடும்போதே அப்படியே சரிந்து நாற்காலியிலேயே விழப்போனவளை தாங்கிப்பிடித்து, நர்சை உதவிக்குக் கூப்பிட்டாள். உடனே ஓடி வந்த நர்சு மளமளவென ஸ்டிரெச்சரைக் கொண்டு வரச்சொல்லி அதில் படுக்க வைத்து டாக்டர் அறைக்கு கூட்டிச் சென்றாள். பல சோதனைகளும் எடுக்கப்பட்டு முடிவுகளும் தெரிந்துவிட்டது. டாக்டரம்மா அருந்ததியைக் கூப்பிட்டுச் சொல்லும் வரை அவள் பாவம் மாமியாருக்கு ஏதோ பெரிய வியாதி வந்துவிட்டது போல அதிர்ச்சியில் வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொண்டிருந்தாள். ஆனால் டாக்டரம்மா கூப்பிட்டு அந்தச் செய்தியைச் சொன்னவுடன் அடுத்த நொடி நம்பவும் முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல் குழப்பத்தில் நின்றிருந்தாள். கௌரியிடம் டாக்டரம்மா 'அம்மா.. நீங்க உண்டாயிருக்கீங்க.. என்று சொன்னவுடன் ஒன்றும் புரியாமல், 'அது என் மருமகள் அம்மா. அவள்தான் இப்ப முழுகாம இருக்கா..'

இல்லம்மா.. கொஞ்சம் நிதானமாக் கேளுங்க. உங்களுக்கு இப்ப நாலு மாசம் ஆகியிருக்கு. குழந்தை நன்றாக இருக்கிறது என்று சொன்னபோது, 'ஐய, இது என்ன டாக்டரம்மா, இப்படி உளறுகிறதே.. தீட்டே நின்னு போனவளுக்கு குழந்தை உண்டாயிருக்குன்னு சொல்லுது.. இதுகிட்ட போய் மருமகளுக்கு வைத்தியம் பாக்க வந்திருக்கோமே.. முதல்ல டாக்டர மாத்தணும்' என்று நினைத்து முகத்தை வெறுப்பாக வைத்துக் கொண்டாள். அதற்குள் அருந்ததி, ஜனாவிற்குப் போன் செய்து வரவழைத்திருந்தாள். இருவரையும் டாக்டர் கூப்பிடுவதாகச் சொல்லி நர்சு வந்தபோது என்னவொ ஏதோவென்று இருவரும் பதட்டமாகத்தான் சென்றார்கள். டாக்டர் சொன்ன செய்தி இருவருக்கும் பேரதிர்ச்சி.. நம்ப முடியாமல் மீண்டும், 'டாக்டர், அம்மாவிற்கு இப்போது 55 வயசு ஆகிறது. இந்த வயசிலகூட இது சாத்தியமா' என்று கேட்டான் ஜனா. '58 வயதிலெல்லாம் குழந்தை பெற்றிருக்கிறார்கள். கணவன், மனைவி

இருவருக்கும் உடல் நல்ல ஆரோக்கியமாக இருந்தால் இது சாத்தியம்தான். உலகில் பலருக்கு இது போன்று நல்லபடியாகவே பிரசவம் ஆகியிருக்கிறது. அதனால் இதில் ஒன்றும் அதிசயம் இல்லை. இரத்தம் குறைவாக இருப்பதால் நல்ல சத்தான உணவுடன் நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும்.' என்று டாக்டர் சொன்னவுடன் ஜனா சட்டென்று, 'டாக்டர் இந்த வயதில் இதெல்லாம் அசிங்கம் இல்லையா.. மாமியாருக்கும், மருமகளுக்கும் ஒரே சமயத்தில் பிரசவம் என்றால் ஊர் சிரிக்காதா, அதுவும் அப்பாவும் தவறிவிட்ட இந்த நேரத்தில் ...' என்று இழுத்தவன், எப்படியாவது அபார்ஷன் செய்து விடச் சொன்னான். டாக்டரும், நான்கு மாதம் ஆகிவிட்டதால் இனிமேல் அதற்கு வாய்ப்பே இல்லை என்றும் அப்படி செய்தால் அந்த அம்மாவின் உயிருக்கே ஆபத்து என்பதால் ரிஸ்க் எடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டார். அந்த நொடியில் வெட்கத்தால் மகனையும், மருமகளையும் நிமிர்ந்து பார்க்கும் தைரியம்கூட இல்லாமல், வீட்டிற்கு வந்தபின்பும் தன்னுடைய அறைக்குள்ளேயே முடங்கிக் கிடக்க ஆரம்பித்திருந்தாள். ஒரு முறை மகன் வந்து வேறு டாக்டரிடம் சென்று குழந்தையை கலைத்துக் கொண்டு வரலாம் என்று சொன்னபோது, மகன் ஏதோ தவறான ஒரு விசயத்தை சொல்லிவிட்டது போலப் பார்த்த அம்மாவின் மீது முதல் முறையாக கோபமும், வெறுப்பும் வந்தது..

அன்றிலிருந்து கௌரியின் நிலைமையே தலைகீழாக மாறியிருந்தது. இருவரும் ஏனோ அவளை அருவெறுத்து ஒதுக்க ஆரம்பித்தார்கள். ஏதோ புழுவைப் பார்ப்பது போன்று அசூசையுடன் தன்னைப் பார்ப்பதை தாங்க மாட்டாமல் அறையை விட்டு வெளியே வருவதே இல்லை. வேலைக்காரி கொண்டு வந்து வைக்கும் சாப்பாட்டை கொரித்துவிட்டு படுத்துக் கிடந்தாள். வயிறு மெல்ல வெளியே தெரிய ஆரம்பித்திருந்தது. தன்னை வெறுத்து ஒதுக்கும் அளவிற்கு அப்படி என்ன தவறு நடந்துவிட்டது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தது அந்தப் பேதை நெஞ்சம். வீட்டிற்கு வந்த விருந்தாளிகளிடம், வாய் கூசாமல் அம்மா மகள் வீட்டிற்குச் சென்றுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருந்ததோடு, அருந்ததியின் உறவினர் யாரோ இரண்டு கர்ப்பிணிகள் ஒரே வீட்டில் இருப்பது நல்லதல்ல என்று சொல்லவும் அடுத்த பிரச்சனை உருவானது. இதையே சாக்காக வைத்துக்கொண்டு உடனடியாக கௌரியை

தில்லியில் மகள் வீட்டில் விட்டு வரும்படி அடம் பிடிக்க ஆரம்பித்தாள் அருந்ததி. ஜனாவிற்கும் அதுவே சரியெனப்பட்டது, ஆனால் சகோதரி சாந்தி இந்த விசயத்தைக் கேட்ட மறுநொடி தன் மாமியார் உடன் இருப்பதால் அம்மாவை இந்த நிலையில் கூட்டி வந்தால் ரொம்பவும் கேவலமாகப் பேசுவார்கள் என்றும் தானும் வேலைக்குச் செல்வதால் அம்மாவை கவனித்துக் கொள்ளவும் முடியாது என்று உறுதியாக மறுத்துவிட்டாள். நொடியில் காலம் எப்படியெல்லாம் புரட்டிப் போட்டுவிட்டது என்று நினைத்து வேதனையில் துடித்தாள் கௌரி. தன் குடுமபமே கோவில், கணவனும் குழந்தைகளுமே உலகம் என்று வாழ்ந்தவளுக்கு எல்லாமே மாயமாகிப்போனது போன்றதொரு பிரமை. வீட்டில் இதேப் பேச்சாக இருந்தது. அந்தத் தாய் அவர்களுக்குப் பெரும் பாரமாகிப் போனாள். எங்கேயாவது ஒழிந்தால் போதும் என்று நினைக்கத் தொடங்கினார்கள்.

அடுத்த நாள் காலை வேலைக்காரி சாப்பாடு கொண்டுவந்து பார்த்தபோது கௌரியின் அறை வெறிச்சோடிக் கிடந்தது. ஓடிப்போய ஜனாவை அழைத்து வந்து சொன்னாள். அப்பாவின் போட்டோவும், அம்மாவின் பெட்டியும் காணாமல் போயிருந்தது. நகையெல்லாம் மேசையின் மீது கழட்டி வைக்கப்பட்டிருந்தது. ஒரு நொடி அதிர்ச்சியில் ‘அம்மா’ என்று அலறியவன் அடுத்த நொடி, சூழ்நிலையின் பிடியில் சிக்கியவனாக, ‘கடவுளே அம்மா எங்க இருந்தாலும் நிம்மதியாக இருக்க வேண்டும்’ என்று மட்டுமே வேண்டிக்கொள்ள முடிந்தது. பெரிய பாரம் குறைந்தது போல இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். காலச் சக்கரம் யாருக்காகவும் நிற்பதில்லையே. நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. அருந்ததிக்கு பிரசவத்திற்கான நேரம் வந்துவிட்டது. மருத்துவமனையில் சேர்த்தவனுக்கு அம்மாவின் நினைவும் கூடவே வந்தது. அம்மா எங்கே என்ன நிலையில் இருக்கிறாளோ தெரியவில்லையே என்ற வருத்தமும் இருக்கத்தான் செய்தது. அருந்ததிக்கு அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. குழந்தைக்கு கழுத்தில் மாலை சுற்றியிருப்பதால் சற்று சிரமம் என்று மருத்துவர்கள் கூறியபோது அதிர்ச்சியில் உறைந்து நின்றான் ஜனா. ‘கடவுளே எப்படியாவது எங்கள் குழந்தையைக் காப்பாற்றிக் கொடு’ என்று முட்டி மோதிக்கொண்டான். ஆனால் டாக்டர் வந்து, இரு உயிரில் ஒன்றைத்தான் காப்பாற்ற முடியும், நீங்கள்தான் முடிவு செய்ய

வேண்டும் என்று கையெழுத்து கேட்டபோது, மனைவிதான் வேண்டும் என்று சொல்லிவிட்டாலும், அவளிடம் குழந்தை இறந்துவிட்டது என்று எப்படி சொல்வது, சொன்னால் அவள் தாங்குவாளா என்று அச்சத்தில் அரற்றிக் கொண்டிருந்தான்.

டாக்டரும் அருந்ததிக்கு இரத்தப்போக்கு அதிகமாகிவிட்டதால் அவளை மிக ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படியும், சில நாட்களுக்காவது குழந்தை இறந்த அதிர்ச்சியான செய்தியைச் சொல்ல வேண்டாம் என்றும் சொல்லிவிட்டார். லேசாக மயக்கம் தெளிந்து மனைவி கண் விழித்து குழந்தை எங்கே என்று கேட்கும் பொழுதெல்லாம், இன்குபேட்டரில் வைத்திருப்பதாகவும், அடுத்த நாள் கொடுத்து விடுவார்கள் என்றும் சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்தான். இன்னும் எவ்வளவு நாட்கள் இது சாத்தியம் என்று நினைத்த போது மனைவியை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற அச்சம் மேலிட்டது. அருந்ததி வேறு என்ன குழந்தை, யாராட்டம் இருக்கிறது, என்ன கலர் என்றெல்லாம் துருவித் துருவிக் கேட்கும் போதெல்லாம், அவள் ஆசைப்பட்டது போலவே பெண் குழந்தைதான், நல்ல கலர், அழகு என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி சொல்லிச் அவளை சரிகட்டுவது சிரமமாகத்தான் இருந்தது. மயக்கம் தெளிய ஆரம்பித்திருந்தது.

இன்று மனைவியிடம் மெல்ல உண்மையைச் சொல்லிவிட வேண்டும், ஒருவேளை வீட்டில் போய்ச் சொல்லி ஏதாவது ஏடாகூடமாக ஆகிவிட்டால் என்ன செய்வது, இங்கேயே சொல்லிவிட்டால், ஏதாவது அவசரம் என்றால் இங்கேயே பார்த்து சரி செய்துகொண்டு போய்விடலாம் என்று நினைத்தான். மனைவி கண் விழிப்பதற்காகக் காத்திருந்தான், மனதெல்லாம் ரணத்துடன். டாக்டர் வந்து பார்த்து பில்லை வாங்கிச் செல்ல கூப்பிட்டவுடன், இன்னும் இரண்டு நாட்கள் இருக்கட்டும் என்று சொல்லலாம் என நினைத்து டாக்டரின் அறைக்குச் சென்று தன் மனதில் உள்ளதைச் சொன்னான் ஜனா, டாக்டரும் அதற்கு ஒப்புதல் அளிக்கவும், எப்படியாவது மனைவியிடம் குழந்தை தங்கவில்லை என்பதைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டே வந்தான். அறைக்குள் நுழைந்தவுடன் அங்கு மற்றொரு கட்டிலில் ஒரு துணியில் சுற்றி ஏதோ நெண்டிக்கொண்டிருப்பது தெரிய ஓடிச்சென்று

பார்த்தான். ஒரு பெண் குழந்தை பட்டுக் கன்னத்துடன், பொக்கை வாய்ச் சிரிப்புடன் அன்று மலர்ந்த ரோசாப்பூவெனக் கிடந்தது. மேலே சுற்றியிருந்த அந்த பச்சை வண்ண நூல் சேலைத் துணியைப் பார்த்தவுடன், இது அம்மாவின் சேலையல்லவா, அம்மா இங்கு பக்கத்தில்தான் எங்கேயாவது இருக்க வேண்டும். அம்மா என்று சொல்லிக்கொண்டே ஓடப் போனவனுக்கு அருகிலிருந்த கடிதம் ஒன்று கண்ணில் பட்டது.

‘‘அன்பு மகனுக்கு,

உன் அன்புத்தாய் கௌரி எழுதுவது.நான் நலமாக இருக்கிறேன். என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம். உங்கள் இருவரையும் நினைத்துத்தான் வருத்தமாக உள்ளது. உன் குழந்தை இறந்தது எனக்குப் பெரும் அதிர்ச்சி. எல்லாம் விதியின் செயல். மனம் வேதனைப்படாதே. நாம் கனவிலும் நினைக்காத ஏதேதோ நடந்துவிடுகிறது. ஆனால் காரணம் இல்லாமல் காரியங்கள் இல்லை. அருந்ததிக்கு என் பரிசாக இந்தக் குழந்தையைக் கொடுத்துவிடு. உங்கள் அனைவருக்கும் என் மனம் நிறைந்த ஆசிகள். உங்களுக்கு எந்த குற்ற உணர்வும் வேண்டியதில்லை. என் காலம் முடிந்துவிட்டது. இனிதான் உங்கள் வாழ்க்கையில் வசந்தம் வீசப்போகிறது. மகிழ்ச்சியாக இருங்கள்.

என்றும் உங்கள் அன்பை மறவாத

அம்மா.

ஜனாவிற்கு திடீரென்று அம்மாவை உடனே பார்க்க வேண்டும் என்ற பேராவல் வந்தது. அவசரப்பட்டு தாயெனும் தெய்வத்தை இழந்துவிட்டோமே என்று உள்ளம் துடித்தது. குழந்தையை அருந்ததியின் அருகில் போட்டுவிட்டு வெளியே ஓடினான். அம்மா எங்காவது கண்ணில் சிக்க மாட்டாளா என்று.. அருகில் எங்கு தேடியும் கிடைக்காததால், குழந்தை நினைவு வந்தவுடன் மீண்டும் மருத்துவமனைக்கு ஓடினான்.. அங்கு அருந்ததி, குழந்தையை அள்ளி அணைத்து பாலூட்டிக் கொண்டிருந்தாள்....

கணவன் தனக்காக வைத்துவிட்டுப் போன அந்தப் பணம் இன்று கைகொடுக்க ரிசிகேசத்தில், மக்கள் சேவையே மகேசன் சேவையென, முடியாதவர்களுக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்து காலத்தைக் கடத்திக்கொண்டு, கணவனின் அழைப்பிற்காகக் காத்துக்கிடந்தாள், கௌரி.

## 12. பசுமையின் நிறம் சிவப்பு

”ஏம்மா.. வீட்டில யாரும்மா. எங்கம்மா உன் புருசன்? பணம் வாங்கறப்ப தேடி வந்து மணிக்கணக்கா குந்திக்கிட்டிருந்து வாங்கத் தெரியுது.  வட்டி கூட நேரத்துக்கு ஒழுங்கா வந்து கட்ட முடியல..  ஏம்மா எல்லாரும் சோத்துக்கு உப்பு போட்டுத்தானே திங்கறீங்க. எத்தனை வாட்டி நடக்குறது? எங்களுக்கெல்லாம் வேற பொழப்பே கிடையாதா?”

“ஐயா, அவுரு கடைவீதிக்கு போயிருக்காருங்க. வந்தவுடனே வரச்சொல்றேங்க. சத்தம் போடாதீங்க ஐயா, அக்கம் பக்கத்துல மானம் போவுது.”

“ஓ.. மானமா அப்படி ஒன்னு இருக்குதா உங்களுக்கு. இருந்தா இப்படி பணத்தை வாங்கிக்கிட்டு மூனு மாசமா வட்டியும் கட்டாம, முதலுக்கும் வழியில்லாம தலை மறைவா இருப்பானா உன் புருசன், பேச வந்துட்டா.. இந்தா இந்த வெட்டி நியாயமெல்லாம் வாண்டாம். உன் புருசனை உடனடியா பணத்தைக் கொண்டாந்து கட்டச்சொல்லு. இல்லேனா நடக்குறதே வேற ஆமாம்...”

முறுக்கு மீசையும், கருத்த இரட்டை நாடி உருவமும், சிவந்த கண்களும் பார்ப்பதற்கே ஐயனாரப்பன் போல ஒரு பயமுறுத்தும் தோற்றம் கொண்ட இந்த மனுசனிடம் போய் மாட்டிக் கொண்டோமே என்ற கிலி போட்டு ஆட்டிவைக்க, இதிலிருந்து எப்படி மீண்டு வரப்போகிறோம் என்ற  அதிர்ச்சியில் அப்படியே

உறைந்து நின்றிருந்தாள். குழந்தையின் அழுகை சத்தம் சுய நினைவை மீட்டுக் கொண்டுவர எடுத்து பால் புகட்ட ஆரம்பித்தாள். குழந்தைக்கும் அந்த வேதனை உணர்வு தொற்றிக் கொண்டதோ என்னவோ, அமைதியில்லாமல் நெண்டிக்கொண்டே பாலருந்திக் கொண்டிருந்தது. வீட்டில் ஒழுங்காக சோறு பொங்கி பல நாட்கள் ஆகிவிட்டது. அவ்வப்போது அடுப்பில் பூனை தூங்கிக் கொண்டிருக்கிறது.

கருகாத பயிரின் பசுமை நிறைந்த ஊர் என்பதாலேயே கருகாவூர் என்று பெயர் வைத்தார்கள். அதெல்லாம் ஒரு காலம். இன்று மழையும் இல்லாமல், தண்ணீருக்கும், மின்சாரத்திற்கும் தட்டுப்பாடும் ஏற்பட்டு காய்ந்து போன வயல் வெளிகள் நிறைந்து கிடக்கும் ஊருக்கும் அதே பெயர்தான். விதை நெல்லுக்கும், உரத்திற்கும், கூலியாட்களுக்கு கொடுப்பதற்கும் என்று மொத்தமாக வாங்கிய கடன் இன்று மிரட்டிக் கொண்டிருக்கிறது. குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை வரம் அள்ளி வழங்கும் தாய் திருக்கருகாவூர் அம்மன். ஆனால் இன்று அவள் கொடுத்த வரத்தில் பிறந்த பல குழந்தைகள் பாலுக்கும் வழியில்லாமல் கிடப்பதைக் காண நேரமில்லையோ அவளுக்கு என்று நினைத்து மருகிக் கொண்டிருந்தாள் மங்கையர்கரசி என்ற மங்கை. குழந்தையை தூங்க வைத்துக் கொண்டிருந்தவள் வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டு கணவன் தான் வந்திருக்க வேண்டும் என்று அரக்கப் பரக்க எழுந்து வந்தாள்.

மிகவும் சோர்ந்த முகத்துடன், களைத்துப்போய் வந்திருக்கும் சந்திரனைப் பார்க்க அவளுக்கும் வேதனையாக இருந்தது. அவன் முகத்தைப் பார்த்தவுடன் தெரிந்துவிட்டது போன காரியம் ஆகவில்லை என்று. எப்படியாவது பணம் புரட்டிக் கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்ற கணவன் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வந்திருப்பதைப் பார்த்தவுடன் அந்த ஃபைனான்சுகாரனின் முகம்தான் நினைவிற்கு வந்தது. கழுத்தில், கையில், காது மூக்கில் கிடந்த நகைகள் அனைத்தும் ஒவ்வொன்றாக அடமானத்தில் சென்று, பாதிக்கும் மேல் மூண்டும்விட்டது. இப்போது என்னதான் வழி என்று புரியாமல் திகைத்து நிற்பவளைக் கண்ட சந்திரன்,

''என்னம்மா, என்னாச்சு ஏன் இப்படி இருக்கே. யாராவது வீட்டுக்கு வந்தாங்களா.. ஏதும் பிரச்சனையா?'' என்றான்.

கண்ணில் முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு பேசவும் நா எழாமல் திக்கித் திணறி ஃபைனான்சுகாரன் வந்து சத்தம் போட்டதை சொன்னவுடன் அவன் முகம் மாறிப்போனது. இன்னும் இரண்டொரு நாட்களில் தான் கேட்டிருந்த இடத்தில் பணம் கிடைத்துவிடும் என்றும் அவனுக்கு மொத்தமாகக் கொடுத்து செட்டில் பண்ணிவிடலாம் என்றும் சொல்லி மனைவியை சமாதானம் செய்துவிட்டு, அவனை நேரில் பார்த்து இன்னும் இரண்டு நாட்கள் டைம் கேட்டுவிட்டு வருவதாகக் கூறி சாப்பிடாமல்கூட சென்று விட்டான். திருமணம் ஆகி சந்திரனுடன் வாழ்ந்த இந்த எட்டு ஆண்டு கால வாழ்க்கையில் இதுவரை கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாமல் ராணி போல வைத்திருந்தான். மூத்தவள் லட்சுமிக்கு இப்போது ஏழு வயது ஆகிறது ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு வரமாய் வந்து பிறந்தவன் விஜயன். குழந்தைக்கு ஒரு வயது முடிந்து விட்டது. இப்படி ஒரு நிலை வரும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்தவளில்லை அவள். தங்கள் உறவுகளிலேயே ஓரளவிற்கு படித்தவளும், நல்ல சிவந்த நிறத்துடன் அழகாக இருப்பவளும் தன் மனைவி மட்டுமே என்பதில் பெரிய பெருமை அவனுக்கு. அவளுடைய முகத்தில் இன்று பரவி இருக்கும் சோகத்தைக் காணச் சகிக்காமல் வேதனையின் உச்சத்திற்கே சென்றிருந்தான்.

எதையோ நினைத்துக் கொண்டே நடந்தே ஃபைனான்சுகாரன் வீடு வரை வந்தவன் வெளியில் இருந்த ஆட்களிடம் ஐயாவைப் பார்க்க வேண்டும் என்று அனுமதி கேட்டான். உள்ளே வரச்சொன்னவுடன் என்ன பேசுவானோ என்ற அச்சத்தில்தான் மெதுவாகத் தயங்கித் தயங்கி சென்றான். ஆனால் அவன் எதிர்பார்த்த அளவிற்கு ரொம்ப கோபமாக இல்லாதது ஆறுதலாக இருந்தது. 'என்னப்பா.. பணம் கொண்டாந்துட்டியா, பரவாயில்லையே அதுக்குள்ளார வந்துட்ட' என்று சொன்னபோது அவனும் தயங்கியபடி இன்னும் இரண்டு நாட்கள் மட்டும் டைம் கொடுத்தால் பணம் முழுவதும் கொண்டுவந்து கட்டிவிடுவேன் என்று கெஞ்சலாகக் கேட்டபோதும், சற்றும் கோபப்படாமல், ரொம்பவும் அமைதியாக அவன் சொன்ன விசயம் அடி வயிற்றை

கலக்கியதோடு கோபத்தில் நெற்றிப் பொட்டும் துடிக்க ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் பல்லைக் கடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்துவிட்டான். மனைவியின் முகத்தைக் காணப்பிடிக்காமல் ஒன்றும் பேசாமல் நேரே படுக்கையறையினுள் நுழைந்து அப்படியே படுக்கையில் சாய்ந்துவிட்டான். கொஞ்சமாவது சாப்பிட்டு படுக்கச் சொல்லி மங்கை எவ்வளவோ கட்டாயப்படுத்தியும் மறுத்துவிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டான். அவளும் எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு சாப்பிடப் பிடிக்காமல் வந்து படுத்துவிட்டாள். அசதியும், பசியும் சேர்ந்து அவளை தூங்கச் செய்துவிட்டது.

தூங்கிக் கொண்டிருந்த மனைவியின் விகல்பமில்லாத முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன். 0 வாட்ஸ் விளக்கு வெளிச்சத்தில் பொன்னாக மின்னும் அந்த வதனம் இன்று ஏனோ பாரமேற்படுத்துகிறது. எத்தனை நாள் நிலவொளியில் ரசித்திருப்பான் இந்த தெவிட்டாத பேரின்பத்தை. ஆனால் இன்று அந்த படுபாவி பாழாய்ப்போன அந்தப் பணத்திற்காக என்ன கேள்வி கேட்டுவிட்டான். தன் அன்பு மனைவியை அல்லவா பணயம் வைக்கச் சொன்னான்.. அவளைப் பற்றி எத்துனை நாராசமாக தன் முன்னாலேயே வர்ணித்ததை நினைக்கும்போதே உள்ளம் குமுறி இதயம் வெடித்து சிதறியது. இன்னும் இரண்டு நாட்களில் எப்படி பணம் கொடுப்பது என்று எதுவுமே புரியவில்லை. எந்த வழியும் புலப்படவில்லை. பெற்ற தாயாகக் காத்துவந்த பூமி மாதாவே கைவிட்ட பின்பு இனி தன்னை யார்தான் காப்பாற்ற முடியும்? அரசாங்கத்தில் எத்தனையோ திட்டம் விவசாயிகளுக்காகப் போட்டு வைத்தாலும், சிலதெல்லாம் ஏட்டளவிலேயே நின்று போவதும், பெரும்பாலும் வசதியும், பதவியும் படைத்தவர்களுக்கே அவையெல்லாம் சென்று சேர்வதே வழமையாகிவிட்டது. கிசான் அட்டைக்காகத் தான் நடந்து களைத்துப் போனதும் நினைவிற்கு வந்தது. ஒரு வேளை அந்த அட்டைக் கிடைத்திருந்தால் இந்த ஃபைனான்சுகாரனிடம் மாட்டி அவதிப்பட்டு இன்று இப்படி ஒரு நிலையில் துடிக்க வேண்டி வந்திருக்காதோ.. ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும் என்று துவண்டு விழுந்தான்..

சுள்ளென்று முகத்தில் சூரிய ஒளி சன்னல் வழியாக பரவ, சுருட்டிப் பிடித்துக் கொண்டு எழுந்தாள் மங்கை. ஏனோ இன்று இவ்வளவு நேரம் தூங்கிவிட்டாள்.

தொட்டிலில் குழந்தை முழித்து, விளையாடிக் கொண்டிருந்தான்.. கட்டிலில் மகள் லட்சுமி மட்டும் தூங்கிக் கொண்டிருந்தாள். அருகில் படுத்திருந்த கணவனைக் காணாமல், ஒருவேளை பாத்ரூமில் இருப்பானோ என்று போய் பார்த்தாள். கதவு திறந்தே இருந்தது. தேடிக்கொண்டே சமயலறைப் பக்கம் வந்தவள் அதிர்ச்சியில் வீல் என்று அலறியதில் அக்கம் பக்கத்தினர் நிமிடத்தில் கூடிவிட்டனர். அங்கு உத்திரத்தில் தூக்கு போட்டு, நாக்கு வெளியே தள்ளி, விகாரமான முகத்துடன் தொங்கிக் கொண்டிருந்தான் சந்திரன். உலகமே அஸ்தமித்துப் போனது போல சுய நினைவே இல்லாமல் கிடந்தவளை தண்ணீர் தெளித்து எழுப்பி, சடங்கு, சாங்கியங்களெல்லாம் செய்து முடித்து சந்திரனை அனுப்பிவைத்து விட்டு உறவினர்களெல்லாம் அழுத முகத்துடன், கிளம்பிவிட்டனர். வயதான தாய் மட்டும் அருகில் இருக்க அடுத்த வேளை சாப்பாட்டிற்கு என்ன வழி என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தாள். ஏனோ இப்படி ஒரு இக்கட்டான நிலையில் அனாதரவாக விட்டுவிட்டு சுயநலமாக செத்துப் போனவனை நினைக்கவேப் பிடிக்கவில்லை அவளுக்கு. குழந்தைகளை எப்படியும் காப்பாற்றி ஆகவேண்டும் என்ற உறுதியான மனம் மட்டும் இருந்தது. ஆனாலும் முதலில் வயிறு நிறைய வேண்டுமே.. குழந்தைக்கு கொடுப்பதற்கு தாய்ப்பால் கூட சுரப்பது குறைந்துவிட்டது. சகோதரன் வீட்டில் மூன்று வேளை சாப்பாடாவது ஒழுங்காக சாப்பிட்டுக்கொண்டிருந்த அம்மாவும் இன்று தன்னோடு சேர்ந்து பசி, பட்டினியில் வாட வேண்டாம் என்று முடிவு எடுத்தவள், கட்டாயப்படுத்தி தாயையும் சகோதரன் வீட்டிற்கே அனுப்பி வைத்தாள்.

எப்படியும் ஃபைனான்சுகாரன் வந்து விரைவில் பணத்திற்கு தொல்லைக் கொடுப்பான் என்று தெரியும். அவன் ஊரில் இருந்திருந்தால் பிணத்தைக்கூட எடுக்க விட்டிருக்க மாட்டான். நல்ல வேளையாக வெளியூர் சென்றுவிட்டான் என்று அக்கம் பகத்தினர் சொல்லித்தான் தெரிந்தது. அவன் வந்து சேருவதற்குள் என்ன செய்ய முடியும் என்று யோசித்தவளுக்குத் தெரிந்த ஒரே வழி அந்த இரண்டு ஏக்கர் நிலத்தை விற்று இந்தப் பிரச்சனைக்கு முடிவு கட்டுவதுதான். நிலத்தை விற்க ஏற்பாடு நடக்க ஆரம்பித்தபோதுதான் புற்றீசல் போல பல கடன்கள் கிளம்பியது. ஆம் சந்திரன் பல இடங்களிலும் கடன் வாங்கியிருந்தது அப்போதுதான் தெரிந்தது அவளுக்கு. நிலம் விற்று கடன்

போக மீதமிருக்கும் காசில் ஏதாவது சிறிய தொழில் செய்தாவது பிழைக்கலாம் என்ற எண்ணத்திலும் மண் விழுந்துவிட்டது. அந்த நேரத்தில்தான் பெரியவர் சிதம்பரம் வந்து உதவ முன்வந்தார். நெற்றியில் பட்டையாகத் திருநீரும், கழுத்தில் உத்திராட்சமும் போட்டுக் கொண்டு சிவப்பழமாக காட்சியளிக்கும் சிதம்பரம் ஐயாவின் சொல்லிற்கு ஊரில் அனைவரும் கட்டுப்படுவார்கள். சற்றும் தயங்காமல் அந்த நிலத்தை நியாயமான விலைக்கு தானே எடுத்துக் கொண்டதோடு, கடன்காரர்களை வரவழைத்துப் பேசி, பாதிப்பணம் மட்டும் அனைவருக்கும் கொடுத்து செட்டில் பண்ணிவிட்டு மீதமுள்ள தொகையை குழந்தைகளின் பெயரில் வங்கியில் போட்டு வைத்தார்.

ஏதாவது கூலி வேலைக்குப் போகலாமா அல்லது இட்லி கடை ஏதும் வைக்கலாமா என்று பலத்த யோசனையில் இருந்தாள். காலையிலிருந்து சமைக்கவில்லை, சாப்பிடவில்லை என்ற நினைவே இல்லாமல் இருந்தாள். குழந்தை அழும் போதெல்லாம் தன் பாலைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அதுவும் வாய் வலிக்க வெற்று மார்பை சப்பிவிட்டு அசதியில் கண் அசந்து கிடந்தது. லட்சுமியும் , ‘அம்மா, பசிக்குது’ என்று ஓரிரு முறை கேட்டுப்பார்த்துவிட்டு அவளிடமிருந்து சரியான பதில் வராததால், மெல்ல பக்கத்து வீட்டில் போய், ‘அத்தை எனக்கும் பசிக்குது, நானும் இங்கேயே சாப்பிடவா’ என்று விகல்பமில்லாமல் கேட்டபோது, அவர்களும் நிலைமையை புரிந்து கொண்டு லட்சுமிக்கும் சாப்பாடு கொடுத்து, மங்கைக்கும் சாப்பாடு எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள். இதைச் சற்றும் எதிர்பாராத மங்கை அவமானத்தில் கூனிக்குருகிப் போனதோடு , அவர்கள் சென்றவுடன் லட்சுமியை கோபத்தில் நன்றாக அடித்துவிட்டாள். குழந்தை பயத்தில் சுவர் ஓரமாக ஒடுங்கி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து மனம் பொறுக்காமல் ஓவென்று அழுதவள், அடுத்த நொடி கண்களைத் துடைத்துக்கொண்டு யதார்த்தத்திற்கு வந்தாள். உடனடியாக ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து குழந்தைகளுக்கு சாப்பாட்டிற்காவது வழி பண்ண முடிவு செய்தாள். எக்காரணம் கொண்டும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக வங்கியில் போட்ட பணத்தை தொடக்கூடாது என்ற முடிவிலும் உறுதியாக இருந்தாள்.

பெற்ற தகப்பனைப்போல எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து வைத்த சிதம்பரம் என்ற அந்த மனித தெய்வத்தின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டாள். அதனாலேயே அவர் சொல்லிற்கு கட்டுப்பட்டு இரண்டு குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு காலையில் சிதம்பரம் ஐயாவின் வீட்டிற்குச் சென்று சமையல் வேலைகளெல்லாம் முடித்துவிட்டு மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். நல்ல சம்பளமும் கிடைத்ததால் குழந்தைகளுக்கு தேவையானதை வாங்கிக் கொடுக்க முடிந்தது. எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் இரவில் வந்து படுத்தவுடன் கணவனின் நினைவு வாட்டத்தான் செய்தது. எவ்வளவு அன்பாக வைத்திருந்த ஒரு ஜீவன், திடீரென்று இல்லாமலே போனால் அதன் வலி பெரியதுதானே...

வழக்கம் போல அன்று காலை குழந்தைகளுடன் வேலைக்குக் கிளம்பியவள் இளைய மகன் விடாமல் அழுது கொண்டிருக்கவும் வயிற்று வலியோ என்னவோ என்று தொப்புளுக்கு சிறிது விளக்கெண்ணெய் வைத்து தோளில் போட்டு சமாதானம் செய்ய முயற்சித்தாள். காலையில் பாலும் சரியாகக் குடிக்கவில்லை. வயிற்றுப் போக்கும் இருந்தது. சற்று ஓய்ந்த குழந்தை மீண்டும் குரலெடுத்து அழ ஆரம்பிக்க பக்கத்து வீட்டு கோமுப்பாட்டி வந்து குழந்தையை வாங்கி வயிறை தட்டிப்பார்த்து, பொடபொடவென சத்தம் வந்ததைப் பார்த்து குடல் ஏற்றம் தட்டியிருக்கு, எடுத்தால் சரியாப் போகும் என்று சொல்லி குழந்தையை வெகு இலாவகமாகப் பிடித்து வயிற்றில் விளக்கெண்ணெய் தடவி பதமாகத் தட்டியதில் குழந்தை அழுகை ஓய்ந்து அசதியில் அப்படியே தூங்கிவிட்டான். வேலைக்கு நேரமானதால் என்ன செய்வது என்று புரியாமல் விழித்த போது கோமுப்பாட்டி, ‘புள்ளைய இங்கயே தொட்டில்ல போட்டுட்டுப் போம்மா, நான் பாத்துக்கறேன். நீ சிக்கிரமா பெரியவருக்கு சமைத்து வச்சுட்டு வந்துடு’ என்று சொன்ன யோசனை சரியாகப்பட அப்படியே செய்துவிட்டு கிளம்பினாள்.

அந்த நேரத்தில் வாசலில் தினசரி இதழ்களைப் படித்துக்கொண்டு ஈசி சேரில் உட்கார்ந்திருக்கும் பெரியவரைக் காணவில்லை. கதவு தாளிடப்படாமல் இருந்ததால் திறந்துகொண்டு உள்ளே சென்றவள் அங்கு படுக்கையறையில் சுருண்டு படுத்திருந்தவரைக் கண்டு பதறியவளாக,

“ஐயா, என்ன ஆச்சுங்க.. உடம்புக்கு முடியலையா. நேத்தே தலைவலின்னு சொன்னீங்களே” என்றாள்.

அவரும், ‘ஆமாம்மா, உடம்பெல்லாம் ஒரே அசதியா இருக்கு. இரண்டு மூனு நாளா இரவெல்லாம் சரியா தூக்கம் வேற இல்லியா’ என்று சொன்னபோது ஒரு மாதிரி தன்னை உற்றுப் பார்த்தது ஏதோ உறுத்தலாக இருந்தாலும், அதைக் கண்டுகொள்ளாதவள் போல, ‘இப்ப என்ன சாப்பிடுறீங்க, கஞ்சி ஏதாவது வச்சிக் கொடுக்கட்டுமா’ என்றாள்.

‘கஞ்சியெல்லாம் வேணாம், நல்லா சுருக்குனு கார சட்னி ஏதாவது அரைச்சி, இரண்டு ஊத்தப்பம் போட்டு கொண்டு வாம்மா’ என்ற போது புரிந்து போனது அவர் உடல் நலம் இல்லாததன் காரணம். சில நாட்களாகவே அவருடைய பார்வையிலும், செயலிலும் சில மாற்றங்களை உணர முடிந்தது அவளால். தேவையில்லாமல் கையைத் தொட்டு வாங்குவதிலும், மிக நெருக்கமாக நின்று மூச்சுக் காற்று மேலே படும்படியாக பேசுவதிலும், பேச்சில் தேவையற்ற நெருக்கமும், உரிமையும் காட்டுவதிலும் சந்தேகம் அதிகமாகிக் கொண்டிருந்தாலும் முடிந்த வரை பொறுத்துக் கொண்டிருந்தாள். ஒரு வேளை தன் சந்தேகம் தவறானதாக இருந்தால் ஒரு பெரிய மனிதரை நோகடித்த பாவம் வந்துவிடுமே என்று அஞ்சினாள். அவள் சமயலறையில் சென்று காரச் சட்னியும், ஊத்தப்பமும் தயார் செய்து கொண்டு வருவதற்குள் பெரியவர் குளித்து திருநீரு பட்டையுடன் தயாராக வந்துவிட்டார். இன்று ஏதோ விபரீதமாக நடக்கப் போகிறது என்று உள்ளுணர்வு சொல்லிக்கொண்டேயிருந்ததால் எச்சரிக்கையுடனே இருந்தாள். எப்பொழுதும் தானே போட்டுக் கொண்டு சாப்பிடுபவர் அன்று மங்கையைக் கூப்பிட்டு பக்கத்தில் இருந்து பரிமாறச் சொன்னார். அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவர்,

‘ஏம்மா.. இப்ப நீ ஓரளவிற்கு மனசு தெளிஞ்சிருப்பே இல்லையா.. இந்த வயசுல இப்படி ஒரு தனிமை ரொம்ப கொடுமை. உன்னைப் பார்த்தால் எனக்கு வேதனையா இருக்கும்மா. என் மனைவி இறந்து மூனு வருசம் ஆச்சு. தனிமையோட கொடுமையைப் பத்தி எனக்குத் தெரியும். இந்த 65 வயசுல

எனக்கே இப்படி இருக்குன்னா உன்னைய மாதிரி சின்னப் பெண்ணிற்கு எத்தனை சிரமம் இருக்கும். அதெல்லாம் மனசுல வச்சுக்கிட்டுதான் நான் ஒரு முடிவு எடுத்திருக்கேன். நீ இனிமே தனியா வீட்டில இருக்க வேண்டாம். இங்க நம்ம வீட்டிலயே ராணியாட்டமா இருக்கலாம். என் பொண்ணும் ஏதோ ஒரு நாளைக்குத்தான் வருவாள். அந்த நேரத்துல மட்டும் நீ உன் வீட்டில போய் தங்கிடு. எந்த பிரச்சனையும் இல்லாம இருக்கலாம். வெளிய பாக்குறவங்களுக்கும் சந்தேகம் வராது. '

'ஐயா என்னய்யா சொல்லுறீங்க. பெத்த அப்பா மாதிரி உங்களை நினைக்கிறேன். என்னைப்போய் இப்படி கேட்டுப்புட்டீங்களே, மனசு தாங்கலை ஐயா'

'இதுக்கு மேலே ஒரு வார்த்தை சொல்லாத தாயீ, அப்பான்னெல்லாம் சொல்லாதே.. உன் கையை காலா நினைச்சு கேக்கறேன், என்னை ஏத்துக்கோம்மா.. ' சட்டென்று எழுந்து கையைப் பிடித்தவுடன் கம்பளிப் பூச்சி ஊறுவது போல ஒரு அருவருப்பில், கையை உதறிவிட்டு, வியர்த்துக்கொட்ட பின் வாங்கவும், மேலும் சிதம்பரம் ஒரு அடி முன்னேறவும் மங்கை ஒரு முடிவிற்கு வந்தவளாக மேசையின் மீது இருந்த கனமான வெள்ளித்தட்டை எடுத்து அந்த மிருகத்தின் மண்டையைக் குறி பார்த்து தாக்க முனைந்த அதே வேளை,

'சபாஷ்... ரொம்ப நல்லாயிருக்கு.. சே, உன்னை அப்பான்னு கூப்பிடவே வெறுப்பா இருக்கு. நீயெல்லாம் ஒரு மனுசனே இல்ல. உனக்கு பொம்பளை சுகம் தேவைன்னா ஊர்ல போய் கல்யாணத்துக்குத் தயாரா இருக்குற உன் வயசுக்கு தகுந்த மாதிரி பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்த் தொலைய வேண்டியதுதானே. ஏன் இப்படி நல்ல மனுசனாட்டம் இரட்டை வேசம் போட்டுக்கிட்டு அலையணும்.. சே..இனி உன் மூஞ்சியிலேயே முழிக்க மாட்டேன் போ' என்று கத்திவிட்டு சடாரென திரும்பிப் போய்விட்டாள். இதனை சற்றும் எதிர்பாராத சிதம்பரம் பொட்டில் அறைந்தது போல தடுமாறி அதிர்ச்சியில் உறைந்து நின்றார்.

மங்கை, சிதம்பரத்திற்கு இதைவிட ஒரு பெரிய தண்டனை எப்பொழுதும் யாரும் கொடுக்க முடியாது என்பதை உணர்ந்து ஒன்றும் பேசாமல் லட்சுமியை கூட்டிக் கொண்டு ஒரேயடியாகக் கிளம்பிவிட்டாள். கண்ணில் ஒரு துளியும் கண்ணீர் வராதது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. தன் மனம் பக்குவப்பட்டு எதையும் தாங்கி மீண்டு வரும் சக்தியும் பெற்றுவிட்டதை உணர்ந்து பெருமிதம் கொண்டாள். வாழும் வழிக்கான அடுத்த முயற்சிக்கு தயாராகிவிட்டாள் அந்த அபலைப் பெண்!

## 13. சுமைதாங்கி சாய்ந்தால் ?

"நைனா, அம்மா சாப்பிடக் கூப்பிடுறாங்க. மணி 10.30 ஆகப்போகுது. வந்து சாப்பிட்டுட்டு வந்துடுங்க. அப்பறம் மயக்கம் வந்துடும். சக்கரை வேற ஏறிப்போயிடும் ”

“ம்ம்ம்”

“என்னம்மா, முத்துலட்சுமி நைனா வறாங்களாமா, இல்லையா. இன்னும் எவ்ளோ நேரந்தான் நானும் சமையல் ரூமிலயே வெந்துக்கிட்டு இருக்குறது. உடம்பெல்லாம் அடிச்சிப் போட்டாப்பல இருக்கு. போய் படுக்க வேண்டாமா.. என்ன பண்றாங்க அப்புடி.?”

“அம்மா, நைனா ஏதோ பழைய தபால் எல்லாம் எடுத்து வச்சி பார்த்துக்கிட்டு இருக்காங்க.. ரொம்ப யோசனையா இருக்காங்க. நீங்க மூடி வச்சுட்டுப் போய் படுங்கம்மா. எனக்கும் கொஞ்சம் ஆபீசு வேலை இருக்கு. நைனா வரும்போது நான் சாப்பாடு எடுத்து வக்கிறேன்”

தனபாலன், பசுமையான வயல்கள் நிறைந்த பசுஞ்சோலை கிராமப் பள்ளியில் தலைமை ஆசிரியர் பணியில் இருந்தவர். இன்று இந்த 75 வயதிலும், மெல்ல நடந்து பள்ளியை ஒரு முறையேனும் வெளியிலிருந்தாவது பார்த்து வந்தால்தான் தூக்கம் வரும். இன்று பழைய கட்டிடமெல்லாம் புது மெருகுடன் பளபளப்பான பெயர் பலகையுடன் நிமிர்ந்து நின்றாலும், தம் பள்ளி என்ற உறவு மட்டும் இன்றும் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது. தாம் பிறந்து வளர்ந்த ஊரிலேயே பள்ளி ஆசிரியராகச் சேர்ந்து, தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று தம் பரம்பரை சொத்தான இரண்டு ஏக்கர் பூமியையும் பண்ணையம் செய்து கொண்டு அமைதியான வாழ்க்கை வாழ்ந்தவர்தான். மாமன் மகளையே மணந்து கொண்டதோடு, குடும்பக் கட்டுப்பாடு குறித்து அதிக விழிப்புணர்வு இல்லாத 1950 களில் ஐந்து குழந்தைகள் பெற்றவர். நான்கு பெண் குழந்தைகள் என்றாலும் எந்த சலிப்பும் இல்லாமல், அன்பையும் பாசத்தையும் கொட்டி வளர்த்தார். இப்போதெல்லாம் பழைய நினைவுகளில் அதிகம் ஊறிப்போவது வாடிக்கையாகிவிட்டது. பள்ளித் தோழன் கதிர்வேலன், சென்னை கல்லூரியில் மருத்துவம் பயின்று, அமெரிக்காவில் சென்று மேற்படிப்பு படித்து அங்கேயே செட்டில் ஆனவன். கல்லூரியில் படித்து முடிக்கும் வரை கடிதத் தொடர்பும், விடுமுறையில் சந்திப்பும் தொடர்ந்து கொண்டிருந்தது. பிறகு பல ஆண்டுகள் கழித்துதான் முதல் கடிதம் அவனிடமிருந்து வந்தது. ஏர்— இண்டியா வெளிநாட்டு தபாலைப் பார்த்தாலே அப்படி ஒரு பெருமையாக இருந்த காலம்.

அன்பு நண்பன் தனாவிற்கு,

கதிர்வேலன் எழுதுவது. நலம். நலமறிய ஆவல். இந்த தபால் உனக்கு ஆச்சரியமளிக்கலாம் இவ்வளவு நாட்கள் இல்லாத நினைப்பு இப்போது எப்படி திடீரென்று வந்தது என்றுகூட உனக்குத் தோன்றலாம். ஆம், இந்த அமெரிக்க இயந்திர வாழ்க்கை. நின்று நிதானிக்கவும், கடந்த கால இனிய தருணங்களை நினைவுகூரவும் வாய்ப்பு கொடுக்கவில்லை. இப்பொழுதெல்லாம் அடிக்கடி நம் ஊரின் நினைவும், நண்பர்களின் நினைவும் வருகிறது. நம் ஊரில் நிரந்தரமாக வாழ்பவன் நீ மட்டுமாகத்தான் இருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். எனக்கு ஒரு மகளும், ஒரு மகனும் இருக்கிறார்கள். மகள் பட்டப்படிப்பு

படித்திருக்கிறாள். இங்கேயே சொந்தத்தில் மணம் முடித்துக் கொடுத்துவிட்டேன். மகன் மருத்துவம் படித்து என்னுடனே பணியாற்றிக் கொண்டிருக்கிறான். உன் குடும்பம் பற்றி அறிய ஆவல். உனக்கு எத்தனை குழந்தைகள், என்ன செய்கிறார்கள்? விவரத்திற்கு உடன் பதில் போடவும். உன் தபாலுக்காக வழிமீது விழி வைத்து காத்துக் கொண்டிருப்பேன். தபால் ஆபீசில் ஸ்பீட் போஸ்டிலேயே போடலாம்.. அதிகம் செலவும் ஆகாது. உன்னுடைய தொலைபேசி எண்ணை கட்டாயம் மறக்காமல் எழுதி அனுப்பு. நம்முடைய ஊரைப் பற்றியும், நண்பர்கள் பற்றியும் உன் முலம் அறிய ஆவலாக இருக்கிறேன்.

இப்படிக்கு

உன் பதிலுக்காகக் காத்திருக்கும்

கதிர்வேலன்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் உற்ற தோழன் தன்னை நினைத்துக் கொண்டு கடிதம் எழுதியதில் மட்டற்ற மகிழ்ச்சி தனபாலனுக்கு. பலமுறை படித்து, நண்பனின் நினைவுகளை பின்னோக்கிப் பார்த்து அந்த இன்பமான நாட்களில் கவலையில்லாமல் பறந்து திரிந்த தருணங்களை நினைவுகூர்ந்தாலும், இன்றைய நிலையின் சோகம் அதனை மறைக்கத்தான் செய்தது. நண்பனுக்கு பதில் எழுத அமர்ந்தவுடன் தம் வாழ்க்கைப் பாரத்தை அவன் மீது சுமத்தி அவனையும் வேதனை கொள்ளச் செய்ய வேண்டுமோ என்று எண்ணி மேலோட்டமாக எழுத நினைத்தாலும், 10 வது முறையாக அவன் கடிதத்தை வாசித்த போது அதிலிருந்த நெருக்கம் அப்படிச் செய்ய அனுமதிக்கவில்லை.

அன்பு மறவா இனிய தோழன் கதிருக்கு,

தனா எழுதுவது. நலம், நலமறிந்து மகிழ்ச்சி நண்பா. உன் கடிதம் கண்டவுடன் மீண்டும் நாம் அனைவரும் நம் இளமைக் காலத்திற்கு திரும்பி கபடமற்ற, பொறுப்பில்லாத அந்த சுகமான வாழ்க்கையை வாழ மாட்டோமா

என்ற ஏக்கம் வந்திருப்பதும் உண்மை. என்ன செய்வது. சாத்தியமில்லாத விசயத்தை கற்பனை செய்து அதில் சுகம் காண நான் கவிஞன் அல்லவே.. சாதாரண பள்ளி ஆசிரியன். இன்று ஓய்வு பெற்று, குடும்ப பாரத்தைச் சுமக்கும் சுமைதாங்கி மட்டுமே. என் சோகம் உன்னையும் சேர்த்துத் தாக்க வேண்டுமா என்று ரொம்பவும் யோசித்தேன். ஆனால் அப்படிச் செய்தால் அது நம் நட்பிற்குச் செய்யும் துரோகம் என்பதை உணர்ந்து உன்னிடம் அனைத்தையும் இறக்கி வைக்கப் போகிறேன். எதுவும் உன்னை பாதிக்காமல் பார்த்துக்கொள் கதிரு. காரணம் என் குடும்ப நிலையை நீ எந்த கதையிலுமோ அல்லது திரைப்படத்திலோ கண்டிருக்க முடியாது. இப்படியும் நடக்குமா என்று நம்ப முடியாத அதிசயமாக இருக்கும். ஆனால் அதற்கு ஆதாரமாக நான் இருக்கிறேனே? மனதை திடப்படுத்திக் கொண்டு எட்டி நின்று படியப்பா....

என் மாமன் மகள் பரிமளாவை விரும்பி மணம் முடித்துக் கொண்டேன். அன்பும், பண்பும் நிறைந்த நல்ல குடும்பத்தலைவி வாய்த்ததில் பெருமைதான். அந்த மகிழ்ச்சியில் வரிசையாக ஐந்து குழந்தைகள். மூத்தவள் சம்யுக்தா பத்தாம் வகுப்பு முடித்தவுடனே, ஆசிரியப் பயிற்சி எடுத்தவள். சொந்தத்தில் நல்ல மாப்பிள்ளை வந்ததால் 18 வயதிலேயே திருமணம் செய்து கொடுத்தேன். மாப்பிள்ளை தமிழ்நாடு அரசு குடிநீர் வாரியத்தில் சூப்பர்வைசர் பணி. நல்ல குடும்பம். என் சக்திக்கு ஏற்ற எதிர்ப்பார்ப்பே இருந்ததால் உடனே சம்மதித்தேன். நல்ல குணம் உடையவர் மாப்பிள்ளை. இரண்டாவது மகள் சரோஜினி, கல்லூரியில் பட்டப் படிப்பு படித்தாள். இரண்டாம் ஆண்டு படிக்கும் போதே மூத்தவளின் உறவிலிருந்து டாக்டர் மாப்பிள்ளை வந்தது. என் சக்திக்கு கொஞ்சம் அதிகம் என்றாலும், அவர்கள் பெண் அழகாக (என் மனைவி ஜாடை) இருப்பதால் கொடுத்தால் போதும் என்றும் மூத்தவளுக்குச் செய்த சீர் செய்தால் போதுமென்றதால் மகிழ்ச்சியாக மணமுடித்துக் கொடுத்து விட்டேன் இவளுக்கும் சென்னைவாசம் தான். மூன்றாமவள் முத்துலட்சுமி, பட்டப்படிப்பு சேர்ந்து ஓராண்டு நிறைவடையாத போதே, கோவையிலிருந்து ஒரு வரன் வந்தது, மாப்பிள்ளை இரயில்வேத்துறையில் உயர் அதிகாரி. நான் அவள் படிப்பு முடிந்த பிறகு செய்யலாம் என்று யோசித்த போதும் என் மனைவி நல்ல வரன் தானாக அமையும் போது தடை செய்யக் கூடாது என்று பிடிவாதமாக என்னை சம்மதிக்க வைத்து விட்டாள்.

நான்காவது மகன் விஜயராகவன் பள்ளி இறுதி வகுப்பும், கடைக்குட்டி வள்ளியம்மை, 10ம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தார்கள். மிகக் குறுகிய இடைவெளியில் ஒவ்வொரு திருமணமாக மூன்று மகள்களுக்கும் நல்ல இடத்தில் முடித்து வைத்தது மனதிற்கு நிம்மதியாக இருந்தது. ஆனால் அதெல்லாம் சொற்ப காலங்களே.

மூத்த மகள் திருமணம் முடிந்த ஓராண்டிலேயே குழந்தைப் பேறு பெற்றதில் அனைவருக்கும் மகிழ்ச்சி. அதுவும் ஆண் குழந்தையானதால் அவள் மாமியாருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. குழந்தையை எடுத்துக் கொண்டு சென்னை சென்றவள் ஓராண்டு இங்கு வரவே இல்லை. அடிக்கடி பயணம் செய்தால் குழந்தைக்கு ஆகாது என்று. முடிந்த போது நாங்கள் சென்று பார்த்து வந்தோம். ஆனால் கொஞ்ச நாட்களிலேயே ஒரேயடியாக அப்படி வந்து இங்கு நிற்பாள் என்று நினைக்கவில்லை நாங்கள். முப்பது வயதுகூட ஆகாத என் மருமகனுக்கு மாரடைப்பாம். எவ்வளவோ போராடியும் காப்பாற்ற முடியவில்லை. பூவும், பொட்டுமாக மகாலட்சுமியாக அனுப்பி வைத்த மகள் வெறுமையாக , கைக்குழந்தையுடன், திருப்பியடித்த பந்தாக வந்து நின்றாள். குடும்பமே அதிர்ச்சியில் உறைந்து கிடந்து, கொஞ்சம், கொஞ்சமாக மீள முயற்சித்த போது அடுத்த இடி, இரண்டாவது டாக்டர் மாப்பிள்ளையும், சிறிது இரட்டை நாடி சரீரம் உடையவர், அதே மாரடைப்பில் , மேசிவ் அட்டாக்காம் எந்த அறிகுறியும் இல்லாமல் , ஒரு வாரிசைக் கூட விட்டு விடாமல் போய் சேர்ந்து விட்டார். இதோடு விட்டதா விதி.. மூன்றாவது மாப்பிள்ளையும் அதே இருதயக் கோளாறு காரணமாக இருதய அறுவை சிகிச்சை செய்யும் போதே அதே மேசையின் மீதே உயிரை விட்டுவிட்டார். ஆறு மாதக் கைக்குழந்தையுடன் அவளும் திரும்பி வந்துவிட்டாள். ஆசை ஆசையாக மணமுடித்துக் கொடுத்த மூன்று மகள்களும் இன்று தனி மரமாக திரும்ப வந்து நிற்கிறார்கள். நம்ப முடிகிறதா உன்னால். இப்படியெல்லாம் கூட எங்காவது நடக்குமா? என் அம்மா இருக்கும்போது சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். ஏதோ எங்கள் குடும்பத்தில் சாபமாம்.. எங்கள் முன்னோரில் ஒருவர் ஒரு கண் தெரியாத பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி கெடுத்து விட்டாராம். அந்தப் பெண் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் முன் இட்ட சாபம்தான் குடும்பத்தையே ஆட்டுவிக்கிறதாம். பலருக்கு வாரிசே இல்லாமல்

போய்விட்டதாம். என் தாத்தா செய்த தான தருமங்கள்தான் எனக்கு ஐந்து வாரிசுகள் கொடுத்து சாப விமோசனம் பெற்றிருக்கிறோமாம். என் அம்மா இப்படி நினைத்து நிம்மதியாக போய் சேர்ந்துவிட்டார். ஆனால் இப்படி வேறு விதமாக அந்த சாபம் வேலை செய்யும் என்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை. மூன்றாவது மகளுக்கு கணவனின் ஆபீசிலேயே வேலை கொடுத்துவிட்டார்கள். மூன்று மகள்களும் இன்று வேலை பார்த்து தன்னையும், குழந்தையையும் காப்பாற்றிக் கொண்டாலும் அவர்கள் முகத்தில் நிரந்தரமாக தங்கிவிட்ட சோகம் என்னை வாட்டிக் கொண்டிருக்கிறது. செய்வதறியாது திகைத்து நிற்கும் வேளையில் நான்காவது மகளுக்கு திருமணம் செய்யும் தைரியம் வரவில்லை. என் மனைவி ஏதேதோ சாங்கியங்களெல்லாம் செய்த வண்ணம் இருக்கிறாள். என் மகனுக்கும் இருதயத்தில் ஓட்டை என்பதால், அவனால் நார்மலாக எந்த வேலையையும் செய்ய முடிவதில்லை.

விதியின் சுழலில் சிக்கித் தவிக்கும் இந்தச் சூழலில் என்னால் வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியவில்லை. என்னை மன்னித்துவிடு நண்பா.

இப்படிக்கு

துரதிருஷ்டசாலி தனபாலன்.

இதற்குப் பிறகு கதிர் போட்ட சில தபால்களுக்கு பதிலே போடவில்லை தனபாலன். பலமுறை தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு தம் விருப்பத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான் கதிர். ஆம். தனக்கு இது போல மூடநம்பிக்கைகள் பற்றியெல்லாம் கவலையில்லை என்றும், தன் மனைவியும், மகனும்கூட தன்னைப்போலத்தான் என்றும் உறுதியாகக் கூறிக் கொண்டிருந்தான். படிக்கும் காலத்தில் எத்தனை முற்போக்குவாதியாக இருந்த தான் இப்படி அடிமேல் அடி பட்டு நம்ப வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது ஆச்சரியம்தான். ஆனால் மனைவி பரிமளா மட்டும் கடைக்குட்டி வள்ளியம்மைக்கு எந்த குறையும் வராது, கதிர் சொல்வது போல அவருடைய மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்து அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கலாம் என்று உறுதியாக இருந்தாள். வெளிநாட்டிற்கு அனுப்பி

வைத்தால் உள்நாட்டு சாபமெல்லாம் தீண்டாது என்று யாரோ சாமியார் சொன்னதாகவும் சொல்லி ஒப்புக் கொள்ளச் செய்தாள். நண்பனின் கட்டாயத்தினாலும், மனைவியின் அசாத்திய துணிச்சலாலும், வள்ளியம்மை இன்று இரண்டு குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். வருடம் ஒரு முறைதான் பார்க்க முடியுமென்றாலும் அவள் நிம்மதியாக வாழ்வதை தொலைபேசி வாயிலாக அறிந்து மனம் அமைதியாக இருக்கிறது.

பழைய தபால்களுக்குள் மூழ்கிப்போய் நேரம் போவதே தெரியாமல் இருந்த தனபாலன் மெல்ல எழுந்து போய் தண்ணீர் எடுத்துக் குடிக்கச் சென்ற போதுதான் மூன்று மகள்களும் ஏதோ ஒரு வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தார். பகல் முழுவதும் கடமைகளுடன் உழல்வதால் மறைந்து கிடக்கும் தனிமைச் சோகம் இரவானால் எழுந்து நின்று மிரட்டுவது போல, அதனை விரட்ட அவர்கள் எதிலோ மனதைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த 20 ஆண்டு காலமாக பார்த்து சலித்துப் போனதுதான் என்றாலும், அவர்களுக்கு மறுமணம் செய்ய முயற்சிக்காமல் விட்டுவிட்டது பெரும் தவறுதான் என்று உள்மனம் சாடியது. பல நாட்களுக்குப் பிறகு அன்று நண்பன் கதிருக்கு தபால எழுத வேண்டும் என்று மனம் துடித்தது.

உயிரினும் மேலான அன்பு நண்பனுக்கு,

நலம். நலமறிய ஆவல். பல ஆண்டுகளுக்குப் பிறகு இன்று ஏனோ உன்னை ஆரத்தழுவி அமைதி கொள்ள மனம் ஏங்குகிறது கதிரு. என் வாழ்நாளின் பாதிக்கும் மேற்பட்ட காலங்களை முழுமையாக தின்று கொண்டிருந்த அந்த சோகம், உன்னுடைய பரோபகார துணிச்சலான முடிவினால் சற்று குறைந்திருக்கிறது. என் கடைக்குட்டி, வள்ளியம்மையின் தலையெழுத்தையே மாற்றியமைத்துவிட்டாய்! இன்று அவள் உன் (மரு)மகளாக மகிழ்ச்சியாக வாழ்வதில் மட்டற்ற மகிழ்ச்சி எனக்கும்தான். உன்னதமான ஒரு நட்பின் அடையாளமாக இருக்கும் நீ என் மனதில் இமய மலையென உயர்ந்து நிற்கிறாயப்பா.. என் மூன்று பெண்களுக்கும் மறுமணம் செய்து வைத்திருந்தால் இது போலவே எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்திருப்பார்களோ என்று

இப்போதுகூட உள்ளம் துடிக்கிறது. காலம் கடந்த பின்பு ஞானம் வந்து என்ன பயன்? சரித்திர ஆசிரியராக எத்தனையோ மாணவர்களுக்கு உலக நாயகர்களின் சரித்திரங்களையெல்லாம் அலசி ஆய்ந்து கற்பிக்க முடிந்த எனக்கு, என் பிள்ளைகளுக்கு அவர்களின் பெயர்களை மட்டுமே சூட்டி அழகு பார்க்க முடிந்தது. அவர்கள் தலையெழுத்தை மாற்றியமைக்கும் வல்லமை இல்லாமல் போனதே .... எது எப்படியோ உன் மூலம் என் இறுதி காலம் ஓரளவிற்கு அமைதியாகக் கழிந்து கொண்டிருக்கிறது. அதற்கு உனக்கு என் மனம் நிறைந்த நன்றிகள் நண்பா..

அசதியில் கண்ணயர்ந்துவிட்ட மனைவி பரிமளா, திடீரென்று விழிப்பு தட்ட கணவன் அருகில் இல்லாதது கண்டு மின்விளக்கைப் போட்டு மணியைப் பார்த்தவள், இரவு 1 மணி ஆனதைக் கண்டு அதிர்ச்சியுடன், மாமா இன்னுமா தூங்க வரவில்லை, எப்பொழுதும் இவ்வளவு நேரம் பண்ண மாட்டாரே என்று எண்ணியவள், ரொம்ப நாட்களாக தன் மனதில் புதைந்து பாரமேற்படுத்திக் கொண்டிருக்கும் அந்த இரகசியத்தை இன்றாவது சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்தாள். பல முறை முயற்சி செய்தும் இத்தனை ஆண்டுகளில் அதற்கான வாய்ப்பு அமையாமலே போனது வேதனைதான். இன்று சொன்னால் மாமா எப்படி எடுத்துக் கொள்வாரோ தெரியவில்லையே .... என்ன ஆனாலும் சொல்லிவிடுவது என்ற முடிவுடன் மெல்ல எழுந்து கணவனின் நூலக அறைக்குச் சென்றவள் அங்கு அவர் மேசை விளக்கின் ஒளியில் கையில் பேனாவுடன் கடிதம் எழுதிக் கொண்டிருந்தவர், அப்படியே தலையை மேசையின் மீது வைத்து படுத்திருந்தார்.. எப்பொழுதுமே அது போல ஓய்வெடுப்பது மாமாவின் வழமைதான் என்பதால் தொடர்ந்து பேச ஆரம்பித்தாள்.

‘‘மாமா.. ஏங்மாமா, தூங்கிட்டீங்களா. சாப்புட்டீங்களா இல்லையா.. ஒரே அசதி கண்ணசந்துப்புட்டேன். நான் சொல்லப் போறத கோபப்படாம கொஞ்சம் பொறுமையா கேளுங்க மாமா. உங்ககிட்ட ரொம்ப நாளா ஒரு விசயம் சொல்ல நினைச்சு முடியாம தள்ளிப் போட்டு என் மனபாரத்தை ஏத்திக்கிட்டே இருக்கேன். ஆனா இன்னைக்கு சொல்லியே ஆகோணும்னு என் மனசு ஏனோ

கிடந்து தவிக்குது மாமா.. நம் கடைக்குட்டி வள்ளியம்மை பிறந்த நேரத்தில் நீங்க ஒரு முக்கியமான மீட்டிங்னு சென்னை போயிட்டீங்க இல்லையா. அப்ப என் தம்பி மனைவிக்கும் பிரசவ நேரமில்லையா. ஒரே நாளில் இரண்டு பேரும் பிரசவத்திற்காக ஆஸ்பத்திரிக்குப் போனதும், அங்கு தம்பியின் மனைவியும் , குழந்தையும் அதில் இறந்து போனதும் உங்களுக்குத் தெரியுமில்லையா.. மாமா.. எனக்கும் அப்படித்தான் இரண்டு வருடம் தெரியும். ஆனால் என் மனதில் மட்டும் ஏதோ ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது.. ஒரு முறை என் தம்பி வாய் தவறி எதையோ உளறப் போக என் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது.. ஆம், பிரசவத்தின்போது இறந்த குழந்தை நம்முடையது, தம்பியின் மனைவி இறந்ததாலும், நானும் குழந்தை இறந்துவிட்டது தெரிந்தால் வேதனைப் படுவேன் என்றும் நினைத்து, என் தம்பி எதைப் பற்றியும் யோசிக்காமல் நர்சிடம் பணம் கொடுத்து அவன் குழந்தையை நம் குழந்தையாக அருகில் போட்டுவிட்டு இறந்த நம் குழந்தையை அவன் குழந்தை என்று சொல்லிவிட்டான். எனக்குத் தெரிந்தவுடன் உங்களிடம் சொல்லலாம் என்றுதான் இருந்தேன். நீங்கள் தம்பியிடம் கோபப்படுவீர்களே என்ற அச்சத்தில் தள்ளிப் போட்டேன். நீங்கள் மற்ற குழந்தைகளைக் காட்டிலும் வள்ளியம்மை மீது அதிகப்படியாக பாசம் வைத்திருந்ததால், இந்த விசயத்தைச் சொல்லி குழப்பம் ஏற்படுத்த வேண்டாமே என்று அமைதி காத்தேன். ஆனால் திருமணம் என்று வந்த போது நீங்கள் ரொம்பவும் பயந்த போதாவது சொல்லலாம் என்றால் மாப்பிள்ளை வீட்டில் தெரிந்தால் திருமணம் தடைபடுமோ என்று கவலைப்பட்டேன்.. நீங்களோ எதையும் மறைக்க விரும்ப மாட்டீர்கள். அதனால்தான் பிற்பாடு சொல்லிக்கொள்ளலாம் என்று தைரியமாக கவலைப்படாமல் திருமண ஏற்பாடுகளைச் செய்யத் துணிந்தேன்.. உங்களிடம் இவ்வளவு நாட்கள் இதை மறைத்தது தப்புதான் மாமா.. எங்கே நீங்கள் உயிராக நினைக்கும் நம் கடைக்குட்டியை வெறுத்து விடுவீர்களோ, அவள் தாங்க மாட்டாளே என்ற அச்சமே என்னை சொல்ல விடாமல் தடுத்துவிட்டது மாமா.. இதற்கு மேலும் அந்த ரகசியத்தைக் காப்பாற்றும் துணிச்சல் எனக்கு இல்லை சாமி.. என்னை மன்னிசிடுங்க மாமா.. இதுக்கு நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும் நான் வாங்கிக்கறேன்.. மாமா.. மாமா.. ஏன் மாமா பேச மாட்டீங்கறீங்க.. கோபமா.. என்று சொல்லி உலுக்கியவள்,

கணவனின் தலை சாய்ந்து கிடக்கவும், அதிர்ச்சியில் கத்தவும் வாய் வராமல் நின்றிருந்தாள்....

## 14. முற்பகல் செய்யின்.......

பெண்டுலம் வைத்த பழங்கால உயரமான தேக்குமரக் கடிகாரம் டங்.. டங்.. என்று முரட்டுத்தனமாக ஒலிக்கிறது. மணி 12 அடித்திருக்குமோ.. இல்லையில்லை 11 தான் அடிச்சுது. நான் எண்ணிக்கிட்டேனே. இப்பதான வந்து படுத்தேன்.. 12 ஆகியிருக்காது. தண்ணி தாகமா இருக்கே.. கண்ணைத் திறக்க பயம். கையைத் தடவி கட்டிலுக்கருகில் தண்ணீர் பாட்டிலைத் தேடினாள். அயோடா, தண்ணீர் கொண்டு வந்து வைக்க மறந்துட்டேனோ. இருக்காதே. இது வரைக்கும் மறந்ததில்லியே. மெல்ல கண்ணைத் திறந்து பார்த்தால் என்ன வந்துடப்போவுது?

'காக்க, காக்க கனகவேல் காக்க, நோக்க நோக்க நொடியினில் நோக்க

பாக்க, பாக்க பாவம் பொடிபட.. பில்லி சூனியம் பெரும்பகை அகல..'

சரியாச் சொல்லலையோ.. சஷ்டியை நோக்க.. ஆ. ஆமாம் இதுதானே முதல் அடி.. சொல்லிக்கிட்டே மெல்ல கண்ணைத் திறந்து டேபிளில் தண்ணி பாட்டில் இருக்கான்னு.. 0 வாட்ஸ் விளக்கு வெளிச்சம் போதுமானதாகத்தான் இருக்கு. ஆனா பாட்டிலக் காணமே.. யார் எடுத்திருப்பாங்க.. தண்ணி வேணுமே.. இப்பவே வேணுமே. கதவு வேற சாத்தியிருக்கு. அம்மாவைக் கூப்பிட்டா காது கேக்காது. டைனிங் ஹால் வரையில போனாத்தான் தண்ணி குடிக்க முடியும். சரி முதல்ல இருந்து சஷ்டியை நோக்க.. ஐஸ் வாட்டர் குடிக்கலாமா.. தொண்டையெல்லாம் வறண்டு போச்சே. வாண்டாம் பிரிட்ஜ் திறக்க வேண்டாம். டேபிளில் ஜக்குல தண்ணி இருக்குமே குடிக்கலாம். கண் தானா சமயலறைப் பக்கம் போகுதே.. அங்க லைட்டும் இல்லை. ஆனா அந்த மூலையில என்ன வெளிச்சம். எதா இருந்தா என்னா, பாக்காதே. தண்ணியை குடிச்சிப்பிட்டு போ

அப்படீன்னு மனசு சொன்னாலும் கண்ணு தானா உள்ளே போகுதே.. 'களுக்'னு சிரிப்புச் சத்தம் வேற.. ஆம்பிளைக் குரலோ.. ஆமாமா .. யாரா இருக்கும். அப்பா.. அப்பா.. திரும்பவும் 'களுக்' உள்ளேயிருந்துதான் சத்தம் வருது.. பளிச்சுனு ஒரு மின்னல். ஐயோ, அங்கே.. அங்கே என்னாது. அடுப்புத் திட்டுல நீட்டி கடக்குறது யாரு.. முகம், கழுத்து எல்லாம் கீறல், அதுல இரத்தம் ஒழுகிட்டிருக்கு.. சிரிப்பு வேற.. அப்படியே எந்திரிச்சி வேற வருதே..

"ஏய்.. ஏய், யாரு நீ. என்கிட்ட வராதே.. ஐயோ பயமா இருக்கு. என்னைய ஒன்னும் பண்ணாதே... அம்மா.. அம்மா.." மகளின் மரண ஓலம் கேட்டு சுருட்டிப் பிடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் பருவதம். மகள் பயந்துடப் போறான்னு டீயை குடிச்சுப்பிட்டு கொட்டு, கொட்டுனு முழிச்சிக்கிட்டு உட்கார்ந்திருந்தவள், தன்னையறியாமல் எப்படியோ கண்ணயர்ந்துவிட்டாள். அந்த கொஞ்ச நேரத்தில் இந்த கலாட்டா. அக்கம் பக்கத்தில் காது கேட்டுவிடப் போகிறது என்று ஏ.சியும் போட்டு வைத்தாலும், ரஞ்சனியின் அலறல் அதையும் மீறி வெளியே வந்துவிடுமோ, வேலையாட்களுக்குத் தெரிந்தாலும் பிரச்சனைதான். இன்னும் 10 நாள்தான் இருக்கு கல்யாணத்திற்கு. கல்யாணம் பேசி முடிச்ச இந்த ஒரு மாசத்துல ஒரு வாரம்தான் சந்தோசமா இருந்திருப்பாளோ. திடீர்னு ஒரு நாள் ராத்திரி இப்படி கத்த ஆரம்பிச்சவ, தினமும் இதே வாடிக்கையாப் போச்சு. தர்க்காவுல மந்திரிச்சி தாயத்தும் கட்டியாச்சு. உடுக்கையும், வேப்பிலையும் அடிச்சி பாடமும் போட்டாச்சு. எதுக்கும் மசியல. இதுக்கும் மேல பொறுத்துப் பயனில்லைன்னு, டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போய் கவுன்சலிங் கொடுத்திட்டிருக்கு. வேறு என்ன செய்வதென்று புரியாமல் பயம் வந்தது. மாப்பிள்ளை வீட்டிற்குத் தெரிந்தால் கல்யாணமே நின்னுப் போயிடுமோன்னு கவலையானது கணவனுக்கும், மனைவிக்கும்.

மேகநாதன், முரட்டு மீசையும், தடித்த உருவமும் இல்லாத கடுமையான முகம் மட்டும் உடைய வட்டி லேவாதேவிக்காரர். பரம்பரையாக இதே தொழில் என்பதால் ஊரில் மரியாதையும் உண்டு, அதே சமயம் நெருங்கி உறவாட எவரும் தயங்குவர். தன்அத்தனை சொத்திற்கும் வாரிசான ஒரே மகளுக்குத் திருமணம் செய்ய மாப்பிள்ளை தேடி ஊரையே சல்லடை போட்டு

அலசினார். ஆண் வாரிசு இல்லாதலால் தன் தொழிலையும், சொத்தையும் கட்டிக்காக்கும் திறமைசாலியாக இருக்க வேண்டும் என்று மிக எச்சரிக்கையாக இருந்தார். புரோக்கர் மூலமாக கிடைத்த வரன் தயாளன். கூட்டுறவு வங்கியில் கடன் வசூல் செய்யும் பிரிவில் வேலை செய்பவன். வேலையில் மிகவும் கெட்டிக்காரன் என்பதால் நல்ல வருமானம். பெரிய பரம்பரைச் சொத்தெல்லாம் இல்லாவிட்டாலும், தன் சம்பாத்தியத்தில் குடியிருக்க நல்ல வீடும், காரும் வைத்துக்கொண்டு மதிப்பாக வாழ்பவன். பணம் வசூலிப்பதில் மிகக் கடுமையான பேர்வழி என்பதால் முகத்தில் சிரிப்பு என்பதே துளியும் இல்லாமல், முள்ளை வைத்து கட்டிக் கொண்டது போல ஒரு தோற்றத்தை தன் தொழிலுக்காகத் தானே ஏற்படுத்திக் கொண்டவன். நண்பர்களோ, உறவுகளோ கூட நெருங்கிப் பழக அச்சம் கொள்ளும் வகையிலேயே அவனுடைய நடவடிக்கை மாறிப்போயிருந்தது. இரண்டு வருடமாக பெண் பார்த்துக் கொண்டிருந்தும் யாரும் பெண் கொடுக்க முன்வரவில்லை என்பதால் அவன் தாய்க்கு மிகவும் வருத்தம். தந்தை விட்டுச் சென்ற கடனை அடைக்க, இதைவிட வேறு ஏதும் வழி புலப்படாததால், மகனைத் தடுத்து நிறுத்தவும் வழியில்லை அந்தத் தாய்க்கு. ஊரில் உள்ள அனைவரும் தன் மகனை ஒரு வில்லனாகப் பார்ப்பதில் தாங்கொணாத் துயரம் என்றாலும் வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலை. இந்த நேரத்தில்தான் புரோக்கர் மூலமாக மேகநாதனின் தொடர்பு ஏற்பட, ஆறு மாதமாக அவனைப் பற்றி அலசி ஆய்ந்து திருப்தி ஏற்பட ஒரு வழியாக திருமணத்திற்குச் சம்மதித்தது லாட்டரியில் அடித்த பரிசாகத் தெரிந்தது. பெண் எப்படி இருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்திருந்தவனுக்கு, அழகே உருவாக ஒரு தேவதை வாய்த்துவிட்டதால் மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போனது. மேகநாதன் கண்ணிற்கு மட்டும், தான் கதாநாயகனாகத் தெரிந்தது தனக்குக் கிடைத்த வரமாகவே எண்ணினான். உடனடியாக திருமணத் தேதியும் குறித்ததால், இரட்டிப்பு மகிழ்ச்சி தயாளனுக்கு.

ஒரே செல்ல மகள் என்பதால் ரஞ்சனிக்கு கேட்பதெல்லாம் உடனே கிடைக்கும். எந்த குறையும் இல்லாமல் வளர்ந்தாலும் மற்ற சிநேகிதிகளோ அல்லது உறவினரோ சகஜமாக வீட்டிற்கு வரத் தயங்குவது அவளுக்குப் பெரும் குறைதான். வீட்டிலேயே முன் புறம் அலுவலகம் என்பதால்

எப்பொழுது பார்த்தாலும் கூச்சலும், வாகனங்கள் வந்து போய்க்கொண்டும் இருக்கும். நாளடைவில் ரஞ்சனிக்கு இந்த சூழல் பிடிகாமலேப் போனது. சீக்கிரம் ஒரு நல்ல பள்ளி ஆசிரியராகப் பார்த்து திருமணம் செய்து கொண்டு வெளியே போனால் போதும் என்றாகிவிட்டது. அப்பா மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்த போதே சாடை மாடையாக தன் விருப்பத்தைச் சொல்லியும் துளியும் சட்டை செய்யாமல் தன் விருப்பத்திற்கு மாப்பிள்ளை தேடும் அப்பா மற்றும், அதனை எதிர்த்துப் பேச முடியாமல் தவிக்கும் அம்மாவின் மீதும் கோபம்தான் வந்தது. ஆனாலும் வேறு வழியில்லாமல் வேண்டா வெறுப்பாக சம்மதம் தெரிவித்தாள். திருமணம் நெருங்கும் இந்த நேரத்தில் ஏதோ கிலி பிடித்தது போல இப்படி அடிக்கடி கனவு வந்து தொல்லை கொடுக்கிறது. இரத்தமே மொத்தமும் உறிந்து எடுத்தது போல உடலெல்லாம் வெளுத்து, பலகீனமாக இருக்கும் மகளைப் பார்த்து பெற்றோர் வருத்தம் கொண்டு செய்யாத வைத்தியம் இல்லை. அன்று அவர்கள் வழக்கமாகப் பார்க்கும் மருத்துவமனைக்கு வெளிநாட்டிலிருந்து ஒரு மனோதத்துவ நிபுணர் வந்திருப்பதாகவும், ரஞ்சனியை அழைத்து வரும்படியும் செய்தி வந்ததால் உடனடியாகக் கூட்டி வந்தார்கள். அங்கு பலவிதமான சோதனைகள் செய்து கொண்டிருந்தார்கள். மகள் பெருமளவில் மனதால் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பது புரிந்தாலும் அதற்கான காரணம் மட்டும் விளங்கவில்லை. பல மணி நேரங்கள் சோதனைக்குப் பிறகு பெற்றோரை வரச்சொல்லி மருத்துவர் சொன்ன விசயம் மேகநாதன் தலையில் இடியாக இறங்கியது.

ரஞ்சனியின் திருமணத்தை உடனடியாக நிறுத்துவதுதான் அவளுடைய நோய்க்கான தீர்வாம். இந்த திருமணத்தால் அதிகம் பாதிக்கப்பட்டு மன உளைச்சலில்தான் இது போன்ற கனவுத் தொல்லைகள் வருகிறதாம்.

திருமணம் உறுதியானவுடன் மகிழ்ச்சியுடன் கன்றாகத் துள்ளிக் கொண்டு தன் ஒரே தோழி மதுவின் வீட்டிற்குச் சென்றாள். வங்கியில் பணிபுரியும் அதிகாரிதான் மாப்பிள்ளை என்று தனக்குத் தெரிந்த செய்தியைச் சொல்லி போட்டோவும் காட்டினாள். இது நடந்து சில நாட்களிலேயே மது ஒருநாள் போன் செய்து உடனே வீட்டிற்கு வரும்படியும் மாப்பிள்ளை பற்றி ஏதோ பேச வேண்டும் என்றும் கூறினாள். அன்று மாலையே மதுவைப் பார்க்கச்

சென்றவள், திரும்ப வரும்போது அதிர்ச்சியான முகத்துடன் வந்தாள். வந்தவள் ஒரு வார்த்தைக் கூட யாரிடமும் பேசவும் இல்லை. அதன் பிறகுதான் இப்படி கனவும், பயமும் வந்து அவளை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது என்று டாக்டரிடம் கூறியபோது, அவள் தோழி மதுவைச் சந்தித்து நடந்ததை அறிந்து வருமாறு அவர் பதிலளித்தார். அடுத்த நாள் ரஞ்சனியின் தாய் மட்டும் மதுவின் வீட்டிற்குச் சென்று அவளைச் சந்தித்தாள். ஆரம்பத்தில் பயத்தில் ஒன்றுமில்லை என்று சொல்லி மழுப்பியவளிடம், கண்ணீர் சிந்தி மகளின் நிலையைச் சொல்லி கெஞ்சிக் கேட்ட பின்பு மெல்ல எழுந்து போய் ஒரு செய்தித்தாளை எடுத்து வந்து கொடுத்தாள். அவள் அம்மா மாவு சலிப்பதற்காக எடுத்துப்போட்ட சற்றே பழைய செய்தித்தாள். அதைப் பிரித்துப் பார்த்தவள், தங்களுக்கு மாப்பிள்ளையாக ஆகப் போகிறவனின் புகைப்படத்தைப் பார்த்தவுடன் அதிர்ச்சி மேலிட முழுவதும் படித்தாள்.

தயாளன் என்று அவனுக்குப் பெயர் வைத்தது வைத்தவர்களின் தவறு இல்லை. காரணம் அவன் குழந்தையாக இருந்தபோது பிற்காலத்தில் இப்படி ஒரு அரக்க குணம் உள்ளவனாக வருவான் என்று தெரிய வாய்ப்பில்லையே. கூட்டுறவு வங்கியில் பணியாற்றியவன், மேல் வருமானம் வேண்டியிருந்ததால், வசூல் செய்யும் பிரிவிலும் முதலில் ஓய்வு நேரப் பணியாக செய்து கொண்டிருந்தவன், நல்ல கமிஷன் கிடைத்ததால் அதையே முழு நேரப் பணியாக மாற்றிக் கொண்டான். இரண்டு மாதம் தொடர்ந்து தவணை கட்டவில்லையென்றாலே தயாளன் வந்துவிடுவானே என்று எப்படியாவது தலையை அடமானம் வைத்தாவது பணம் கட்டிவிட வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் நடுங்கிப் போகும் அளவிற்கு அவனுடைய வார்த்தைகளில் அனல் தெறிக்கும். அப்படித்தான் அன்று மூன்றாவது மாதமாக தவணை செலுத்தாத ஒரு வாடிக்கையாளர் வீட்டிற்குச் சென்று கண்டபடி பேசியிருக்கிறான். தாங்க முடியாத கர்ப்பிணி மனைவி மூத்த குழந்தைக்கு உடல் நலம் இல்லாமல் இருதய அறுவை சிகிச்சை செய்ததால் பணமுடை அதிகமாகிவிட்டது என்றும், விரைவில் சரி செய்துவிடுவோம் என்றும், 15 நாட்கள் மட்டும் அவகாசம் கொடுக்கும்படியும் எவ்வளவோ மன்றாடியும், அவளை மேலும், கீழும் பார்த்துவிட்டு, “இதெல்லாம் மட்டும் உன் புருசனுக்கு முடியும் போது பேங்க்குக்கு பணம் கட்ட மட்டும் முடியாதா”?

என்று மேலும் தரக் குறைவாக  எகத்தாளமாக பலதும் பேசியிருக்கிறான். இந்த வேதனை தாங்காத அந்த மனிதர் அன்று இரவே விசம் குடித்ததோடு, அவமானத்தால் கூனிக்குறுகி, தம் முகத்தையேக் காணப்பிடிக்காமல் முகமெல்லாம் கூட கத்தியால் தானே கீறிக் கொண்டு இறந்திருக்கிறார். இதைவிடக் கொடுமை அந்த மனிதர் இறந்த சாவு வீட்டிலும் வந்து, பணத்தை உடனே கட்டணும்னு தகராறு செய்யவும், உறவினர்கள் வேறு வழியில்லாமல் போலீசுக்குப் போன் செய்ய வேண்டியதாகிவிட்டது. போலீஸ் வந்து தயாளனை கைது பண்ணிக் கொண்டு சென்றவரை விவரமாக அந்தச் செய்தித்தாளில் வந்திருந்தது. இதைப் படித்தவுடன், இப்படிப்பட்ட ஒரு அரக்கனையா மாப்பிள்ளையாக தேர்ந்தெடுத்து தங்கள் ஒரே மகளை கட்டி வைக்கப்போகிறான் தன் கணவன் என்று ஈரக்குலையெல்லாம் நடுங்கிவிட்டது அந்தத் தாய்க்கு. ஒன்றுமே பேசாமல் ஒரு திடமான முடிவுடன் வீடு வந்து சேர்ந்தாள்.

பரிதாபமாக சுருண்டு படுத்திருக்கும் மகளின் அருகில் சென்று, அவளை எழுப்பி உட்காரவைத்து, அப்படியே அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பின் இதத்தில் தன் மனபாரம் அனைத்தும் கரைந்து நிம்மதியடைவதை உணர்ந்தாள். இனிமேல் அந்த பாழாய்ப்போன கனவு வந்த வழியே திரும்பிவிடும் என்ற நம்பிக்கையும் துளிர்விட்டது. அன்னையின் மடியில் அன்பு மழலையாய் முந்தானையை இறுக்கிப் பிடித்தவாறு படுத்திருந்தாள் ரஞ்சனி.

.

## 15 . கேத்தரீனா

“சபேசா, இன்னைக்கு பொண்ணு பாக்க வறோம்னு சொல்லியிருக்கு, சாயங்காலம் 5 மணிக்கு போகணும். மணி மூனு ஆவுதுப்பா. சீக்கிரம் தயாராகிடுப்பா..”

‘‘அம்மா.. ஏம்மா.. இப்படி சொன்னா புரிஞ்சிக்காம அடம் புடிக்கறீங்க. என் வாழ்க்கைய என்னை வாழவிடுங்க. எனக்கு பிடிச்சப் பொண்ணை, கல்யாணம் செய்துக்க உடமாட்டேன்னு நீங்கதான் அடம் புடிக்கறீங்க. முன்ன பின்ன தெரியாத ஒரு பெண்ணை, அதுவும் கிராமத்துப் பொண்ணை கட்டிக்கிட்டு அமெரிக்காவுல போய் எப்படி குடும்பம் நடத்த முடியும். நாலு வார்த்தை சேர்ந்தா மாதிரி இங்கிலீஷ் பேச முடியாது, புரிஞ்சிக்கவும் முடியாது. அங்க போய் ரொம்ப கஷ்டப்படணும்மா. சொன்னா புரிஞ்சிக்கோங்க. இவளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கவெல்லாம் எனக்கும் நேரம் இருக்காது. மொழி தெரியாம, நான் ஆபீசு போன நேரத்துல ஏதாச்சும் பிரச்சனைன்னா என்ன பண்ணுவா.. தேவையாம்மா இதெல்லாம்? எனக்கு கல்யாணமே வேண்டாம். ஆளை உடுங்க’’

‘‘ஆமாப்பா, இப்படி சொல்லிப்புட்டு அங்க அந்த வெள்ளைக்காரி, கதலீயாவா காத்தாயியா, எவளோ ஒருத்திக்கூட புள்ளையப் பெத்துக்கிட்டு வந்து நிக்கலாம்னு பாக்குதியா... அதெல்லாம் சரியில்லப்பா.. நாங்க அப்பறம் நாண்டுகிட்டுதான் சாவணும். சொந்த பந்தத்துல தலை தூக்க முடியாது. என்ன பண்ணுவியோ தெரியாது. இந்த தபா, கண்ணாலம் முடிக்காம போனியானா அடுத்த தபா நீ வரும்போது, ஆத்தா, அப்பன்னு கூப்பிட உனக்கு யாரும் இருக்கமாட்டாக பாத்துக்க.. இதை சொம்மா மிரட்டறதுக்கு சொல்றதா மட்டும் தப்புக் கணக்கு போட்டுப்பிடாத .. ஆமா.. சொல்லிப்புட்டன்’’

‘‘ஏம்மா.. என்னை இப்படி சாவடிக்கிறீங்க. கேத்தரீனா ரொம்ப நல்ல பொண்ணும்மா. அவ வெள்ளைக்காரியா பொறந்ததைத் தவிர ஒரு தப்பும் செய்யலையேம்மா. நம்ம இந்தியக் கலாச்சாரத்துல அவளுக்கு இருக்கற ஈடுபாட்டோட, எங்க காதல் மேல இருக்குற ஈடுபாடு ரொம்ப கம்மி. நம்ம ஊரு பொண்ணுங்ககூட அவ அளவுக்கு நம்ம பண்பாடு, பாரம்பரியத்தின் மீது மதிப்பும், மரியாதையும் வச்சிருக்காங்களான்னு சொல்ல முடியாது. அவ்ளோ கட்டுப்பாடா இருக்குறவம்மா. தவறிப்போயி அமெரிக்காவுல பொறந்துட்டா. நான் இந்தியன்கற ஒரே காரணத்துக்காகவே என்னை லவ் பண்ணினவ.. அவகிட்ட எந்த குறையும் இல்லை.. குறையெல்லாம் உங்க பார்வையிலதான். உங்க இரண்டு பேரையும் தெய்வமா மதிக்கிறவ அவ... அவளைப் பத்தி

புரிஞ்சிக்கிட்டீங்கன்னா உங்களுக்கும் அவளை ரொம்பப் பிடிக்கும். நீங்க சொன்னா அவளை உடனே கிளம்பி இங்க வரச்சொல்றேன். நேரில பார்த்துட்டு உங்க முடிவைச் சொல்லுங்க ”

“அப்பா, சாமி இதுக்கும் மேல அந்தக் கெரவத்தைப் பத்தி இங்கனப் பேசாத.. உங்க அப்பாரு காதுல உழுந்தா போதும், ரணகளமாயிடும் பாத்துக்க”

கணினி வல்லுநரான சபேசன் ஹட்சன் கம்பெனியில் உயர் பதவியில் இருப்பவன். ஒரு பிராஜக்டிற்காக சென்னையிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்று இரண்டு ஆண்டுகளாக தங்கியிருப்பவன். காத்தரீனா, பரத நாட்டியம் குறித்த ஆய்விற்காக இந்தியா வந்தவள் என்பது முதன் முதலில் தன் நண்பனின் கட்டாயத்தின் பேரில் பரத நாட்டிய நிகழ்ச்சிக்குச் சென்றபோது அறிந்து கொண்டான். நம் இந்தியக் கலாச்சாரங்களின் மீது அவளுக்கு இருந்த அதிகமான ஈடுபாடும், விகல்பமில்லாத குழந்தைத்தனமான அவளுடைய பேச்சும் வெகு எளிதாக முதல் பார்வையிலேயே அவனை ஈர்த்துவிட்டது. அமெரிக்கா திரும்பும்போது அவளுடன் பயணம் செய்ய அமைந்த வாய்ப்பினால் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. அடிப்படையில் பல விசயங்களில் இருவருக்கும் ஒத்த கருத்து இருந்தது அவர்களை மிகவும் நெருக்கமாகச் செய்தது. தன்னுடைய கம்பெனியிலேயே அவளும் பணிபுரிவதை அறிந்து உள்ளம் பூரிப்படைந்தது. அது விரைவாக காதலாகவும் மாறிவிட்டது. தமிழ்நாட்டு மருமகளாக வாழ்வதையே தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டிருந்தவள், சபேசனின் ஒழுக்கமும், அன்பாகப் பழகும் தன்மையும் மிகவும் பிடித்துப்போக, அவனிடம் தன் மனதைப் பறிகொடுத்தவள், அத்தோடு நிற்காமல், தன்னை அவன் முழுமையாக ஏற்றுக்கொள்ளுவான் என்று நம்பி தன் பெண்மையையே பறி கொடுத்தாள். இருவரும் கணவன், மனைவியாகவே ஆறு மாதமாக வாழ்ந்து கொண்டிருப்பதை பெற்றவர்களிடம் சொல்லும் துணிச்சல் இல்லாமல், காதலி என்று மட்டும் சொன்னதற்கே வீட்டில் இத்தனை கலாட்டா.

பெண் வீட்டில் சொல்லிவிட்டதால் போய் பார்த்துவிட்டு வந்துவிடலாம் என்ற தந்தையின் கட்டளையை மீற முடியாமல், மௌனமாக சென்று நின்றுவிட்டு

வந்தான். பெண்ணைப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியவில்லை அவனால். சாந்தமான, வெகுளியான அந்த முகமும், என்னை வேண்டாம் என்று சொல்லிவிடாதே என்ற கெஞ்சல் நிறைந்த பட்டாம்பூச்சியாய் படபடக்கும் அந்த கண்களும், பதிலேதும் பேசாமல் மௌனமாக வரச் செய்துவிட்டது. ஆனால் வீட்டிற்கு வந்தவுடன் ஒரேப் பிடியாக பெற்றோர் இருவரும் அவனைக் கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைத்துவிட்டனர். இறுதியான அஸ்திரமான, தன்னால் திருமணத்திற்கு நிற்கும் தன் தங்கையின் வாழ்க்கையும் பாதித்துவிடும் என்பது வேலை செய்ய ஆரம்பிக்க மன பாரத்துடனே கோகிலாவின் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட்டு அமெரிக்கா அழைத்து வந்துவிட்டான்.

இரண்டு நாட்கள் விடுமுறையில் இருந்து திரும்பி வந்த கேத்தரீனாவிற்கு விசயம் தெரிந்தவுடன் அதிர்ச்சியில் பாவம் உறைந்துதான் போய் விட்டாள். தன்னுடைய அடுத்த கேபினில் இருப்பவளை நொடிக்கொரு தரம் கண்டு களித்து இன்பத்தை பரிமாறிக் கொண்டவளை இன்று ஏறெடுத்துப் பார்க்கவே அஞ்சி குற்ற உணர்வில் மாய்ந்து போனான். ஆனால் கேத்தரீனாவோ முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியையும் காட்டாமல் பதுமையாக வந்து போய்க் கொண்டிருந்தவள் சில நாட்களிலேயே வேறு ஒரு பிரிவிற்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வெகு தூரமான டெக்ஸாஸ் மாநிலத்திற்குப் போய்விட்டதாக அவளுடைய நண்பர்கள் மூலமாகத் தெரிந்துகொண்டு நிம்மதி பெருமூச்சு விட்டிருந்தான்.

கோகிலா, தன்னுடைய அன்பான உபசரிப்பு, அதிகமான அக்கறை மற்றும் வெகுளியான போக்கினாலும் வெகு எளிதாகக் கணவனைக் கவர்ந்துவிட்டாள். விரைவிலேயே அவனுடைய குழந்தையைச் சுமக்கும் பாக்கியமும் பெற்றவுடன் சபேசன் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட்டு கோகிலாவை உள்ளங்கையில் வைத்துத் தாங்க ஆரம்பித்துவிட்டான். அவளுக்கு நல்லதொரு கணவனாக நடந்து கொண்டாலும், அவ்வப்போது கேத்தரீனாவின் யார்ட்லி செண்ட் மணமும், மென்மையான அவளுடைய அணைப்பின் சுகமும், நாணமில்லாத, வெளிப்படையான அந்த உறவும், அழுத்தமான முத்தமும் நினைவில் வந்து

அவனை கிறங்கச் செய்து கொண்டிருந்ததும் உண்மைதான். அவளை முழுமையாக மறக்க முடியாமல் தடுமாற்றமும் இருந்து கொண்டுதானிருந்தது.

தாய் நாட்டிற்கு விடுப்பில் சென்றிருந்த அவனுடைய பிராஜக்ட் மேனேஜர் ரிஷவன், அங்கிருந்து கொண்டும் தன் பணியைத் தொடர்ந்து கொண்டிருந்ததால், சபேசன் வெகு சுறுசுறுப்பாக இரவு பகல் பாராது பிராஜெக்டை முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இயங்கிக் கொண்டிருந்தான். ரிஷவனும் இரவு வெகு நேரம் தூக்கம் விழித்து பிரச்சனைகளை சரி செய்ய வேண்டியிருந்தது. ரிஷவனின் வேகத்திற்கு ஈடு கொடுப்பது சபேசனிற்கு சற்று சிரமமானதன் காரணம் இணையத் தொடர்புதான். வீட்டின் இணைப்பு மிகவும் வேகம் குறைவாக இருந்ததால் வேறு என்ன செய்வது என்று யோசிக்கும் வேளையிலேயே ரிஷவன் மிகவும் அவசரப்படுத்தியதால் ஆபீசிலேயே போய் வேலை செய்வது தேவலாம் போலிருந்தது. இந்த கடும் குளிரில் கனமான உடைகளையும், காலணிகளையும் அணிந்து கொண்டு .. காரின் மீது பனிக்கட்டிகள் மலையெனக் குவிந்து கிடக்குமோ? அதையும் சுத்தம் செய்ய வேண்டுமே.. இந்த கடுங்குளிரில் தெருவில் நடமாட்டமும் சுத்தமாக இருக்காது. தெருவே வெறிச்சோடிக் கிடக்கிறது. அமைதியாக தூங்கிக் கொண்டிருக்கும் மனைவி கோகிலாவை எழுப்ப மனம் வரவில்லை. விடிந்ததும் போனில் கூப்பிட்டு சொல்லிக் கொள்ளலாம் என கிளம்பினான். சலனமில்லாமல் நிம்மதியாக உறங்கும் அவளுடைய முகத்தை சற்று நேரம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது. பேரழகி என்று சொல்லும் அளவில் இல்லாவிட்டாலும், அந்த இரவு நேர மெல்லிய ஒளியிலும் பளபளவென மின்னிக் கொண்டிருந்தது அவளுடைய முகம். திரும்பவும் ரிஷவன் அவள் அருகில் இருக்கும் போது போன் செய்தால் அவள் தூக்கமும் கலைந்துவிடும். மசக்கையில் துவண்டு கிடப்பவளை சிரமப்படுத்த வேண்டாமே என்று சத்தமில்லாமல் வீட்டை பூட்டிக்கொண்டு கிளம்பினான்.

ஏனோ இந்தக் குளிர் இன்று மிக பூதாகரமாகத் தெரிந்தது. தெருவெங்கும் இரு மருங்கிலும் மலையென குவிந்து கிடந்த பனிக்கட்டிகள் ரொம்பத்தான் இன்று பயமுறுத்தி தண்டுவடமே சில்லிடச் செய்தன. என்னதான் அமெரிக்காவாக இருந்தாலும், நம்ம ஊரின் சுகம் இங்கே எங்கு இருக்கிறது என்ற எண்ணமும்

வராமல் இல்லை. அம்மா, அப்பாவின் நினைவுகள் பயண நேரத்தை குறைத்துவிட்டது. ரொம்பவும் வெறிச்சோடிக்கிடந்த அலுவலகத்தை நெருங்கியவுடன், வேகம் தன்னால் வந்துவிட்டது. ரிஷவன் காத்திருப்பானே என்று, செக்யூரிட்டி அறையைத் தட்டி அவனை எழுப்பி, தன் அடையாள அட்டையை பஞ்ச் செய்துவிட்டு உள்ளே நுழைந்தான். பகல் நேரத்தில் பரபரப்பாக இயங்கும் அலுவலகத்தின் நிசப்தம் வித்தியாசமாக இருந்தது. இதற்கு முன்பும் ஓரிரு முறை இப்படி வந்து வேலை பார்த்திருக்கிறான் என்றாலும் இன்று என்னவோ மனதில் கிலி பிடித்தது போன்று இருந்தது . ரிஷவனின் போன் கால் அடுத்த நொடி வேலையின் உள்ளே இழுத்துவிட்டது. இணையம் நல்ல வேகமாக இருந்ததால் பிரச்சனைகளை உடனுக்குடன் சரிசெய்ய முடிந்தது. இரவு பத்து மணிக்கு உள்ளே நுழைந்தவன் வேலை மும்முரத்தில் நேரம் போனதே தெரியவில்லை. திடீரென முதுகில் ஒரு சில்லிப்பு. பின்னால் யாரோ நிற்கிறார்களோ.. திரும்பலாமா வேண்டாமா.. தினமும் வந்து பழகிப்போன இந்த இடம் ஏனோ இன்று புதுமையாகத் தெரிந்தது. யாரோ மெலிதாகக் கூப்பிடுவது போல இருந்தது. திரும்பித்தான் பார்க்க வேண்டும். செக்யூரிட்டி நின்றிருந்தார். ‘என்ன’ என்பதுபோல புருவம் உயர்த்திப் பார்த்தான் சபேசன். இன்னும் எவ்வளவு நேரம் வேலை செய்வதாக இருக்கிறான் என்று கேட்டுக் கொண்டிருக்கிறான். இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் என்று சொன்னதால், அவனும் தூங்கிக் கொள்ளலாம் என்று நிம்மதியாக தன் அறைக்குள் சென்று அடைந்துவிட்டான். சுவர் கடியாரத்தை அப்பொழுதுதான் பார்த்தான். மணி 12 அடிக்க 5 நிமிடங்களே இருந்தது.. சே.. இப்பபோய் இந்த கடிகாரத்தை பார்த்திருக்க வேண்டாமோ.. வேலையை சீக்கிரம் முடித்துவிட்டுக் கிளம்ப வேண்டும்.. கோகிலாவின் நினைவு வந்தது. ஒரு வேளை விழித்துக்கொண்டு தேடிக்கொண்டிருப்பாளோ.. பாவம் பக்கத்தில் தான் இல்லாமல் பயந்து விடுவாளோ என்று நினைத்து, எதற்கும் போன் செய்து பார்க்கலாமா.. தூக்கத்தைக் கலைக்க வேண்டாமே என்று தோன்றினாலும், மனசு கேட்காமல் போனை எடுத்து சுழற்ற ஆரம்பித்தான். போன் வேலை செய்வதாகத் தெரியவில்லை. ஏதோ நீண்ட ஒரு சத்தம் வித்தியாசமாக வந்தது. அலுவலக தொலைபேசியிலிருந்து கூப்பிட முயன்ற போதும் ஆச்சரியமாக அதே சத்தம் வந்தது. கோகிலாவே கட்டாயம்

கூப்பிடுவாள் என்று நினைத்த போது, ஒரு வேளை அவளுக்கும் இணைப்பு கிடைக்கவில்லையோ என்ற சந்தேகம் வந்ததால் அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்கவில்லை அவனுக்கு. உடனே கிளம்ப வேண்டும் என்று தோன்றினாலும், இன்னும் சில வேலைகள் பாக்கியிருப்பதை முடித்துவிட்டு ரிஷவனிடம் சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தான். ஆச்சரியமாக ரிஷவனின் போன் மட்டும் தெளிவாகக் கேட்டது!

அற்புதமான ஒரு செண்ட் மணம். யார்ட்லி செண்ட் மணம் போலவே இருக்கிறதே ... தன்னைச் சுற்றி ஒரு வளையமாக சுற்றிக் கொண்டிருப்பது போலத் தெரிந்த ஏதோ ஒன்று தன் உடல் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது போல ஒரு உணர்வு.. ஒரு சுகமான அனுபவமாகவே இருந்தது அது. சற்று தூரத்தில் பின்புறம் தெரிய யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அட இந்த அறையில் வேறு யாரோ ஒருவரும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறதே. இவ்வளவு நேரம் கவனிக்காமல் விட்டுவிட்டோமே.. செக்யூரிட்டியும் ஏதும் சொல்லவில்லையே.. குறுக்கே இருந்த கேபின்கள் காட்சியை சற்றே மறைத்திருந்தது. சரி அருகே சென்று பார்ப்போம். பேச்சுத் துணைக்காவது ஆள் கிடைத்ததே என்று அருகே செல்ல ஆரம்பித்தான். நெருங்க, நெருங்க அது ஒரு பெண் என்பது புரிந்தது. ரொம்ப தூரம் போய்க் கொண்டிருப்பது போலத் தெரிகிறதே ....

'ஹாய்... ஆர் யூ வொர்க்கிங் ஹியர்' தன் வாயிலிருந்து சத்தம் வந்தது ஏனோ காதில் விழவில்லையே.. ஒரு வேளை பேச்சே வரவில்லையோ? அவள் திரும்பி பதில் சொல்லக் காத்திருக்கும் வேளையில் அந்த வாடை மீண்டும் நாசியை மட்டுமல்லாமல் உடலின் உள்ளே ஊடுருவிச் சென்று ஒரு கிறக்கத்தை ஏற்படுத்தியது. திடீரென்று கேத்தரீனாவுடன் கழித்த அந்த இன்பமான பொழுதுகள் நினைவிற்கு வந்தது.. என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. தன் உடல் தன் வசம் இல்லையென்பது மட்டும் புரிகிறது. எங்கோ அப்படியே மிதப்பது போல ஒரு சுகம்.. குளிருக்கு இதமான அணைப்பாக இருந்தது.. மனம் கட்டுப்பாட்டில் இல்லை என்பது தெரிந்தாலும் அதைத் தடுக்கத் தோன்றவில்லை.. இருக்கட்டுமே.. என்ன வேண்டுமானாலும் ஆகட்டுமே.. திடீரென்று தூக்கி வீசப்பட்டது போல ஒரு உணர்வு..

உடம்பிலுள்ள இரத்தம் மொத்தம் உறிஞ்சப்பட்டுவிட்டது போல ஒரு பலகீனம்.. எழுந்திருக்க முடியவில்லை.. யாரோ கை கொடுத்து தூக்கிவிடுகிறார்களோ.. யார் அது.. அட இந்த பஞ்சுப் பொதி போன்ற ஸ்பரிசம்.. கேத்தரீனாவா.. ஆகா திரும்பவும் அந்த சுகமா...

'ஹாய்.. கேத்தீ.. ஹவ் ஆர் யூ.. ஹவ் கம் யூ ஹியர்? ஐயாம் சாரி ஸ்வீட் ஹார்ட்..' ஆனால் அவள் ஒன்றுமே பேசாமல் திரும்பிக் கொண்டாள். ரொம்பவும் கோபமாக இருப்பாளோ.. இவர்களுக்கு இது ஒன்றும் பெரிய விசயமில்லையே. எந்த நேரமும் பிரிவை எதிர்பார்த்தே வாழுபவர்களாயிற்றே.. ஆனாலும் நம் இந்தியக் கலாச்சாரத்தில் ஊறிக்கிடப்பவளான இவள் கொஞ்சம் வித்தியாசப்படுவாளோ. இனி என்ன செய்ய முடியும்.. மன்னித்துவிட்டாள் போல இருக்கே. ஆனாலும் இப்படியே இந்த நட்பை தொடருவது சரியா வருமா.. கோகிலாவுக்கு செய்யற துரோகமில்லையா அது..? இன்னும் முகத்தைக்கூட சரியாகாக் காட்டாமல்தானே இருக்கிறாள் கேத்தி. முழுசா கோபம் இன்னும் தீரலை போல இருக்கே.. சரி மெல்ல மெல்ல சமாதானம் ஆவட்டும். இல்லாட்டியும் சமாதானம் பண்ணிப்போடலாமே.. கேத்தியின் அண்மையில் எங்கோ புதுமையான ஒரு உலகிற்கு பயணிப்பது போல ஒரு மயக்கம் எப்போதுமே உணருவான்.. இன்று அது ரொம்பவும் அதிகமாகியிருந்தது.

ரிஷவன் சபேசனின் பதிலுக்காகக் காத்திருந்தான். ரொம்ப நேரமாக அவனிடமிருந்து பதில் இல்லையே என்று தொலைபேசியில் அழைக்க முயன்றான். பச்சை விளக்கு அவனுடைய பெயரில் மினுக்கிக் கொண்டிருப்பது அவன் இணைய உலகில் இணைந்தே இருப்பதை உறுதிப்படுத்தியது. என்ன செய்கிறான் இவன்.. தூங்கிவிட்டிருப்பானோ.. இப்படி யோசித்துக் கொண்டே விடாமல் மணியடித்துக் கொண்டிருந்தான்.

கேத்தரீனாவின் பின்னால் மந்திரித்துவிட்டது போல அப்படியே செல்பவனைப் பார்த்த செக்யூரிட்டி ஆச்சரியத்தில், இந்த அம்மா இந்த நேரத்தில் இங்கே எப்படி வந்தது.. டெக்ஸாஸ் பிராஞ்சில் இல்ல இருக்கிறது, அதுவும் என்னை மீறி ஒன்றும் சொல்லாமல் கூட எப்படி உள்ளே போயிருக்க முடியும் என்று

குழப்பத்துடனே பார்த்துக் கொண்டிருந்தவனால் உடனே பேச முடியாமல் கொஞ்சம் தாமதமாக , 'ஹே..... எங்கே போறீங்க.. வேலை முடிந்துவிட்டதா.. ரெஜிஸ்டர்ல கையெழுத்து போட்டுட்டுப் போங்க' என்று அத்தனை சத்தமாகக் கேட்டதுகூட காதில் விழாமல் அவள் பின்னாலேயே சென்று கொண்டிருந்தான். இருவரும் சபேசனின் காரில் ஏறும் வரை பார்த்துக் கொண்டிருந்தவன் ரெஜிஸ்டரில் அதனை அப்படியே பதிவிட ஆரம்பித்தான்.

பனியில் முற்றிலும் உறைந்து கிடக்கும் கனெக்டிக்கட்டின் பிரதான சாலை. சில மணி நேரங்கள் முன்பு இராட்சச இயந்திரம் மூலம் அதனை வழித்தெடுத்து சாலையோரத்தில் குன்றாக குவித்து வைத்திருந்தார்கள். தரையில் மீண்டும் பனி படர்ந்து கிடந்தது. அப்போதுதான் கேத்தியின் முகத்தைப் பார்க்க முடிந்தது.. பளபளப்பு.. தெளிவாக முகம் தெரியாத அளவிற்கு கண்ணைக் கூசுகிற பளபளப்பு. இதுவரை கண்டிராத புதுமையாக இருந்தது என்றாலும் ஆராய்ச்சி செய்து காலவிரயம் செய்யத் தோன்றவில்லை சபேசனிற்கு. எந்த முயற்சியும் இல்லாமல் கார் தன்னிச்சையாக கட்டுப்பாடற்ற வேகத்தில், யாருமில்லாத சாலையில் சருக்கிக் கொண்டு போனாலும் துளியும் அச்சமே இல்லை அவனுக்கு. சருக்கிக் கொண்டே போன வேகத்தில் வண்டியே நெட்டுக்குத்தலாகப் போவதுகூட இரசிக்க முடிந்ததோ...

விடியலில் விழித்து, கணவன் அருகில் இல்லாமல், போனில் தொடர்பு கொள்ள முயன்ற போது பதிலில்லாமல் அடித்து ஓய்ந்து போனதால் அச்சம் கொண்டு, தந்தைக்குப் போன் செய்து கதறியிருக்கிறாள் கோகிலா. செய்வதறியாது திகைத்தவர், மொழி தெரியாத மகளின் இக்கட்டான இந்த சூழ்நிலையைச் சமாளிக்கும் வழி தெரியாமல் குழப்பத்தில் இருந்தவர், சட்டென்று தன் தூரத்து உறவினரின் மகன் அமெரிக்காவில் இருப்பது நினைவு வந்ததால் கொஞ்சம் நிம்மதி வந்தது. உடனடியாக அவரைத் தொடர்பு கொண்டு, அவர் மூலம் அவருடைய மகனின் தொடர்பு எண்ணை வாங்கி, செய்தியைச் சொல்லி விசாரிக்கச் சொன்னார். நல்ல வேளையாக அலுவலகம் கிளம்பிப் போகாமல் இருந்ததால் உடனே பரபரவென காரியத்தில் இறங்கினார் அவர். போலீசுக்குத் தகவல் கொடுத்ததால், அடுத்த நொடி சபேசனின் அலுவலகத்தில் செக்யூரிட்டியைச் சுற்றி போலீசாரின் முற்றுகை. அவன்

கொடுத்த தகவல்களைக் கொண்டு தேடல் ஆரம்பித்தது. அலுவலகத்தின் உள்ளே சபேசனின் இருக்கையில் அவன் வந்து சென்றதன் அடையாளமாக அவனுடைய கணினி விழித்துக் கொண்டிருந்ததோடு, சென்ற முறை தாயகம் சென்றிருந்தபோது அவன் அம்மா அவன் கையில் கட்டிவிட்டிருந்த அந்த சிகப்பு வண்ண காசிக் கயிறு அறுந்து விழுந்து கிடந்தது. அதைத்தவிர கேமராவிலும் வேறு எதுவும் பதிவாகவில்லை.. கேத்தரீனா வந்து சென்றதற்கான அடையாளம் ஏதும் இல்லாதலால், செக்யூரிட்டி சொன்னதில் சந்தேகம் வலுத்தது. காவல் துறையினரின் படு வேகமான நடவடிக்கைகளால், அடுத்தடுத்த சோதனைகளில், சபேசனின் கார் பனிச் சறுக்கலில் சிக்கி, ஒரு சிறிய பள்ளத்தில் உருண்டு கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பெரிதாக அடி எதுவும் படாவிட்டாலும், நெற்றிப்பொட்டில் ஒரு சிறு காயம் இருந்தது. உயிரற்ற சடலமாக அவன் உடல் மீட்கப்பட்டது. நான்கு நாட்கள் முன்பு கேத்தரீனா என்ற இளம் பெண்ணின் கார் விபத்துக்குள்ளாகி, அவள் உயிர்விட்ட அதே இடத்தில் இன்று சபேசனின் கார் விபத்து! எல்லாம் முடிந்து போயிருந்தது!